தீர்த்தமெல் லவற்றுங் துங்க பத்திரை சிறந்த தாங்குக்
கார்த்தவே லிறைவன் முன்னர்க் கவுசிக முனிவனுக்குச்
சீரத்தஞ் ஞானங்க ளெல்லாந் தேசிக மூர்த்தி யாகி
வார்த்தன னென்று நல்ல வாகமா புராணங் கூறும்.

திருக்கோலிலிப் புராணம்.

பாம்பிய தாங்கத் துங்க பத்திரை வடக்க தாக
சேம்பிய ஞானப் பூக்கட் கவுசிக னென்னு நீர்மை
யருந்தவற் குண்மை ஞான வளிப்பரும் போத மீந்தி
பொருந்துமா சாரியப்பேர் கொண்டனன் புகழ்வே லண்ணல்.

ஞானதேசிக மூர்த்தியோங்கம்.

பதினேட்டாவது.

அத்துவா மூர்த்தி.

அத்துவா வென்னுஞ் சொல்லுக்குப் பொருள் மார்க்கம், அல்லது வழி என்பதாம். வழியாவது விஞ்ஞானகலர் பிரளயகலர் சகலா வென்னு மூவகை யான்மாக்கட்கு முள்ள மலபந்தத்தை யறுத்து சிவஞானத்தை யுண்டாக்கிச் சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களோப் பிரகாசிப் பித்து சனனத்திற் புகாதபடி முத்தியிற் கூட்டுவதற்கு வகுத்த வழியாம். அவ்வழிதான் ஆறாக விருத்தலாற் கட்டி

தவா (வட்டத்துவா) எனக் கூறுவர் சிவாகமங்கள். அத்துவ சுத்தி யிலேர்த முதற்படியில் நிற்பவோர், கோவின்றி யடக்க வுண்ணிய குருடனைப் போலவும், மாக்தல் மின்றி மகோதரியைக் கட்டக் விரும்பு மதியீனர் போலவும் பெருந்துன்புறுவ ரன்றி யோர் எனு முதிரிப் புகார். நுகர்தற்கு நீக்கி யெவர்க்கும் வேண்டப்பட்ட தன. அவத்துவா மர்சோதனுவா, பதாத்துவா, வன்னத்துவா, புவனத்துவா, மந்திரத்துவா, கலாத்துவா என அறுவகைப் படும். இவை சொல்லளவும் பொருள் வடிவுமாக விளங்கும். இவை

தன்மை வேறுபாட்டினை நித்தம், சுத்தாசுத்தம் (மிஸ்ரம்) அசுத்தம் என வகுக்கப்படும். சுத்த அத்துவாவிலுக்கு வித்தி யேஸ்வர சதாசிவரைப் பெற்றல் வேண்டும். சுத்தா சுத்த அத்துவா உறுதற் அசுத்த மாயையில் முற்றல்வேண்டும். அசுத்த அத்துவாவி னுக்குப் பிரகிருதி மாயையில் முதற்றல்வேண்டும். இவ்வகை அறிந்து வாக்குரும் மூலனைப் பெற்ற பயனேடாதும். எவ்வுலகெனிற் சுத்தம்: சுத்தி மர்சோதனுவா, சுத்த பதாத்துவா, சுத்த வன்னத் துவா, சுத்த புவனத்துவா, சுத்த தத்துவாத்துவா, சுத்த கலாத் துவா, சுத்தாசுத்த மந்திரத்துவா, சுத்தாசுத்த பதாத்துவா, சுத்தா சுத்த வன்னத்துவா, சுத்தாசுத்த புவனத்துவா, சுத்தாசுத்த தத்து வாத்துவா, சுத்தாசுத்த கலாத்துவா, அசுத்த மந்திரத்துவா, அசு த்த பதாத்துவா, அசுத்த வன்னத்துவா, அசுத்த புவனத்துவா, அசுத்த தத்துவாத்துவா, அசுத்த கலாத்துவா என்னும் பதினைட் டெனும். இப்பதினைட்டாதலும் இருப்பவர் தாமே என்பதைக் கத் தக்கடலின் தமது நிழு நிழுநகளாலும், பன்னருங்கரங்களா லும் விளக்க வருளுவின்றார். எனவே மூன அத்துவாக்களுக் தம க்கு வேறுபாடுபட்டு நிற்பதாகுகலாலும் விளக்கிடுதல் காண்க.

இதில் சுத்தசைவசித்தாந்தமென்னும் தலைப்பில் சுத்த அத்துவாவில் புவனங்கள் பதினெட்டு மட்டுமே இருப்பதாகக் கூறியது, இதனை மறுத்தெழுதியிருக்கிறது. இவ்விஷயம் முன்னரும் அந்தவாய் பேசியிருக்கிறோம்.

இவ்வத்துவாக்கள் ஆறும் ஒன்றி லொன்று வியாபித்திருக்கும். மந்திரம் அக்காங்களின் கூட்டமாகிய பதத்திலே வியாபித்திருக்கும். அப்பதம் வன்னத்திலே வியாபித்திருக்கும். வன்னம் புவனத்தின்கண் வியாபித்து விளங்கும். புவனந் தத்துவத்திலே வியாபித்திருக்கும். தத்துவங் கலைகளினும், கலைகள் தனைக் காணுமாகிய சத்தியினிடத்தும் வியாபித்து விளங்கும். அச்சத்திதான் முக்கடவுளாகிய ஒரு முதற்பொருளினிடத்து அடங்கும். அவ்வண்ணம் சத்தியை (வேற்படையைத்) தரித்து இருத்தலானும், சத்தன், ஞான சத்தியான்மா, சத்திமான் என்னும் பெயர்களானுங்கு தெரியப்படும். இங்ஙனம் வருணபத்தியும், இரௌரவ ஆகமமுங் கூறுவது காண்க.

இங்ஙனம் ஒன்றிலொன்று வியாபித்தலால் மந்திரங்கள் வியாப்பியம் பதங்கள் வியாபகம்; பதங்கள் வியாப்பியம் வன்னங்கள் வியாபகம்; வன்னங்கள் வியாப்பியம் புவனங்கள் வியாபகம்; புவனங்கள் வியாப்பியம் தத்துவங்கள் வியாபகம்; தத்துவங்கள் வியாப்பியம் கலைகள் வியாபகம்; கலைகள் வியாப்பியம் சத்தி வியாபகம்; சத்திகள் வியாப்பியம் சுப்பிரமணியக் கடவுள் வியாபகம் என்பது உண்மை நூற்றுணிபு. முக்கடவுளாகிய சுப்பிரமணியப் பெருமானேசர்வவியாபகராகலால் ஆறத்துவாக்களானும் ஏற்பட்ட கன்மங்களைப் பரிப்பித்துக் கழிப்பிப்பவரும், பரியாத வன்னம் ஞானவதி முதலாய தீக்கைகளானே நீக்கியருள்வோரும் அவரே என்க.

க. மந்திராத்துவா என்பது, பதினொரு மந்திரங்களை யாகும்.
உ. பதாத்துவா என்பது, எண்பத்தொரு பதங்களை யாகும்.
ங. வன்னத்துவா என்பது, ஐம்பத்தொரு எழுத்துக்களை யாகும்.
ச. புவனத்துவா என்பது, இருநூற் றிருபத்தாறு புவனங்களை யாகும்.

சப்பிரமணிய பிராக்கிரமம்.

தத்துவித்தியை என்பது, முப்பத்தாறு தத்துவங்களை யென்க. தத்துவா எனபது கலாதத்துவா முதலிய ஐங்கலைகளை யென்க. தெரிசனவியல மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம் என்னும் இவ்வைவகைத் தொகுத்துவா என்றும் ஐந்து கலைகளிலும் உருவகிவிளாகுகுவதை காட்டுதும்.

சத்துவித்தி கலையில்.

சதாசிவமந்திரம், திருநயம் என்னும் மந்திரம்.

சதாசிவமோகம், என்னும் பதமுதலாக,

வாசுதேவர், என்னும் பதம் இறுதியாகவுள்ள பதங்கள்மே

சத்து என்னும் வன்னம்-உ.

பீசாண்டத்துட்காலாக்கினி புவனமுதல் உருத்திர

புவனமீறாகவுள்ள புவனம்

	கo
	கo.
	கo.
	கo.
	கo.
	கo.
	கo.
	கo.
	கo.
	கo.

சத்தக் கூடிய புவனம் கoஉ.

சத்துவித்தி என்னும் பெயருள்ள தத்துவம் க.

சதாசிவர் முதல் சத்தி ஈறாகவுள்ள மெண்க.

சத்துவித்தி கலையுடைய தத்துவப்படியும், தன்னுட் சேர்ந்த புவனாதிகளும் சகலரையும் நிலைத்த பிணைமையால் சின்மை என்றபெயர். இதனைத் தேவ தேவதை முகம் சொல்க.

சித்திய யோகியே என்னும் பதமுதல், வியோம வியோமி
யே என்னும் பதங்கள் இறுதியாக வுள்ள பதங்கள் ஙக.
ம, வ, க என்னும் எழுத்துக்கள் ஙஉ.
சுத்த வித்தியா தத்துவத்தில் வாமாதி மனோன்மனி யீறான
புவனங்கள். ஙஊ.
ஈசுரதத்துவத்தில் அநந்தேசுராதி சிகண்டியீறான புவனங்கள் அ.
சாதாக்கியதத்துவத்திற் சாதாக்கியபுவனம் க, ஆகக்கூடிய புவ
னம் கஅ.
சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னுந் தத்துவங்கள் உ.
என்னும் இவைகள் அடங்கு மென்க.

ரு. ‡ சாந்தியதீத கலையிலே,

ஈசானம், அத்திரம், ¶ மூலம் என்னும் மந்திரங்கள் உ.
ஓம் என்னும் பதம் க.
அகார முதல் கஃ வீறுதியாக வுள்ள எழுத்துக்கள் கசு.
சுத்திதத்துவத்தில் உள்ள கிரியா சக்தி, பிரதிட்டை,
வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் புவனங்கள் ரு.
சிவதத்துவத் துள்ள இச்சிகை, தீபிகை, உரோசினிகை,
மோசினிகை, ஊர்த்துவ காமினி, வியாபிநி, வியோம
ரூபினி, அநந்தை, அநாசிருதை என்னும் புவனங்கள்
கடு. ஆகக்கூடியபுவனம் கரு.
சுத்தி தத்துவம், சிவதத்துவம் என்னுந் தத்துவங்கள் உ.
என்னும் இவைகள் அடங்கு மென்க.

---

‡ சாந்திகரும் மேலான பரம ஞானத்தை யுண்டாக்குவதால் சாந்தியதீதை என்ற பெயர். இதற்குத் தேவதை சதாசிவமூர்த்தி. இவ்வகற்று கலைகளின் வடிவு, நிறம், குணம், அவத்தை, காட்டி, வாயு என்பவற்றை மதங்க ஆகமம், சோமசம்பு பத்ததி, குரு பத்ததி, காலோத்தராதிகளிற் காண்க.

¶ இவ் ஆகமங்களிலே சாந்தியதீத கலையிலே குறித்த மூன்று மந்திரங்களுடன் சேதநிராமந்திரம் என்னும் ஒன்றும் சேர்த்து சான்சென்று கூறலால் ஐக்கலைக்கும் மந்திரங்கள் பன்னிரண்டாதல் காண்க. இதுபற்றியே திருமுறைத் திருவருட்பாக்களும் பன்னிரண்டாயின என்க.

தெய்வயானையம்மையாரும் மந்திரை, பதருபிணி, வர்ணை, புவனை, தத்வரூபை, கலாரூபை என்ப பெயர் பொருந்துவர்.

இவ்வாறு வடிவங் கூறப்படுவதன்றி யின்னு மோர் வகையாகவும் வடிவு கூறப் பட்டுள்ளது. எங்ஙன மெனில், சுப்பிரமணியப் பெருமானுக்கு இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம் முதலிய அங்கங்களாக முறையே புவனம், வன்னம், மந்திரம், பதம், தத்துவம், கலை என்னு மிவைகளாகின்றன. எனவே சுப்பிரமணியக் கடவுளார்க்கு முப்பத் தெட்டுக் கலைகள் திருக்காம், திருவடி முதலிய திருவுறுப்புக்களாகின்றன. சாந்தியதீதகலை திருத்தலையாகவும், சாந்திகலை திருமுகமாகவும், வித்தியாகலை திருமார்பாகவும், பிரதிட்டாகலை குய்ய மாகவும், சிவிர்த்திகலை முழங்காள், கணைக்கால் ஆகவும், புவனத்துவா திருமேனியாகவும், வர்ணத்துவா தோலாகவும், மந்திர அத்துவா உதிர மாகவும், பத அத்துவா மாமிசமாகவும், தத்துவ அத்துவா எலும்பு மச்சை, சுக்கில முதலிய காதிக்களாகவுஞ் சொல்லப்படும். இவை பிற்றை வடிவமாக் கோடலின் சுப்பிரமணியப் பெருமானுக்கு சாந்தியதீதன், சாந்தேசன், வித்தியேசன், பிரதிட்டேசன், சிவிர்த்தீசன் எனத் துதிக்கப் படுவார். தெய்வயானை யம்மையாருஞ் சாந்தியதீதை, சாந்தை, வித்தியை, பிரதிட்டை, சிவிர்த்தை எனப் போற்றப்படுவா ரென்க.

இங்ஙன முள்ள திருவடிவங்களானே சுத்திபண்ணிப் பேரின்பத்தையருளும் புதுச்சந்ததிக் கந்த சுவாமியாம் பெம்மான். அத்துவ சுத்தி யென்பது என்னெனில், ஆறத்துவாக்களினும் உள்ள சஞ்சித கர்மங்களெல்லாம் நசிப்பித்தல். கன்மங்களை நசிக்கவே மாயை அகலும். மாயை அகலவே ஆணவ மலத் தடையற்று ஆன்மாக்களின் சுவ ரூப ஞானம் பிரகாசிக்கும். அது பிரகாசித்தலால் அத்துவித ஞானம் வளர்ந்து இன்ப முறும். இவ்வாறே அத்துவாக்களைத் தமக்கு வடிவாகக் கொண்டு ஆறுமுக மூர்த்தியாய், ஆன்மாக்

கலை முத்தியிற் சேர்த்தலால் அத்துவா மூர்த்தி எனக் கந்தக் கடவுள் தோத்திரிக்கப் பெற்றனர்.

பௌஷ்கராகமம்.

நமோ மெஹரொ ராண மஹகிர ஜவ தத்நம் ।
உவாஹா முகொவிடம் வன்மெஷெணமஹ யெ ।
நாத மகிர வாஹம்விஜ் ரிவஹாதி யோ ஹ ஹம் ।
ஹாயா வி நாதொ ரவாஹா தஜ்ரோஹகூ கூவ்வெ தஜஹெகீ ।

நமாயா நேச்வரோ நாணூர்த சக்திச்சுத்தவர்த்தமாம் ।
உபாதாந மதோபிக்தம் பரிசேஷேண லப்பியதே ।
நாத்ரசக்திருபாதஞ்சவித்ரூபத்வாத்யதாகுகம் ।
மாயாவிநாத்ரோபாதாநம்மோஹகத்வாகஸ்வதேஜஸேதி ।

சுவாயம்புவ ஆகமம்.

வதிவ ஹொவி ஹ கெவி உ விவிஷ்ணோ
யொய ஹா । தயொவ தெஹ்ண வ்ஹ நய
ம்வ ர வ்ஹ ஹ । ஜீகூகஹி ஹ்கு தெணொகூ
யாவரிண தாயகம் । வொழ்வாவரிண திவஹாதெ
ஹா திஹவவதி நீ ॥

வ வ்ஹ நாமரவஹ வ நர கஹிம் வ த ர்ஹிவ்வயா ।
வ ர்ஹ கூ தெஹிணவ தெயாவளவிவாவாழ்ஹி ம்வ தி ।
கதிரஹ கிராயொஹ ர்ஹ தெஹிராஜவிவ ।

கீரண ஆகமம்.

[illegible]

மதட ஆகமம்.

[illegible]

அசிதாகமம்.

[illegible]

என்றற் றொடக்கத்த சுலோகங்களாலும் பெறுதும்.

இப்பிரமாணங்களேயன்றி, "சாந்தியா தீதகலே தன்னின் மேற்றோன்றுவ தொன்றைக் காண்கலா தியற்றுறு" எனவு

ரூடஞ் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தானும், "அத்துவாவது, வா மெம்மிறை முடிதான் கலைகளேத்தாகுஞ் சாந்திமுத லானைநான் காமாம்" என வருஞ்சிவஞான தீபச் செய்யுளானு முணர்க.

அத்துவா மூர்த்தயே நமஃ

பத்தொன்பதாவது,

* வியாக்கிராசுர சங்கார மூர்த்தி.

சுவேத வாராக கற்பத்திலே பிரம தேவருக்கும் விட்டுணுவுக்குஞ் சண்டை கோரிட்டது. அதுகாலை மலரோன் திருமாலே நோக்கி, நந்த கோபன் மகனே! நானே பரப்பிரமம்; என்னை வணங்குதி யென்றார். மாயவன் அது கேட்டு மைந்தனே! நீ என் உந்திக் கமலத்தினின்றும் பிறந்தவன் அன்றே? ஆகலான் நீ மகனுகின் றாய். நானுனக்குத் தந்தை யாகின்றேன். நின்னாலுஞ்சகல சராசரப் பொருள்களாலும் வணங்கப்படுதற் குரியோன் யானேயென்றார். பிரம தேவர் கோபித்து; வெண்ணெயுண்ட கள்வ! நீயெனக்குப் புத்திரன் மருகன், பௌத்திரன், பிரபௌத்திரன் என்னும் உரிமையுடையை. உனது பத்துப் பிறவி யல்லாத † பதினேந்து

---

* சிவ புராணங்களிலே வியாக்கிராசுரனைச் சங்கரித்தது சிவபெருமானென்றே கூறப்பட்டுளது. சிவனேசுரன், சுரனே சிவன் என்னும் ஒற்றுமை நயம் பற்றிக் கூறத் தவறு செய்தவர்கள் சிவன் செய்ததாகக் கூறி விட்டனர். அங்ஙனமே சுப்பிரமணியப்பெருமானுற் செய்யப்பட்டதாக வதம், சூர்பதுமன் முதலியன வுமறைவு முரசத்தனை போர, சாரங்கதேவன் செய்ததாகிய சிவ கொய்வு, வீரபத்திரரியற்றி யருளிய பரசுராம முதலியனவுஞ் சிவபெருமானே செய்தா ரென்று சிவலிங்கம் தூக்கப்படுவதை யுணர்க.

† பதினேந்து பிறப்புக்களாவன—கனதன், கனதனன், கனத்தனன், கனகுமரன், சுகாசாயனன், கபிலன், இடபன், சாதன, அச்சீவன, தத்தாத்திரேயன, மோனி, சக்கன் வியாதன், தனஞ்சயர், பௌத்தன் என்பனவாம். இவ்வண்ணம் நிகழ்த்தை கூறிற்று.

பிறவிகளுட் சன்கன், சனாதனன், சனந்தனன், சனற் குமாரன் என்னும் நான்கு முனிவராக என்னிடம் பிறந்தனை. நாரத னுகவுந் தோன்றினை. இவற்றுனே எனக்குப் புத்திரன் ஆனாய். நான் பிதா ஆனேன். என்னற் படைக்கப்பட்ட பூமிதேவியாகிய மகளை நினக்கு மனைவியாகத் தந்தேன். அதனுல் நீ மருகன்; நான் மாமன் என்று அறிவாயாக. எனது மகளுகிய பிருகு முனிவனுக்கு மகன் இலக் குமி யன்றே? அவளைத் தானே நின் மனையாக் கொண்டாய். அது வன்றி என் குமாரனுகிய காசிப முனியின் மனைவியாம் அதிதி வயிற்றினிடத்து வாமனன் ஆகப் பிறந்தாய். இவற்றுனே நீ பௌத் திரனும் நான் மூதாதையும் ஆகின்றேன். விரோசன் தத்தாத் திரோ பன், கபிலன், விடபன் என்று மிலாகப் பிறந்தது பற்றிப் பிர பௌத்திரனு மாக்க் காணப்படுகின்றுய். இன்னும் நின்னைப் பலபடத் துப் படைத்து என் கைகளும் மனமுஞ் சலித்தன.

நினது உற்பத்தியினின்றும் வெளிப்பட்டனமையால் நீ பரப்பிரம மாக வணங்கப் படுதற் குரியையோ? அங்ஙனமாயின் நாகிங்க மாகத் தானினின்றும் வெளிப்பட்டனை. அதுபற்றித் தானைத் தந்தை யென்பதாலும், அதனைப் பரப்பிரம மாக வணங்குவதாலுந் தகுதி யாமோ? அன்றியும் அதிதி வயிற்றில் வாமன ருகவும், இரோணுகை வயிற்றிற் பாக ராம ருகவும், உரோகினி வயிற்றிற் பலராம ருகை வும், கௌசலை வயிற்றிற் தசரத ராமருகவும், தேவகி வயிற்றிற் தசரத ராமருகவும், தேவகி வயிற்றிற் கண்ண ருகவும் பிறந்தாய். சோம யசசு என்னும் அந்தணனையும், அவன் மனைவியையும் இனிப் படைப்பேன். அவர் வயிற்றில் உன்னையுங் குழைவாகப் படைக்க சித்தமா யுள்ளேன். அவர்கள் யாவரும் நினக்குத் தாயுந் தந்தையரு மாகவால் அன்னவ ரெல்லாம் பரப்பிரம மாவரோ? ஆகார்! ஆகார்!! அதுபோல நீ தந்தை என்பதாலும், நின்னை வணங்க வேண்டு மென்பதாலும் பொய்யாம் என்றும். இவற்றை

படம் 2.2.2 இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போர்

யெல்லாங் கேட்ட திருமால் வடவைபோற் கொந்தித்தெழுந்து கோர யுத்தஞ் செய்தார். பிரம தேவரும் இவைக்காது அவருடன் பொருதார். திருமால் மிகவுங் கோபித்து "இவனை யின்னே யழிக்கின்றும்" என்று எழுந்து, வியாக்கிர அசுரன் என்பானை வேள்வியக்கினியி னின்றும் உண்டாக்கித் தமது தவ பலங்களை யெல்லாங் கொடுத்து விடுத்தார். பிரமதேவரும் அங்ஙனே யோர் அரிசாதனஞ் செய்து மகிடாசுரன் என்பானை யுண்டாக்கி விடுத்தனர். அவர்கள் இருவரும் நெடுகாட் பொருது, பின்னர் ஒருவரோ டொருவர் இணங்கிச் சிகண்டி ருத்திர மூர்த்தியை நினைந்து பன்னெடுங் காலந் தவம் புரிந்தார்கள். உருத்திர பகவான் மூன்றாவது வரங்களை யெல்லாங் கொடுத்தருளினர்.

அதன் பின் புலிமுக முடையனும், யமனும் நடுங்கத்தக்க பயங்கரமான தோற்ற முடையனும், வரபலங்களான மேற்படி வன், மகிடாசுரனை மந்திரியாக வைத்துத் திரிலோகங்களையுந் தனதடிப்படுத்தி அரசாள்வா னுயினன். தேவர், முனிவர், இந்திரன், பிரமன், விட்ணு முதலிவரை யெல்லாம் புறமுதுகிட வோடப் பாணங்களால் அடித்துத் துரத்தி, அவர் பதவிகளை யெல்லாந் தானாகவே யாசு செய்தான். பிரம தேவரையும் விட்டுணுவையுந் தேவர்களுடன், முனிவர்கள் முதலாயி னோரெல்லா மிகழ்ந்தனர். அவர்களும் நாமே நமக்கு வினை தேடிமை என நொந்தனர். அன்னவர் பிரமுகருஞ் செய்யுந் துணைகளை யெல்லாஞ் சிவபெருமானிடத்தில் விண்ணப்ப செயலாம், வருதிர் என்று திருமால் அவர்களை யெல்லாம் அழைத்துச் சென்றார். திருக்கயிலையை யடைந்து, திருவாயில் தேவர் விடை பெற்றுப் பாலனுஞ் சந்நிதியிற் சென்று யாவருமாக முறை படியற்ற மரம்போல் வீழ்ந்து வீழ்ந்து வணங்கி யெழுந்து

சதாசிவ ஸர்வ வித்யாதீச்வரஸ்ஸர்வபூதாதாரம்
ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணேதிபதிர் ப்ரஹ்மா
சிவோமே அஸ்து சதாசிவோம்.

ஹரிஓமிரண யுவாஹமவஹிரண யுவகயெம்விகர
வ கியஉதாவகயெநமோநமஃ ।

என்னுக் தைத்திரீய வேத ஆருண சாகா மந்திரங்களைச் சொல்லித் துதித்தார்கள். சிவபெருமான் திருவருள் சுரந்து கூறி யருளுவார். அகங்காரம் பெருந்துன்ப மயம். நீவிரிருவரும் அகங்காரங் கொண்டதனன்றே அவ்வசுரரிருவரும் தோன்றினர். துங்க மகங்காரம் நமக்கன்றி நம்மைச் சார்ந்த மற்றை யோர்க்கும் பெருந்துன்பை விளைத்தது. வேல, மாலே! உயிர்களைக் காக்கின்ற பட்டத்தையுடைய நீ, இங்ஙனஞ்செய்த தென்னே? என்று உரைத்துப் பரமனுர் துர்க்கா தேவியையுஞ் சுப்பிரமணியக் கடவுளையும் அனுப்பினர். துர்க்கை மகிடனைச் சங்காரிக்கவந்தாள்.

அதனைக் கண்ட சுப்பிரமணியப் பெருமானர் அசுர சேனைகளெல்லாம் அதஞ்செய்தனர். மகிடன், வியாகரன் என்னும் இருவரும் பெருங் கோபமுற்று, இத்தேவர்களை வண்மை விலிருவரும் போர் புரிய வந்தனர். ஆகவிற் பிரமன் விட்டுணு முதலிய தேவர்களெல்லாம் இப்பொழுதே விழுங்கி யழிப்பே மென்று பல மாயா வடிவங்களைக் கொண்டு தேவர்களை வளைத்தார்கள். தேவர்கள் கருடனைக் கண்ட பாம்பு போல மிக்க பயங் கொண்டு ஓலமிட்டார். துர்க்கா தேவியையுஞ் சுப்பிரமணியப் பெருமானரையும் நோக்கி அபய மிட்டார்கள்.

தாதீஹிவண ரூம் கிவவாஜயுதீம் ஹிவொவதிம்
கரிவஹொஷ ஜவரூம் । உமரூம்தெவீம்ஸாண
ஹிஹம்ப உதெ புஹ காவிதாஹொமஃ ।

என்று துர்க்கா தேவியை நோக்கி அபய மிட்டார்கள். இந்த யசுர் வேத தோத்திரத்தைக் கேட்டதுந் தேவியானவள் எருமை முகத்தை யுடையாரும் மகிடாசுரனை வலைத்துப் பொருது கொன்றாள்.

ஸாம வேதம்.

* வீஷாஹிநோஷமஹாஜாதவெஷஸ்யமாயா
வாஷாணிகாதிவஷிக் | கமெஷதிவஜநவாஷ்ணா
மோஷாகுஷாஷிகுவிகாதிநஷிநாம் ||

வபூதிராஜிகம்ஷமஹாரிமஹிஸ்ரூஷிம்ஷாஷிவெஷ்
வரீராதயஷாஷ | லக்ஷ்வஷடீஷாஹாணி
விஷாகஷாஷெஷிவாகீஷாணிகாகயுஷிஃ ||

என்ற முருகக் கடவுளை நோக்கித் தோத்திரம் புரிந்தார். பெருமானும் அவ் வேத மந்திரங்களை யெல்லாங் கேட்டு, அஞ்சனமின அஞ்சனமின! என அபயங் கொடுத்துப் புலிமுக முடைய அசுர வீரனைப் பொரவன்னினார். தம்முடைய திருக்காத்தின்ற ஞானமென்னும் பெரிய வில்லை வலைத்துத் தொனி செய்தார். வியாக்கிரன் மிகவும் பயந்து, குணத் தொனியே யிங்ஙனமாயின் இவர் வீரமெத்துணையதோ? ஆயினும் இத்தகைய மகாவீரருடன் யுத்தஞ்செய்து இறப்பினும் எஞ்ஞான்றும் புகழ் இருக்கும் என்று துணிவுற்றுத் தன்வில்லை வலைத்து யுத்தம் புரிந்தான். பல

* இவ்வேத மகாவாக்கியங்களிலே முருகக்கடவுளை அக்கினி எனவும் சதவேத எனவும் கூறித் துதித்திருக்கிறது. "தேவாநாம் அக்நே ஸா" அதாவது தேவர்களுக்கு முன்னே இருக்கிறவனை ஆகலின் அக்கினி எனவும், ஜாதாநி—வேதாம் ஸி—என்னுஞ்சொல் அதாவது எல்லாவிதமான நூல் ஞானங்களும் உண்டாகின் றவனே அவன் ஜாதவேதா எனவும் சொல்லுவார். அக்கினியு மென்னலாலும், புலிக்க மூர்த்தி என்னலாலும் அக்கினியம் வேதங்கள் கூறினவென்க.

லல்வடிவங்களே யெடுத்துப் பாண்டங்களைப் பொழியா நின்ற காலை, பரப்பிரமம் பொருளாகுக கடவுள் ஓர் திரம் விடுத்து அவன் தலை கொய்து புறக்கடலில் வீழச் செய்தனர். தேவர்கள் யாவரும் துதித்து முன்போலப் பதவிகளிற் சென்று வாழ்ந்திருந்தனர்.

தேவர்க்குத் தின்பஞ் செய்த மகா வீரனாகிய வியாக்கிராசுரனைச் சங்காரித்துத் தேவர்களைக் காத்தருளினமையால் வியாக்கிராசுர சங்கார மூர்த்தி யெனத் துதிக்கப் பட்டார்.

வாசிட்ட லிங்க புராணம்.

கண்ணுதற்கொருகண்ணையப்பியகண்ணனைமொருதிண்ணனன்
பெண்ணியாவருமுண்ணயந்திடவண்ணவாழியையுள்ளியெம்
மண்ணவாடிகண்ணிடந்தவமண்ணையுண்ணியுமெண்ணவாங்
கண்ணனும்முதருங்களென்றிருசண்டைகண்டனர்கற்பமே.

விண்டி யாவுன தத்த னென்றிட வேதனைதிடு மாயனை
பண்டு காலவர் மகதி யானென வென்கண் வத்தனை பார்மகட்
கொண்ட நன்மரு காகநின்றனை கூறபோலு மாலையே
யண்டி யுற்றபி றப்பி னேற்படை யங்கை சேந்தது காண்டியே

வன்ன மாயனு மோர ழற்கொடி ருட்கடற்பரி போலவே
தன்னை வோர்புலி யுக்கிரத்துறு தார்த்தனைப்பொர வுய்த்தன
னன்ன னைஞ்ஞிறை யன்ன னும்மனி டன்னை யுய்த்தன னன்னவா
முன்னி நின்றமர் கொண்டி ணங்குரு மூன்றி னைரு நேன்றரோ.

யாகிநின்றவ மேன்மை யாலவர வாய்மை யாற்பல வேகதனாக
ஆயாகிரத்துறை யாகி வானவர் கோலு மாபத மாக்கியே
சயாக்கிரத்தி னுலக்கு வேன்முரு கத்த ரூருள் சாரவே
யாகிரத்தினில் வந்த பொற்கழ னூப்ப வண்டிட மண்டினன்.

வியாக்கிராகர சங்கார மூர்த்தயே நமஃ



கயாசுரமுரசுந்தி.

இருபதாவது,

கயாசுர மூர்த்தி.

பிரம விட்ணுக்கள் இருவரும் பறவைகளாகிய அன்னம், கருடன் என்னும் இரண்டு பறவைகளை வாகனமாக் கொண்டு ஊர்வர். அவர்க்கும் மேலான கடவுள் யாமே என்பதனைச் சிவபெருமான் நீலகண்டம் மூக்கண் முதலவற்றை நிறுப்பதன்றி வாகனத்தானமைப்பாத்துவத்தை நன்குவிளக்கா நின்றனர். எங்ஙன மெனில், இடபம் என்னும் மிருகத்தை வாகனமாக ஊர்தலா லென்க. என்னை? பறவைகளினின்றும் மிருகம் ஏற்ற மூடைமையா லென்பது. இங்ஙனம் இவர்களுள் இருவர் பறவைகளையும், ஒருவர் விலங்கினையும் ஊர்தியாகக் கொள்ள, இம் மூவர்க்குங் காரணாயிருந்து அண்டான வாயிலாற் படைத்தன் முதலிய தொழிலைச் செய்பவர் தாமே என்பதை விளங்க நங்குமாக் கடவுளார் பறவைகளையும் மிருகங்களையும் வாகனமாக் கொண்டருளினர். எங்ஙன மெனில், பறவைகள் இரண்டனையும், விலங்குகள் இரண்டனையும் ஊர்தியாகக் கொண்டதாம். பறவைகள் இரண்டாவன—மயில், கோழி. விலங்குகள் இரண்டாவன—ஆடு, யானை என்பன. இங்ஙனம்இருகாற் பிராணிகட்கும், நாற் காற் பிராணிகட்குந் தலைவராகிய பரப்பிரமம் யாமே யென்பதனைத் தெரித்தருளுஞ் சிவகுருநாதன்.

வேதங்களெல்லாம் "எவன் தேவர்கட்கு அரசன், எவனிடத்தே தேவர்கள் அடங்கியுள்ளார், எவன் இந்த இருகால்களுக்கும் நாற்கால்களுக்கும் நாயகன்; அத்தகைய தேவனுக்கு அவிசு கொடுப்பேம்,, என்றும், "நாற்காற் பிராணிகளை முன்னர்ச் சிருட்டித்தான். இருகாற் பிராணிகளையு மங்ஙனே படைத்தான். முன்னர் அப்புருடன் உடல்களி னுயிருட் புகுந்து அந்தரியாமியானன்" என்றுமின்னவாகக் கூறும் பிரமாணங்கட் கெல்லாம் (வேதவாக்கியங்கட்குத்) தாமே பொருளென அறிவித்த படியாம். அவ்வேத வசனங்களை

யிங்கே காட்டுவோங் காண்க. இவ்வண முள்ள வாகனங்களுள் யா னையு மொன் றென்றும், அந்த யானை அயிராவண மென்பர் சிலர். அற்றன்று. அது இரண்டாயிரங் கொம்பர்களை யுடையதாய்ச் சிவ பெருமானுக் குரியதாய்ச் சிவலோகத்தின்கண் இருப்ப தெனினும் "தந்தை பொருண் மைந்தர்க்கு" என்னு வழக்குப்படி, விநாயகர், சுப்பிரமணியர் முதலினோர்க்குப் பொது வாதல் கண்டுணர்க.

ஆகலி னன்றே பிரமதேவன் புத்திரிகளாகிய சித்தி புத்தி களை விநாயகனுர் திருமணம் புரிந்த ஞான்று அவ்வயிராவணத் தினிவர்ந்து திருவுலாப் போந்தா ரெனப் பாரிக்கவ புராணமும் பகர்ந்தது. எண்டிசு சுப்பிரமணியக் கடவுளார்க் குரிய யானை யெது வோ வெனிற் "பிணிமுகம்" என்னும் பெயரை யுடைய தென்க. கருப்ப வாச மில்லாத முளிவாரைத் திருவாச ரென்ருற்போலவும், இமைத்த லில்லாதவரை "இமையவர்" என்ருற் போலவும் எதிர் மறை யிலக்கணையான் வந்தபெயர் என்றறிக. என்னை ? எவரானும் பிணிக்கப் படாத (கட்டப்படாத) முகத்தை யுடையது என்று பொருளாகலின். அதற்கு எது யாதோ வெனிற் சொல்லுதும் கேண்மின். யானை யேற்றங் கொள்வோ ரவ்வியானையின் முக முத லியவற்றை யலங்கரிப்பர். முகத்திற்கு, முகபடாம் என்னும் வத்தி ரங்கட்டுவர். நுதற்கண் ஓடை (பட்டம்) கட்டுவர். கிம்புரிப் பூண் பூட்டுவர். கவரிகள் பிணிப்பர். இவைமுதலாம் பிணிப்புக்க ளின்றி யியற்கையே யவையெலா மமையப் பெற்றுத் தோன்றிய யானை யென்க. அல்லதூஉம் சடவடிவினையுடைய யானை யாசாது பதி னேராந்திரு முறைத் திருவருட்பாக் கண்ணும், மெய்கண்ட சாத் திரம் பதினன்கனு ளொன்றிய நெஞ்சுவிடு தூதினு முரைத்தாங்கு பரஞான மென்னும் யானை யெனப் பகர்வாரு முளர். அவ்வாறு இயற்கையே யமைந்த அலங்காரத்தை யுடைய அப்பிணிமுகம் என் னும் யானை எல்லா யானைகளினும் மேலாயது.

ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபௌமம், சுப்பிரதீபம் என்னும் எட்டுத்திசை யானைகளும், அவற்றின் பிடிகளுஞ் சூழ்ந்து போற்ற விளங்குவது. ஐராவத யானையுங் குற்றேவல் புரிய விளங்குவது. சிவலோகத்திலேயுள்ள ஐராவணம் என்னும் யானையும் அதற்கீடாகாது. இருக்கு, யசுர், சாமம், அதர்வண மென்னும் நான்கு வேதங்களுஞ் சுப்பிரமணியக் கடவுளின் திருவடிகளை மேடமாக வுருவெடுத்து வேள்வி யக்கினியினின்றுந் தோன்றித் தாங்குதல் போல, வேதங்களின் முதலாய பிரணவழ மவ்வாறேயவர் திருவடிகளைத் தாங்க வெண்ணி, இப்பிணி முகப் பெருவடிவந் தாங்கி வந்திரப்பப் பெருமானர் அதனை பூர்த்தியாக் கொண்டருளினரென்று பிரமாண்ட புராணத்திலே நாரத விசய சம்வாதச் சருக்கத்து உரைக்கப்பட்டுள்ளது. ஆகலிற் பிரணவ யானை யென்றும், தாருகக்களிறு என்றும் அழைக்கப்படும். இது வன்றி வேறும் வரலாறுங் கூறப்படும்.

திருமால், தக்கையை இடபமாய்த் தாங்கிய தன்றி மைத்தனும் யானையாகத் தாங்க நினைத்தார். அவர் அதிதி வயிற்றிலே உபேந்திரனைத் தோன்றியிருந்த காலையொன்று நினைத்தார். என்னுடனெதிர்த்த காலத்து நான் விடுத்த சுதரிசன சக்கரத்தைத் தன்கழுத்திலே மாலையாகத் தரித்த தாகலால் நான் மிக்க அவமான மடைந்தேன். அவ்வவமானம் போக வவனைக் கொன்று காத்தருளியவர் சுப்பிரமணியக் கடவுளே. ஆகலினவர்க்கு வாகனமாய் பேறினை யடைந்து, இனி எந்த அசுரர்க்கும் பயப்படாதும், அவரா லிடையூறடைந்து அவமான முறாமலும் இருப்பேன். எனது தமையனாகிய இந்திரன் மயிலாகத் தாங்கினனல்லனே? என்று எண்ணி, மாவிரூபம் என்னுஞ் சிறிய தலஞ் சார்ந்து வாமனர் அருந்தவம் புரிவாராயினர். அவர் தவங் கண்டிரங்கிய பெருமான்,

ஒரு திருமுகமும், இரு விழிகளும், நான்கு திருக்காங்களும், இடத்திருக்காங்கள் எவற்றைக் கேட்பினு மவையெல்லாம் ஒரு

87

சேரக் கொடுத்தருளும் வெற்றி பொருந்திய வாதமும், கோழிக் கொடியும் கொண்டிருப்பவும், வலத்திருக் கரங்களில் வேலும் வாளும் பொருந்தி விளங்கவும் அநேக கோடி சூரிய சொருங்குதயஞ் செய்தாற்போன்ற பிரகாசம் பொருந்திய திருமேனியும் உடைய சேயத் தோன்றி யருளினர். வாமனர் அருந் துதிகள் புகன்று வீழ்ந்து வணங்கி யானந்தக் கூத்தாடினர்.

"நினக்கு என் வேண்டு" மென்று சுப்பிரமணியப் பெருமானர் கேட்ப, வாமனர் சொல்வார், அசுர குலாந்தகா! அடியேனை முன் அவமானம் புரிந்த தாரகன் தேவீராற் கொல்லப்பட்டுச் சாத்தனுர்க்கு யானைவாகனமாக விளங்குகின்றனன். அவனும் நம்மைக் கண்டஞ்சுமாறும் அடியேனை யானை வாகனமாக்கி யெஞ்ஞான்றும் ஊருதல் வேண்டு மென்றார். வேண்டுவார் வேண்டியாங் கருளும் பெம்மான், அவ்வாறே வாமனரை யானை யாக்கி யூர்ந்தனர். வள்ளியம்மையார் அவதரித்த குறிச்சிநிலப் புட்களை வாகன மாகவுங் கொடியாகவுங் கொண்டருளினர். எனக் குரிமையா மொன்றை யுங் கொண்டிலர் என்று ஊடல் கொண்ட தெய்வயானை யம்மை யாரை மகிழ்விப்பான் வேண்டி, அவர்வளர்ந்த சுவர்க்கப் பொருள் களிற் சிறந்ததும், அவரை வளர்த்ததற் கினமாயதும், வள்ளியம்மை யாரை யச்சுறுத்தியதை யொத்த வடிவினையுடையதும் ஆன இந்த யானையை வாகனமாக்கிக் கொண்டாரென்று தேவலோகம் பூமாரி பொழிந்தார். இங்ஙனம் வாமனராகிய யானையின்மீ தூர்தும்மூர்த்தி யாய விளங்கலிற் சுப்பிரமணியக் கடவுள் கயாரூட மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

யசுர் வேதம் - மந்திர சாகை.

யொடிவா நாஉயிவொ

யவிநெவாகயிமிரி சாம்

[illegible]

ஐந்த வேதம்.

[illegible]

தமாரு தந்திரம்.

[illegible]

தணிப்புராணம் - அருத்திய ஈரஞ்பெறுபடலம்

[illegible]

தீருமுறுநாற்றுப் படை (பதினேராந் திருமுறைத் திருவருட்பா)

ஆதிகளுஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோவெலாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி.

பரிபாடல். (எட்டுத்தொகை.)

"பாயிரும் பனிக்கடல்" என்னும் ஐந்தாஞ் செய்யுளில்,

"சேயுயர் பிணிமுக மூர்த்தம குழக்கி" என்றது முணர்க. இன்னும் பலப்பல பிரமாணங்களுள. அவையெலாம் விரிவஞ்சி விடுத்தாம்.

கயாரூட மூர்த்தயே நமஃ

இருபத்தோராவது,

மாதங்காரி மூர்த்தி.

சியவன முனிவரின் புத்திரான † ததீசி முனிவர், குபன் என்னும் அரசனுடன் நட்புற்றிருந்தார். ஒருநாள் முனிவர்க்கும் அரசகுமாரனுக்கும் ஓர் விவாத முண்டாயிற்று. என்னனிற், பிராமண பலமோ? க்ஷத்திரிய பலமோ பெரியது? என்பதாம். தபராதன் "க்ஷத்திரிய பலமே பெரிது" என்ன, முனிவர் அந்தணர் வலிமையே சாலவும் பெரிதென்றார். அதனால் இருவர்க்கும் வீரவாதம் கோர்த்து கோபம் அதிகரித்தது. முனிவர் குபனைத் தாக்கினர். அரசனுஞ் சினங் கொண்டு ததீசி முனிவரை வச்சிராயுதத்தினால் அடித்தான். அவ்வடியினாலே இருடி குமாரரின் உயிர் மேலுல கடைந்தது.

அதுபோது முனிவரின் மூதாதையாகிய சுக்கிரனார் ஓடோடி வந்து, சிவமகிமை தலைக்கு மருந்தே! உயிர் விடுத்துச் சென்றை

† என்றே கூறப்பட்ட ததீசி முனிவர்,

"ஒ-ம்-ஸ்ரீ-ம்-ஹ்ரீ-ம்-க்லீ-ம்-ஐம்-வஜ்ரபாணயே ஸ்ரீ ஹ்ரீம் ததீசாய நமஃ!"

என வாதனாகமம் கூறியவாறு பஞ்சவிருடி சோத்திரத்தவராய ததீசி முனிவரல்ல ரென்றுணர்க.

படம் எ. 25.

(மாதிரிப் பிரதி மட்டும்.)

89

யோ" என்று வருந்தி, இரு தண்டமாய்க் கிடந்த அவரி னுடலைப் பொருத்தி, தமது சஞ்சீவினி வித்தையாலே முன்போலாகச் செய்து அவ்வுடற்கண் உயிர்வரும்படி செய்தனர். உடனே தாங்கி யெழுந்தவர் போலத் தக்கி முனிவர் எழுந்தார். சுக்கிரனூர் அவ ரைத் தழுவி முத்த மிட்டு வாழ்த்திக் குபனை நோக்கிக் கூறுவார். "அரசகுமர! பிராமணர் பிழை செய்த காலத்தும் அவரைத் தண் டிக்கவேண்டின் அவர் தலையிற் குட்டல், அல்லது சிறையிடல் செய்தன்றி, ஓரற்ப விடயத்திற்காவலரைக் கொல்வாரைக் கண் டிலேம். அங்ஙனஞ் செய்த மன்னர் வழித்தோன்றியோ னீ யெருவனே. நீ யிங்ஙன முறைதவறி மதத்தானுங் கோபத்தானும் வச்சி ராயுதத்தால் அடித்துக் கொன்றதனையால், சித்தாந்த நிலையி னின்றும் விலகி, சிவதூடண னாகி, மாயனைக் கடவு ளென்று அலமந்து மாழ்கி மாண்டு, மறுபிறப்பில் மத யானையாகத் திரிந்து பலம் புரிந்து மாய்க" என்று சபித்தார்.

அவ்வாறே குபன் சிவநெறியி னின்றும் விலகி, அவநெறியாகிய புன்மதத் தாழ்ந்து, மாயனே பரம்பொரு ளென்று மயங்கித் துன் புற்று மாண்டு, இலங்கை மண்டலத்திலே ‡ உவா வென்னும் வனத் தீலே கொடியயானைகட் கெல்லாந் தலைமையான இளம்ப்யானையாகத் தோன்றித் திருகுற்ற சிந்தையா லுன்மத்தங் கொண்டு திரிந்தான். அநேக உயிர்களை யெல்லாங் கொன்றும், முனிவர் தவரிலைகளை யழித்தும், வேள்விகட்கு இடையூறு செய்தும் இருந்த யானையைத் தேவர்களுங் கண்டால் மிகவும் பயந்து ஓடுவார்; ஒளிப்பார். இவ் வியானை யாரால் கொல்லப்படுமோ? என்று யாங்களக்கந் தீர்ந்திருப் பமோ என்று பலருங் கந்த நாதனைப் போற்றுவார்கள். இங்ஙன நிகழுகாளிலே,

‡ உவா என்பது இச்சாலத்து ஊவா எனப்படும். அதனண்டைக்குச் சமீபத்திலே சப்பிரகாமம் என்னு மூர்க்கு அருகிலுள்ளது. உவா—யாலை. அது பிறகு விடமாகலி அப்பெயர்த் தென்றெண்ணக் கிடக்கின்றது.

தத்தமாற்றங்கணிறுவியசமயிகள்பலருங்
கத்துபுன்சொலேவினவினரவண்செயல்காணூர்
சுத்தவாதுளமுதலியதந்திரத்தொகுதி
யுய்த்துணர்ந்திடுநீரேயொருசிறிதுணர்வார்.

என்றபடி சிவாகம வழிநின்று, அறுமுகக் கடவுளின் திருவருட் பெருமைகளே யெல்லா முள்ளவராறுணர்ந்த சற்புத்திர னென்னும் வணிகர் ஒருவர் இருந்தார். தங்கள் செட்டிகுலத்திலேயவதரித்து அதனுலே செட்டி என்னுந் திருப் பெயரையுடைய கந்தக் கடவுள் எழுந்தருளி யிருக்கின்ற தலங்க ளெல்லாஞ் சார்ந்து தரிசனஞ் செய்து, "திருப்புகழ் பெற்ற தலங்களுட் கதிர்காமம் ஒன்று தரிசித்திலேன். மற்றைய வெல்லாந் தரிசித்து முற்றினேன். அக் கதிர்காமத் தலத்தையு மெம்பிரா னடியேற்குக் காட்டியருளுதல் வேண்டு"மென்று பிரார்த்தித்து வருவாரா யினர். இவ்வாறு தரிசனவிருப்பத் தழுந்தி நிற்குஞ் சற்புத்திர வணிகரது சொப்பனத்திலே சிறையிலே கிடந்து புலம்பிய சயந்த குமாரனுக்குத் தோன்றித் தெளிவித் தருளியதுபோலத் தோன்றி யருளித் திருவாய் மலர்ந் தருளுவார்.

"அன்பனே! கதிரைத் தலத்தைத் தரிசிக்கும் விருப்பமுடையை யாய் நிற்கின்றாய். நாளைத் தினமே புறப்பட்டு வருதி" என்று மறைந்தருளினர். உடனே சற்புத்திர வணிகரெழுந்து உடலுவங்க, உளமகிழ, உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தக் கூத்தாடி, முருகக் கடவுளின் திருவருளே வியந்து, அன்று புலரிக்காலையி லெழுந்து வழிக்கொண்டார். பற்பல ஊர்கள் யாவுங் கடந்து * கண்டி என்னும் ஊர்க்கண் வந்தார். அதுபோது சமுத்திரங்

* குபன் என்னும் யானையைக் கண்டித்த ஊராகலினன்றே கண்டியெனப் பெயர் வந்தது. மகனிவ தந்தை பறிவு என்றபடி தந்தையார் மாதங்காரியாய் விளக்கல்போல் மைந்தரும் இதனல் மாதங்காரியென விளங்குதல் காண்க.

கலே யெல்லாம் மொண்டு மொண்டு குடித்து இருண்டு மிக்கவேகத் துட்ன் புகர் நிறத்தையுடைய இந்திர வில்லையு மேந்திக் கொண்டு மேகக் கூட்டங்களெல்லா மொருங்கு திரண்டு இடித்து முழங்கி வந்த தென்ன, முற்கூறிய உவா என்னுங் குபயானை யதிர்ந்து நடந்து முழங்கி வந்தது. அதனைக் கண்ட வணிகனார், தமக் குற்ற துணை சுப்பிரமணியக் கடவுளே யென்று துணிந்து, அவ்வை யஞ் புடன் றுதிப்பாராயினர்.

அருவம், உருவம், அருவுருவ மென்று சொல்லப்பட்டமூன்று வடிவங்களையு முடையவர் எவரோ? அம் மூவகை வடிவங்களுஞ் சுவேச்சையினல் மந்திர வடிவாக் கொண்டு இலய போக அதிகாரங் களை யாவர் செயவாரோ? அவர் அடியேனைக் காத்தருள்க. ஆண் மாக்களாகிய எங்கள் பொருட்டு யாவர் ஆணை சத்தியினலே சங் கார அநுக்கிரக நிருத்தி யங்களைச் செய்வாரோ? யாவர் ஜாக்ர சத் தியினலே படைப்புத் தொழிலை யியற்றுவாரோ? யாவர் உரோ தயித்திரி சத்தியினல காத்தல் மறைத்த லென்னுந் தொழில்களைச் செய்தருள் வாரோ அவைகளை வேற்படை, தெய்வயானை, வள்ளி யம்மை என்னுஞ் சத்திகளாக யாவர் காட்டுவாரோ அன்ன கட வுள் அடியேனைக் காத்தருள்க என்று துதித்தார்.

சுப்பிரமணியப் பெருமான் அந்தக் கணமே வேடர் போற்றரு வுருக் கொண்டு கையின் கண்ணை வேற்படை தரித்தவராய்த் தோன்றி, அன்ப! பயமுறற்க வென்று அபயங் கொடுத்து, ஒருங் காருஞ் செய்தார். யானை வீழ்ந்திறந்தது. குபன் தன்னடியிலிருந்து வணங்கினன். முகக் கடவுள் மறைந்தருளினர். வணிகர் துதித் துக் குபாசலுடைந்து மாணிக்க நன்னை நல் னதியாடித் தரிசித்தனர். அவருள் குபன், தந்தி மூன்னிவர்க்குத் தான் செய்த பழிநீங்கப் பெற்று, தன் இராசியத்தைக் கைக் கொண்டான். வணிகர் இறுதியிற் முகபத மடைந்தார். யானை

ழித்து வணிகரைக் காத்தருளி னமையாற் சூகனூர் மாதங்கா
பூர்த்தி யாயினர். மாதங்க=யானையை, அரி=அழித்தவர்.

வாதுளாகமம்.

ஸிவ கிலுங்கிலு வொ நிஷ்டூம்தீகீ திருதிழு ।
லுகூலும்நிஷ்டூ லெனுகிலுவாடிவ வுஸிகிலொவ வுதெ ।
ஜெலுமுங்லுகலுலுவிடி வுரக்ரியவாலெலுவுங்கிலெதீ ।

மிருகேந்திராகமம்.

லொ லுவா ல நழுலுகுஸிவ வுகூலுகுவாலுனலுலுஸ்ரு பழு ।
கலுவுவா தூகலுசாகழு வுஸிஸ்ரு கியாவ கீவுடெ ।
லுவி மாலுலுயவிந நாலுலுவ லுலுஸ்ரு தலுவிலெ கரயதஃ
லுவாவாவலுவா நழுலுவாலெலுவுகீ ।

பிரமாண்ட புராணம் (மொழி பெயர்ப்பு)

சிவமொன்றே முதலாகுஞ் சத்தியஞ்சத்
தியமீது தெருட்டி னேனீ
ரவமொன்றிச் சுடுகிரயத் தாழ்கின்றீ
ரொளப்புகலு மந்தச் சோதி
குவலென்றிக் கலகமிடப் புடைத்தனன் மற்
றவனுமொரு கோலிற் ருக்கச்
சவமொன்றச் சுக்கிரனும் பதைத்தொருநற்
சிவக்கொழுந்தே சார்ந்திட்டாயோ.

என்றிரங்கிச் சிவனியின் வித்தையா லுயிர்ப்பித்தே
யிவனே நோக்கி
நன்றுநீ மதிமாவிற் படுதியெனச் சூள் செயதா
னன்னு மீழத்



(யாக ரக்ஷக ஸ்ரீராமர்.) ஸ. வே. வெங்கடாசலசாஸ்திரி.

தொன்றுவா வனத்துவா வெனுத்தோன்றிக் கொடுஞ்செயல்க
ளுருற்றியன்ப
னன்றுதலங் காணச்சென்ற டர்த்திவேள் கொன்றாள
வன்பிற் சார்ந்தான்.

மாதங்காரி மூர்த்தயே நமஃ

இருபத்திரண்டாவது,

யாக ரகஷக மூர்த்தி.

காசிப முனிவர், தக்கன் புத்திரிகளாகிய திதி, அதிதி, தனு, அரிட்டை, காசை, கடை, சுரபி, விநதை, தாம்பிரை, குரோத வசை, இளை, கத்துரு, முனி என்னும் பதின் மூவரையும் விவாகஞ் செய்தார். அவருள், திதி யென்பாள் இரணியன், இரணியாக்கன் என்னும் இருவர் ஆண்மக்களையும், சிம்மிகை யென்னும் பெண்ணெருத்தியையும் பெற்றனள்.

அவர்களுள் இரணியனுக்கு அனுகிலாதன், கிலாதன், பிரகலாதன், சங்கிலாதன் என்னு நான்கு குமாரர் தோன்றித் தைத்தியகுலத்தை விருத்தி யாக்கினர். இரணியாக்கனுக்குச் சருச்சாண், சகுனி, பூதசந்தாபனன், மகாநாபன், மகாபாகு, காலநாபன் என்னும் ஐவர் குமாரர் தோன்றினர். மற்றையமனைவியாக்கும் மகவுகள் பலப்பல தோன்றி யளவிறந்தனவாக விருத்தியாயினர்.

திதியின் குமாரர்களான அசுரர்களுக்கும், அதிதி புத்திரர்களான தேவர்க்கும் போர் தொடங்கிப் பலர் இறந்தார்கள். விடினு அவர் வெண்கோட் கிரங்கிப் பாற்கடல் கலடைந்து, தோன்

றிய அமிர்தத்தைத் தேவர்க்குக் கொடித்து, அசுர கூட்டங்களை யெல்லாம் வேரோ டறுத்தொழித்தார். அஃதறிந்த தீதி யென் பாள் மிகமனம் வருந்தி, என்னுடைய குலத்தவர்களை யறுத்த இந்திர உபேந்திரர் முதலிய அதிதி புத்திரர்களை யெல்லாங் கொல் லத்தக்க புந்தீர னெனுவனைத் தந்தருளினால் என்னுயிரை வைப் பேன். அன்றேல் இப்போதே துறப்பே னென்று காசிப முனிவ ரிடம் முறையிட்டாள். அவர் அவளை நோக்கி, பிரியாய்! வருந் தற்க. அங்ஙன மொரு புதல்வனைத் தருகின்றே மென்று தேற்றி னர்.

முருகக்கடவுள் வீற்றிருந் தருள்கின்ற திருத்தலங்கள் அறு பத்து நான்கனு ளொன்றாய புந்தீர காமம் என்னுந் திருத்தலத் தை யடைந்தார். ஆங்குள்ள நற்முனி மொன்றிலே யாகசாலைவகுக் கத் தொடங்கினர். சால்யோத்தாரணம், தான சுத்தி முதலியவை களைந்து செய்து யாகசாலை வகுப்பா ராயினர். மனு சூத்திரம், இரவி சூத்திரம், முனி சூத்திரம், மானவ சூத்திரம், திரபாக மண்டபம் என யாக சாலை யைவகைப்படும். அவற்றுள் தங்கருமத்திற் குரிய யாகசாலை மானவ சூத்திர மாகலின் அதனை வகுத்தார். வேதிகை, ஊர்த்துவ பட்டி, அதோபட்டி, துவாரம், குண்டங்கள் இவைகற் பித்து, வேதியின் கடவிலே பிரமபத மெனவும், நான்கு பக்கத்தும் தெய்வபதம், மானுடபதம், பைசாசபதம், இராக்கத பதம் என்னும் பதங்களும், அவைகளில் ஊர்த்துவ மேகலை, அதோ மேகலை, மத திய மேகலை யிவைகளும் கற்பித்துக் குண்ட யோனி முதலியவை யும் வகுத்தார்.

இவ்வெருமான் பஞ்சவர்ண முடையராய் விளங்கலானும் பஞ் சதானங்களி னின்றும் வெளிப்பட்டுப் பஞ்ச கிருத்தியஞ் செய்த லாலும் பஞ்சாவாணங்களும், துவாரம், தோரணம், சூலம், நான்கு தம்பம், உருத்திராக்க, பஸ்ம, உபயன தாரண வேதிகைகளு மியற்

றிச் செய்யவேண்டியன வெல்லாஞ் செய்து, யாகத்தின் பிரதா
னம் முக்கியமான அதர்வசிரோ மந்திரங்களையுஞ் சொல்லத் தொடங்
கினரேயும் விதிப்படி கூறிச் செய்வாராயினர்.

"அந்த யாக முற்றுமேல் திதி யென்பாள் வயிற்றிற் றோற்ற
மூண்டாகும். அஃதுண்டாயினமக்கும் நங்குலத்தாருக்கும் அழிவு
நேரிடும்." என்று இந்திரனுந் திருமாலு மிடையூறுகள் செய்யத்
தொடங்கினர். காசிப முனிவர் அது தெரிந்து, வேளவிப் பதி
யைத் துதிக்கத் தொடங்கினர்.

யாவனங்கி வடிவாகிலுன் யாக னயத்தை யூர்த்திடுவான்
யாவனங்கி பூவினமா மறைக ளியம்பு மகபலத்தை [ணன்
யாவன் கொடுக்கும் பொறியாகத் தோன்று மெழிலோன் முக்கண்
யாவனவன்றன் பதமலர்க்கங் கடியேன சரணம் புகுகின்றேன்.

யாவன் அக்கினி வடிவாயிருப்போன்; எவன் மேடையாகனத்
தை யூகிவோன்; அம் மூர்த்தி அடியேனையும் யாகத்தையுங் காத்
தருள்க. சிவாக்கினியு என்று வேதங்கள் முழங்கும் பொருளா
யிருப்பவன் எவன்? யாகபலப் பிரதான மூர்த்தியாவன்? ஊர்த்
துவ தேதசனும் அறுதிசைகளைக் காப்புவனும் யாவன்? குமாரன்
திரியம்பகன் யாவன்? அக்கடவுளாவான் அடியேனையும்யாகத்தை
யுங் காத்தருளும்படி யடைக்கலம் புகுகின்றேன். யாகத்திலே
மும் முறை "சுப்பிர மண்யோம்! சுப்பிர மண்யோம்!! சுப்பிர
மண்யோம்!!! என்று வேதங்களால் அழைக்கப் பெறுவோற்கு
அடியேனடைக்கலம் அடைக்கல மென்றிவ்வாறு துதித்தார்.

இவ்வொலி கேட்டதுஞ் சேய்குரல் கேட்ட தாய் போலச் சுப்
பிரமணியப் பெருமான் பால வடிவத் திடன் வேலாயுதமும் பல்லை
வமும் தரித்த திருக்காத்தினாயத் தோன்றி, முனியே! யாங் காக
கின்றும், அஞ்சற்க, யாகத்தை முடிக்குதி யென் றருளினர்.

காசிப முனிவர் கந்த சகத்திர நாமத்தால் அர்ச்சித்துச் சோடசரூப யியானஞ் செய்து யாகஞ் செய்வாராயினர். தேவர்கள் செய்த அபிசார வேள்வியி னின்றுந் தோன்றி மகிஷன், மாரன் என்னும் அசுரர் இருவர் அனுப்பப்பட்டார். அவ்வசுரர்கள் முனிவரையும் யாகப் பொருள்களையும் விழுங்குவே மென்று ஆரவாரித்து வந்தெருங்கினர். காசிப முனிவர் பயந்து, "ஞானசத்திதரா! பாலரூபா! பரஞ்சுடரே யோல மோல" மென்றார். இவ்வய பிள்ளையார் தங்கரத்திருந்த பல்லவத்தா லெறிந்து அவ்வசுரர்க ளிருவரையுங் கொன்றருளினர்.

முனிவர் யாகத்தை நிறைவேற்றி ஆங்குச் சுப்பிரமணியப் பிரதிட்டை செய்து சென்றார். அதுவே புத்திர விருப்பத்தை யளித்தமையாற் புத்திர காமம் என்னும் பெயர் பெற்றது. இங்ஙனம் முனிவர் செய்யும் வேள்விகளையும், அந்தணர் செய்யும் மகங்களையும் யாதோ ரிடையூறும் வராமற் காத்தும், காசிப முனிவர்செய்த யாகத்தை யழிக்க வந்த அசுரர்களைக் கொன்றும், அவர்யாகத்தைப் பரிபாலித்தும் வினங்கவரற் சுப்பிரமணியக் கடவுள் யாதரூபமூர்த்தி யாயினர்.

சந்தான ஆகயம்.

வம்வகூ ஹ்ரீஹ்ரீஹ்ரீ யுவாஸ்ரிக்ஷ்ரீவெஷ்ஹி ।

வம்வாவாணயாகூஹ்ரீவாயபூஹ்ரீதத்ஃ வஸ்ஃ ॥

வம்வாவாணம் மொஹ்ரீஹ்ரீம்வெஷ்ஹிநஹ்ரீம்

யாஹ்ரீஸ்ரீஹ்ரீவாஷ்ரீதாஹிதிஹ்ரீவெஷ்யுவாவியி ।

தமார தரிசனம்.

* வரனயன் சுதன்றன் மனையருட் டிதன்
வமிசததை யழித்தமா யவனை
யெரிசதக் கிருதை யழிசுதற் றருகென
நிரக்கவோ வேள்வியை யியற்ற
வரியிரு வருஞ்செ யல்லவை தீர
வந்தடா மாரனர் மலையார்
பரிவுற வழிதக் காதனன் வேள்வி
பதிபுத்ர காமநற் றலமே.

பதினோராந் திருமுறைத் திருவருட்பா

மந்திர வித்தியின் மாபுளி வழாஅ
வந்தணர் வேள்வி யோர்க் குமமே யொருமுகம்.

யாகாசுக்க மூர்த்தியே நமஃ

இருபத்துமூன்றாவது.

புட்பசத்திர மூர்த்தி.

நீர்வள நிலவள முதலிய எல்லா வளங்களாலும் பொலிவு பெற்றதாகி, ஈழம், பொன்னகம், * தக்கிணகைலாயம் என்றின்ன பெயர்களை யுடைத்தாம் இலங்கை மாபுரியிலே யுள்ள † ஏழுமா நாடு அதன் நிலகம்போற் சிறந்து விளங்கா நிற்கும். அத்தகைய நாட்டிலே குற்ற மின்றி விளங்கிய அறிவும், வலிமையும், முயற்சியு முடைய ஓவியர் குடியிலே, அற மெலாந் திரண்டு ஒரு வடிவெடுத் தாற் போலும் நல்லியக் கோடன் என்பவன் இருந்தான்.

அவன் அவ்வூராசர்க்குத் தலைமை பெற்றோனாகி, தொண்டை நாட்டின்க ணுள்ள எயிற்பட்டினம், ஆமூர், வேலூர், மூதூர் என்னு நான்கு நகரங்களினும் அரண் கோலி யாசு புரிந்தான். மயிலுக்குப் போர்வை கொடுத்த ஓவியர் குடித் தோன்றலாம் பேகன், தடுத்த முல்லைக் கொடிக்குத் தன்றே ருதவிய பறம்பு மலைக்கு அரசனாகிய பாரி என்னும் வள்ளல், காரி யென்னும் பட்டத்துக் குதிரை யுடன் றனது நாட்டினையும் இரவலர் கேட்டவுடன் கொடுத்த கார் வள்ளல், பாம்பு கொத்த அரிய நீலநிறப் போர்வையை யாவின்

---

* இலங்கையிலே ஏழுமாகாம் என்பது திரிகோண மலைப் பகுதிக்குள்ளாரோ? அதனை ஏழுமாநூர், ஏழூர் என்பது. இக்கன மருவித் தென்று கூறுவர் புலர். கோ டன என்னும் பெயராலே தக்கிண கைலாச புராணத்திலே கூறப்பட்டமுள்ள கோட மும் இவை வழங்கிய வர்த்தமானத்தை கூறல் பொருந்தும். ஆனும் ஏழூர்ப் பகுதியில் வந்தார னென்றும் † கந்தளாய் என்ற குளந் தோண்டுவித்தா னென்றும் தெரிதலால் ஏழூரே ஏழுமாகா டென்ப தொருதலை.

† காயுலகூத பரித்தெரிப்பட்ட கொல்லை மூன்றனுள் ஒன்று திருக் காளத்தி, ஒன்று திரிசிரமலை, ஒன்று திரிகோணமலை யாகும். அது "முன்னர் வீழ்ந்திடு கொல்லை தனிலொன்று - பின்னர் வீழ்ந்தது திரிசிர மலையெனும் பிறங்கல் - அன்னதின்பிற கலந்தது கோணமாமலை - இன்ன மூன்றையும் தக்கிண கயிலையென் றிசைப்பர்" எனவரு செவ்வந்திபுராணச் செய்யுளானறிக. தக்கிணகைலாய புராணமும் இவ்வாறுரைக்.

பக்கம். 2.15.

96

K. R. Venkatarama Sastri.

பாண சக்தி தோற்கிறாள்.

கிழிருந்த இறைவற்குச் சாக்கிய ஐயி என்னும் வள்ளல் மலைச சாரலில் நின்ற கருவெல்லியினது அமிழ்தின் றன்மை யுடையபழத் தைத் தான் முகர்ந்து நெடுநாள் வாழாது ஔவைக்குக் கொடுத்த அதிகன், ஓரி என்னுங் குதிரையை யுடைய ஓர் வள்ளல் முதலாய வள்ளன் மாரை நாணச் செய்யுஞ் சிறந்த நகை யுடையவன். செங் கோலன், சத்தி நிலயங்கண்டு வழிபாட்டிற் சிறந்தோன். புலவர் இருவர் முதலாயினோரைத் தெய்வமாக் கொண்டு அவர் மனம் மெ ழுக்க வெறுக்கை யீவோன், சுப்பிரமணியப் பெருமானையே குல தெய்வமாக் கொண்டு வழிபடுகின்றவன்.

கடைச் சங்கப் புலவராகிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத னார் பரிசில் விரும்பித் தன்மீது ‡ "சிறுபாணாற்றுப் படை" என் னும் பிரபந்தம் பாடிச் சென்ற காலத்து, அவர்க்கு யானைக்கன்றும் வளநாடும் வேண்டும் பொருள்கள் பலவுங் கொடுத்தோன். அவன் போலப் பரிசில் பெற்ற புலவர் அனவிலரே. சுப்பிரமணியக் கடவுள் வீரத்தங்கள் பல அதிட்டிப்பவன். வயிற்பட்டினம், ஆர்வர், வேலூர், மூதூர் இலங்கை என்னும் இவ்விடங்களிலே முத்தமிழ் ராய்ச்சி களும், வேலவர்கந்தக் கடவுளின் திருப்புகழ்களே யெல்லாம் அரைத்துப் பாடுதலும், புலவர் பிரசங்கங்களும், மாமாரி பொழிதலும், தானம், தவம், சிறப்பு, பூசனை யென்பனவும், சைவசித்தாந்த ஆராய்ச்சிகளும் இடையிடினறி விளங்கின.

இங்ஙன நிகழ்தலாலே சோ சோழ பாண்டிய வென்னுமூவேந் தர் நாடுகளும் வெறுமை யாயின. சுவர்க்க லோகம் போலுந் திரு வீய போகியங்க ணிறைதலாலே இலங்கையைப் போன்னகரம்

‡ இந்நூல் கடைச் சங்கத்தி லரங்கேற்றப் பட்டுப் பத்துப் பாட்டி னொன்றாகச் சேர்க்கப் பட்டு வினங்குகின்றது. ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைசெய்தனர். இன்று மதுரை பாப்பாகவிக்கவி புலவர்பான் முடித்த சோம்பல் பொருட்டாலைரூடன் இலக்குமென்க.

என்று புகழ்ந்தனர். அதுகண்ட மூவேந்தரும் பொறுமை யுற்று இவனது காருகரோத் தன்வயமாக்கக் கருதிப் படையெடுத்து வருதல் கண்ட கல்லியக் கோடன், அதுபோது ஆலூர்க்க ணிருந்தா லுகவின், தன் சேனைகளை யணிவகுத்துப் பகைவருடன் போர் புரிந்தான். கோடன்முன் அமைச்சர்களுள் ஒருவன் பகைவர் பக்கஞ் சார்ந்து அந்தாவங்களை யெல்லாஞ் சொன்னமையால் இவன் சேனைகள் தோற்றோழிந்தன. அதனைனே நல்லியக் கோடன் மனம் வருந்தித் தன் மனைவியுடன் இரவிலே தெரியாது புறப்பட்டு வேலூர்க் கோட்டை சென்று, ஆங்கிருந்த தனக்கு உற்ற துணையாக நிற்கும் வேலாயுதப் பெருமானைத் துதித்து வந்தான்.

மாணம் நின்று மனத்தை யலைப்ப, கல்லியக்கோடன் உள்ளிக வருந்தி, குகா! சரவணபவா! குமரா! கதிரை நாயகா! வல்லீபதே! தேவயானை காந்தா! தேவர்க்கு விண்ணுல கீந்த தேவதேவா! பக்த வத்சலா! பரம குருவே! அடியனிடர் தீர்க்கும் அருட் பெருங் கடலே! இற்றைத் தினம் அடியேனுக்கு நல்லருள் புரியாயேல் என்னுயிர் விட நினைத்திருக் கின்றேன். அது தேவரீர் அறிந் தருள்க, என்று பலவாறு துதித்து ஆங்குள்ள கேணியின் மூழ்கிப் புலராத வத்திரமுடுத்து, அன்புடன் ஆறெழுத்து மந்திரத்தையுச் சரித்துப் பூசித்தான். அன்றிரவு மூன்று சாமங் காறும் பூசித்து, நான்காஞ் சாமம் அயர்ந்து கண்படை கொண்டான்.

முருகக் கடவுள் அரசன்மீது இரக்க முற்று, ஒரு திருக்காத்தில் வில்லும், மற்றோர் திருக்காத்தில் வேலுந் தரித்தவராய், முக்கண்ணுஞ் சிரீடமுங் கடப்ப மாலையு முடையராய், மயிலுஞ் சேவலும் பின்னர் வா, அரசன் கனவிற் றோன்றித் திருவாய் மலர்ந்தருளும். "அன்பனே! அஞ்சற்க. அஞ்சற்க. நீ தோய்ந்து வருங் கேணிக்க ணுள்ள புட்பத்தைக் கொய்து, நம் மந்திரங் கூறிப்பகை வரை நோக்கி யெறிவாயாக" வெனத் திருவாய் மலர்ந்தருளி மறை-

த்தனர். அரசன் விழித் தெழுந்து வேலாயுதக் கடவுள் அளிய னேன்றன் துன்பங் கண்டு விரைந்தருள் புரிய நிமித்தம் மயில்வர் கனத்து பிவராது, உலகங்கள் தேடிக் சரணைத் திருவடிகள் சேப்ப எழுந்தருளினரே! எளியனேன் அக்கொடுமைக் கென்செய்வேன்? என்று வருந்திக் தேனி சென்று தோய்ந்து அகமருடனை வந்தனை முதலிய சுத்திக் கடன்களை முடித்து, சுப்பிரமணிய நியமம் புரி த்து, தக் காயத்திரியைப் பன்முறை கூறி, அக்கேணிப் பூவைக் கொய்து சடக்கர மந்திரங் கூறி, வேற் படைக்கல மாகப் பாவித் தெறிந்தான்.

அது இறைவனேந்திய வேலாயுதம் போற் சென்று, மூதண் டங்களும் நடுங்குமாறு ஆகாய வழியாய் விரைவின் சென்று, எயிற் பட் டினம் ஆழூர், மூதூர் என்னு மிடங்களிலே வசித்திருந்த சேனை வெள்ளங் களையும், வேலூர் நோக்கி வந்த படைக்கடலையும் ஒரு சேர அழித்துச் சுவற்றிப் பகைவர் பக்கல் சார்ந்த மந்திரியின் றலை யைக் கிள்ளிச் சென்று, கல்லியக் கோடனிடம் வந்து, அவனுடைய வஞ்சலிக் காத்தி னமர்த்தது. அரசன் எல்லையிலா ஆனந்த முற்றுப் புட்பம் வேலாகிச் சென்று பகைவரை யழித்த பொறுப் நோக்கி, அவ்வூர்க்கு வேலூர் எனப் பெயரிட்டுச் சுப்பிரமணி லாலயங் கண்டு, வேலாயுதப் பிரதிட்டை செய்து, தன் மனைவிக்கு நிகழ்ந் தன வெல்லா முரைத்து, எயிற்பட்டின முதலிய தன்னூர்களிற் போயினன்.

ஆங்குப் பகைவர் சேனைகள் அழிந்ததும், மந்திரிதலை யுருண்டு கிடப்பதும், சேர முதலாய பகைமன்னர் அஞ்சி நாணங் கொண்டு தன்னடி வீழ்ந்து கட்பாயது மான செய்கைகளை யெல்லாங் கண்டு "இவை யெல்லாம் வேலுசன் றிருவருளே," என வியந்து உலகத் தைத் தனதடிக் கீழ்ப்படுத்திச் செங்கோல் செலுத்தி, வேலனை

98

போழ்கிய இராச தானியாகக் கொண்டு அரசுபுரிந்து வாழ்ந்து கந்தவேள் பதம் அடைந்தனன்.

பல்லியக் கோடன் என்னும் அரசனது அன்பின் மேலீட்டா னே அவனுடைய பகைவரை யழித்தற்குக் கேணிப் புட்பத்தை வே லாகிக் காத்தருளிய பேராற்ற லுடையாகலாற் குமாரக்கடவுள் புட்ப தந்திர, பூரித்தி பாயினர். புட்பம்=பூ, சத்திரம்=வேல். புட்பத்தை வேலாக்கிய மூர்த்தி யென்க.

பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுப் படை.

பொருபுன லருவம் போக்கரு மாபிற்
றெண்மா விலங்கைக் கருவொடு செய்யிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளு
மறவின்றி விளக்கிய வடுவில் வாய்வா
ளுறழ்புலித் துப்பி னேனியர் பெருமகன்
கலிற்றுத் தழும்பிருந்த கழற்யங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் பூவல்லன் போரைச்
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திதல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்,

ஆசிரியர் நச்சினார்க் கினியர் உரை.

கல்லியக் கோடன் றன்பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழி படுதலுழி, அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை யெறி யென்று கனவிற் கூறி, அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்த தோர் கதை கூறிற்று. இதனானே வேலூர் என்று பெயராயிற்று.''



பத்திர சந்தி ரசந்தி.

துாய தினைமீ

பொன்னகே ரேறு மாவெனு மூரிற்

வெல்லுடன் சிறுன்றால் வியகேசு

டன்னுடை நெறுர்த் தலக்கணிற வகைத்த

தாரியை சவரொவாஞ் சரிக்க

நன்னயக் கனவி னுணர்த்திநிர்த் தேணி

நறுமலர் வேலினிற் செய்த

வன்னதை யுணர்க்தே யாளுனை யுடைத்தே

னறுமுகா புட்பசத் திரனே.

புட்ப சத்திர மூர்த்தியேரும்.

இருபத்துநான்காவது,

பத்திர சத்தி மூர்த்தி.

தேவ விருடி யென்று அரிய நூல்களாற் புகழ்ந்து கூறப்படுகிகண்டு என்னும் அருந்தவ முனிவர் தமிழ் மீது மிக்க ஆர்வ முற்று செந்தமிழ்ப் பரமாசாரிய ராகிய சுப்பிர மணியக் கடவுளுக்கு தியானஞ் செய்து திருவேங்கட மிறையும் றவஞ் செய்தார். சடாதாரும் நாகாபரணரு மாகிய ஆதிய செவ்வேட் பெருமான், கசகமலி என்பதிற் தெய்வயானை பங்கையாரும், இலவலி காயகி என்னும் வள்ளிபங்கையாரும் இருபாங்கரும் பொலிந்து விளங்க, மயில் வாக னருடாய்த் தோன்றி யருளினர். சிகண்டி முனிவர் பணிந்து வணங்கித் துதிபாடி நின்றாராக, பெருமானர் இருடியைத் திருநோக்கம் புரிந்து, "அறவோய்! நின் றவத்தை மெய்சகினேம், நிற்கென் வேண்டில் கூறுதி" என்று திருவாய் மலர்ந்தருளினார். முனிவனார் கைம்முகிழ்த்துக் கூறுவார். "கதிரை நாதனே! அடி

யேற்குத் தமிழியல் யாவுஞ் செவியறிவுறுத்தருளல் வேண்டும்,, என்ன, சுப்பிரமணியக் கடவுள் திருவாய் மலர்ந்தருள்வார் "இருடியே! தமிழ்மொழியின் இயல்பெல்லாரும்தெளிய வேண்டுமேல், நமது மாணவன் அகத்தியன் மொழியமைக்க விருக்கின்றான் அவனிடஞ் செல்வையேற் செந்தமிழ் நலனெலாஞ் செவ்வி யறிவுறுத்துவான்,, என்று மறைந்தருளினார்.

சிலண்டி முனிவனர் அங்ஙனஞ் சென்று நற்றமிழ்ப் பாராவாரத்தைப் பருகி, அந்தூலன் என்னுந் தெய்வப் பாண்டியனுக்கும் திலோத்தமைக்கும் பிறந்த சாந்த குமாரன், இசையை யுணர்த்தி யருளல் வேண்டுமென்று வேண்டி அவன் பயிறற்காக இசைநுணுக்க மென்னும் நூலை யியற்றித் தெளிவித்தார். அகத்தியனு மாணவனும், முனிவர் தம் விருப்பஞ் சுதனைத் தலமென்னுங்கிரி சாமஞ் தரிசித்தற்கு விரும்பி யது நோக்கிச் செல்வாராயினர். சிலண்டியார் போகுங் கரலத்து அவர் மாணாக்கரும் தரிசிக்க விரும்பினர். அவர்களோடு முடன்கொண்டு பிரயாணஞ் செய்தனர். கதிரைத்தலத்திற்குச் சமீபமான வனத்திலே யானை யொன்று வந்து இவர்களை மறித்துத் தருக்களை முரித்து மதம் பொழிந்து கலவித் தொல்லை யுறுத்தனித்தது.

சிடர்களும், மற்றைய பிரயாணிகளுஞ் சாலவும் அஞ்சி முனிவரடியிற்சேர்ந்து தேவரீர் காத்தருளுக வென்றனர். அதனைநோக்கி முனிவரஞ்சி கதிரை வேலாயுதக் கடவுளைத் தம்முள்ளத்தினியானித்துச் சடக்கா மந்திரமுணர்த்துச் சமீபத்திலிருந்த வேற்றிலை யொன்றைம் பிடுங்கித் தங்கையிலே யேந்தி,

"ஒருதாரும் பிழலே முன்னர்த் தேவாகளை யெல்லாம் வென்றது உண்மையாயின், அன்னவா மைந்தாம் அறுமுகக் கடவுள் திருவடியைப் பிற்றைக் கோடாக வுடையேனேல், இவ்விலையே வேலாகச் சென்று அழிக்குக" என்று கூறி விடுத்தனர். அவ் வேல்

றிலே சுபிரமணியக் கடவுளின் திருவருளினாலே வேலாகச் சென்று யானையைக் கிழித்துச் சென்றது. யானை வீழ்ந்ததும் ஆங்கிருந்து ஓர் தேவ வருத் தோன்றி முனிவரை வணக்கி, ஐயனே! அடியேன் ஐராவத என்னு மொரு கந்தருவ னெயிருந்தேன். பிருகற்பதியாம் பியாழி பகவான் சொற்றவறி கடந்தமையிறுற் சாபம் பெற்று இப்பின் பிறவி யடைந்து கீண்டு சலமவருத்த மூற்றேன், குகன் அடியவ ராகிய தேவசீர் விருத்த வெற்றிலை, கதிர்வேல் புதக கடவுளின் திருவருளாலே வேலாக வந்து உடம்பை யிருவிச் சென்றமையா லெண்சாபந் தீர்ந்து இத்தெய்வப் பணிவடிவடைந்தேன். ஆகலாற் குகனடியார் மகிமை கூற வல்லார் யார்? என மொழிந்து சென்றது.

முனிவரும் மறைறையோரும் மிக வியப்படைந்து, பதிர சத்திர் சூத்தியே மாணிக்க கலைகைப் பதியே! எனப் பரவிச் சதிரைதலவு சென்று பெருமானுரை வெளியினின்றுந் தரிசித்து, அவர் திருவருகாண விரும்பி வாங் கிடப்ப, இறைவரும் தடித இரகசிய வடிவைக் காட்டத் தரிசித்து வேண்டிய வரம்பெற்றுத் தஞ்சிடகருடன் பொதிய மலைந்தார். இவ்வுண்மையா னன்றே புலவர் யாவரும் வேற்படையை "இலே வேல்" எனவியந்து கூறுவாறினர். தெரியாதார் "இலத்தினதாழின் மூற்றிய வேல், இலேவேல், எனவுரைப்பர். இவ்வரிய புதத்தைப் புறச்சமயிகளாகிய சமணர் தாமுந் தமது நூலிலே வியந்து கூறியுளார். பத்திரம்—இல, சத்தி—வேல். அன்பர் தனை நீங்கும்படி அருள்சுரந்த வெற்றிலையை வேலாக்கியதனாற் குமாரகடவுள பத்திர சத்தி மூர்த்தி யாயினர்.

தாமவேதம் - தலவகார சாதை.

தலெஹ தூணைநீடுவெ ஹெ ஹெ திசூவை
வெய்யாய் லவஜவெ நசநுமாரகுமாலை

[illegible]

(இந்தத் தருமத்தை உயர் வெறுப்பாயாக வென்று அவ்வாறு தீதற்ற உலகத்து அவன் முன்னர்த் தருமத்தை இயக்க மூர்த்தி இவ்வுத் தன்னாலியலா வெல்லக்குமாறு வாயு கண்முழுவேகத்துடன் விடுத்து சென்றனன். அந்தவெடுத்தற்கு வன்மையில்லாராய் இவ்வுக மூர்த்தியாகிய சிவபெருமானே விட்டு நீங்கி, அவ்வருவலியாலான வல்லமைலை யென்று வேண்டி தேவர்கட்கு உரைத்தான்)


கதிர்காமம் மாஹாத்மியம்.

இகண்டிதமி ழார்வத்தாற் றவம்புரிய காசத்தாற் றென்பாற சேறி, இகண்டவது முனிகூறு மென்னலடைத்து தவன்சாணு சிவ மேற்குடி, யகண்டகலைக் கடலெல்லாக் தவாபபருகி யிசைதறுக்க மாற்றிக்காம, நகண்டபுரி தரிசிபபான் சிடரொடும் வாக்களிறு கறு கிறறன்றே.

மறமிலிற்றிப் பிளிறியொரு தருமுரிதது மறிக்கமுனி யரிட யொறு, சதஞ் செயித்து முருகடியைத் தரித்துலப் பெரியானை நனித்தக்கூறு, நக்கனக்கு மிலேலெய்திய வேலாயுக் கிழித்தது னோர்ந்த சாற்றிப், பதஞ்செலவிவ விவரிலவேற் கடவுளோவென்ப சோற்றிப் பதிக்தார்மன்னே.

சீவக சிந்தாமணி - காந்தருவ தத்தையா ரிலம்பகம். (கூ உ)

கல்லவை புரியும் மார்தர் நாந்தகம் பிழைத்து வீழா
தல்லவை புரியு மரக்தர்க் கத்திரா லொன்றும் வாயா
வெல்லவே குணைத்தின் மிக்கார் வெற்றிலே விடினும் வேலா
றில்லையே வென்றி கைமை யிடரு சொண்டு மனத்தினுர்க்கே.



சிலப்பதிகாரந் - அடியார்க்கு நல்லார் உரை.

இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் சேட்டை மாணாகப் பன்னிருவருட் கேண்டியென்னும் அருந்தவமுனி, இடைச சங்கத்து அந்தலென்னுந் தெய்வப் பாண்டியன் தேரொடு விசும்பு செல்வோனை, நீவோகத்தமை யெனுந் தெய்வ மகளைக் கண்டு தேசிக கூடனவிடத்துச் சனித்தாளைத் தேவரும் முனிவருஞ் சார்யா நிற்கத் தோனனமையிற் சாரதாரை யெனப் பெயர் பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும்.,,

பத்திர சத்தி மூர்த்தியோகும்

இருபத்தைந்தாவது,

பிரணவாசல மூர்த்தி.

பிரணவ வடிவினரும், பிரணவப் பொருளாயிருப்பவரும், பிரணவ அதிபரும் ஆகிய சுப்பிரமணியப் பெருமான் பிரணவாசல மூர்த்தி ஆகிய விவரதையைத் தெரிப்பாம்.

ஒரு கற்பாந்தரத்திலே இருக்கு முதலிய நான்கு வேதங்களும் கலிகாலத்திறுதி அருகில் எம்பெருமானே நோக்கி முறையிடுதலைச் செய்ய அவர் தோன்றி, அவைகளை எண்ணெய்ப்பசு, காஞ்சிராக்காய்க்குக் கிழக்கே ஒருபாங்கருள்ள அக்கினி மூலையில் இருப்பதாகிய யெழுத்தருளினார். வேதாசலம் என்பதும், திருக்கழுக்குன்றம் என்பதும் அதுவே. வேதங்கள் இவ்வண்ணம் வரம்பெற்றனதறிந்து, சிவப் பிரணவம், சத்திப் பிரணவம், சத்திசத்திப் பிரணவம், மாயாதிப் பிரணவம், ஆதிப் பிரணவம், அரதிப் பிரணவம், ஈகாரசப் பிரணவம், சகசம், சகசாரம்பம், சகசாரம்பாதீதம்,

103

அகத்தசேது, அகத்தோதியதீதம், அதிகாணந்தம், அதிகாணத் தாதீதம், அதிமகாணந் தாதீதோத்தரை, நிர்மலம், நிர்மலாதீதம், சிற்பிரணவம், சிற்பிரணவாதீதம், மகாசிற் பிரணவம், மகாசிற் பிரணவாதீதம், சிதாநந்தம், சிதாநந்தா தீதம், சிறகூடம், சிறகூடாதீதம், சித்வியோமம், சித்வியோமாதீதம், நித்தியம், நித்தியாதீதம், நிராமயம், நிராமயாதீதம், அகத்தபூதம் முதலிய பகுப்பினையுடைய பிரணவங்க ளெல்லாரு சேர்ந்து பசுபதியினிடஞ் சார்ந்துவணங்கி, கயிலாய பதே! கங்காதரேச! வேதங்கள் எமமை விடுத்துத் தவஞ் செய்து மலியாகும வரமடைந்தன. எமக்கு இருப்பிடம் யாது என்று விண்ணப்பஞ் செய்தன். வேற்முருகவ் ராகிய சிவபெருமான் அவற்றை நோக்கி, "நம்மைத் திருவுருவாகவுடைய நங்குமரனிடஞ் செல்க" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பிரணவங்கள் வியாக்கிரசர மர்த்தனாகிய முருகக் கடவுளை யடைந்து வணங்கித் துதித்து உற்றது கூறின. அவர் உத்தரவருளியபடி யுத்தமாபுரி, சமாபுரி முதலிய பெயர்களையுடைய திருப்போரூரின்கண் சென்று, வள்ளியாரோடை என்னும் பொய்கையின் முழுகி, ஈசான திசையிலே தம்பெயராற் பிரணவாதீதம் எனவழங்குந் தீர்த்த மொன்றெத்தி, அதனீரால் முருகனை யபிஷேகித்துப் பூசித்தன. சண்முகக் கடவுள் சுயம்பு மூர்த்தத்தினின்றும் தோன்றி, தம்மை வணங்கிய பிரணவத் தெய்வங்களைத் திருக்கடைக்கண் நோக்கஞ் செய்தருளி, இயந்திர மந்திரங்களால் நீர் சூழ்ந்திருத்தல் போல, இருநூறமது பிற்பக்கத்திற் சூழ்ந்து மதிலாவடிவாக விருத்தியொன்று மமையாக்கி, அதனுட்சியில் யாதும் இடைவிடாது வீற்றிருக்கின்றேம். ஈந்தீரா நோடி என்னுந்தலத் திற்மதிலாவடிவாக வினங்கும் வேதங்கள் ஈசதிடதங்களோடும் மந்திர சந்தசுகளோடும் சரடோறும்; இவண் வந்து நம்மைச் சேவிக்கும். திருக் கழுக்குன்ற மாகிய வேதாசலத்தைத் தரி

சிப்போர் நம்மை முதல் வணங்கிப் பின்னர் அதனை வணங்குவா ராயின் அவர் பிறவித் துன்பங்களை நீக்கி நம்முடன் இரண்டறக் கலக்கும் பேரின்பமாகிய அத்துவிதானந்த வாழ்க்கையை யளிப் பேம் என்றும் வரமளித்தார்.

தந்தையா ராகிய சிவபெருமான் வேதங்களை மீலயாக்கி யமர, மைத்தார்கிய தாம், வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் மந்திரங் களுக்கும், ஏனைய உலகங்கட்கும் முதலாகிய பிரணவத்தை மீலவழ வாக்கி வீற்றிரும் தருவலாற் சாவணேம்பவ சுவாமி பிரணவாசல மூர்த்தி யாயினர்.

* திருப்போரூர்ப் புராணம்.

யுத்த மாபுரி யுயர்சம ராபுரி போரூர்
யுத்த வாங்கிரிப் பதிபிர ணவபுர மொருவா
லைத்த வின்னன பெயர்கொளுந் தகுமிது வாய்மை
யுத்த லத்தலை தீர்த்தமொன் றதன்வளங் கேட்டி.

திருப்போரூர்த்தல வேண்பா.

பிரணவங்க ளீசனருட் பேச்சரனே போரூர்க்
காணங்கள் சான்றே கடுநோன்—பாணமுடன்
செய்யசெவ் வேண்மலியிற் செய்ததனிற் சுகிலமா
வுய்தற் கிருக்கு முவண்.

பிரணவாசல மூர்த்தியே நமக்.

---

* இத் காலத்தப் பிரணவாசலம் என்பது, திருப் போரூர் என வழங்கப்படுகின் றது. போரூர், சமரபுரி, யுத்தமாபுரி, தாரகபுரம், பிரணவபுரம் எனபன அதன் பன்மாயப் பெயர்ச் சூரும். இப் பிரணவ மலைக்கட் சிவபெருமானும் வீற்றிருக்கின்றார். இது செங் கற் பட்டுக் கல்லாவிலே திருக்கழுக் குன்றத்திற்குச் சமீபத்தி லுள்ளது. திருப் புகழ் பெற்ற தலங்களுள் ஒன்று.

104

இருபத்தாருவது,

இலிங்க தலேச்சுர மூர்த்தி.

அன்பர்கள் சோபான முறைப்படி யதுட்டித்து மேல்தாயுள்ள நிருமல விலிங்கத்தில் வந்தகாலே அவர்க்கு முத்தியுண்டென ஆகமங்கள் கூறுகிற்கும். அவ்விலிங்க தலங்கள் நூற்றொன்றாகும். இவை முத்தித் தலத்திற்குக் காரணமாகும். விபூதித்தலம், உருத்திராக்கத்தலம், பஞ்சாக்கர தலம், பத்தத் தலம், உபயத்தலம், திரிவித சம்பத்துத் தலம், சதுர்விசாரதலம், உபாதித் தலம், நிருபாதித் தலம், சகசத்தலம், மகேசுரத் தலம், இலிங்கநிட்டைத் தலம், பூர்வாசரிய நிரசனத்தலம், துவித நிரசனத் தலம், ஆவாகன நிரசனத் தலம், அட்டமூர்த்தி நிரசனத்தலம், சர்வகத நிரசனத் தலம், சிவசெகதலம், பக்த தேகித்தலம், பிரசாத்தத்தலம், குருமகாத்மிய தலம், மகேசலிங்க மகாத்மிய தலம், மகேச சங்கம மகாத்மிய தலம், பக்த மகாத்மியதலம், சரணமகாத்மியதலம், பிரசாதமகாத்மியதலம், பிராணலிங்கத்தலம், பிராண லிலிங்கார்ச்சனைத் தலம், சிவயோகசமாதித்தலம், இலிங்கசிரத்தலம், அங்கலிங்க தலம், சரணத்தலம், தாமதநிரசனத்தலம், நிர்த்தேசத்தலம், சிலசம்பாதனத் தலம், அயிக்கத்தலம், அத்துவிதானந்த வயிக்கத் தலம், சர்வாசாசம்பத்துத் தலம், சகபோசனத் தலம், தீட்சாகுருத்தலம், சிட்சாகுருத்தலம், ஞானகுருத்தலம், கிரியா லிங்கத் தலம், பாவலிங்க தலம், ஞானலிலிங்க தலம், பக்த சுயதலம், பக்த சாத்தலம், பக்தபரதலம், பக்தலிங்கதலம், கிரியாகமத்தலம், மகேசபாவகதலம், மகேசுரமெய்ஞ்ஞானதலம், மகேசசகாயதலம், மகேசராகாயதலம், மகேசபாகாயத்தலம், தருமசாரதலம், பாவசாரதலம், ஞானசாரதலம், பிரசாதிகாயாதுக்கிரகதலம், இச்சிரியாதுக்கிரகதலம், பிராணதுக்கிரகதலம், பிரசாதிகாயார்ப்பிதத் தலம், பிரசாதி காணர்ப்பிதத்தலம், பிரசாதித்தலம், பிரசாதிபாவார்ப்பிதத்

திருவிளங்கு தடுக்கு சக்ர நிருத்தி.

105

தலம், சிருஷைத்தலம், பிரசாதி சேவியத்தலம், பிராணலிங்க தலம், பிராணலிங்கி யக்தராத்மதலம், பிராணலிங்கிப் பரமாண்ம தலம், பிராணலிங்கி நிர்த்தேகாண்மதலம், பிராண்லிங்கி நிர்ப்பா வகாத்ம தலம், பிராணலிங்கி சட்டாகம தலம், ஆதிப்பிரசாதித் தலம், அந்திய பிரசாதி லிங்கதலம், சீட்சாபர் தோத்தகத் தலம், அங்குட்ட பாததீர்த்தத்தலம், சரணசிட்சா பாதோதகத் தலம், சர ணஞான பாதோதகத் தலம், கிரியாசிட்பக்தித்தலம், சாணபாலசிட் பக்தித் தலம், சரணசிட்பக்தித் தலம், சரண பிண்டாகாசத் தலம், சரண விந்தாகாசத் தலம், மகதாகாசத் தலம், கிரியாப்பிரகாசத் தலம், பாவப் பிரகாச தலம், ஞானப்பிரகாச தலம், சுவிகிர்தப் பிரகா சத்தலம், அயிக்க சிட்டோதனத்தலம், சராசரத்தலம், அயிக்கபாண் டத்தலம், அயிக்கபாசனத்தலம், அயிக்க அங்க லேபனத்தலம், அயிக் கசுபாரஞ்சத்தலம், அயிக்கபாவா பாவலயத்தலம், அயிக்கஞான சூனி யத்தலம், சூனியத்தலம் என்பனவாம். இவற்றின் விரிவெல்லாம், வீராகமம், இலிங்க சோபானம், மதங்காகமம் என்னு மிவற்றிற் பார்க்கக் காண்க.

இவைகளின் நின்று நின்று மேற்போய காலத்து முத்தியுண் டாம். இவைகள் எல்லாம், பாலிங்கதலம், பக்தலிங்கதலம், மகேச லிங்க தலம், பிரசாதிலிங்க தலம், பிராணலிங்கி தலம், அங்க லிங்க தலம் என்னும் ஆறினுளடங்கும். அவை ஆறு இலிங்கத்தி னும், அவை சாதாக்கியம் ஆறினும், அவை கலைக ளாறினும், அவை சத்திகள் ஆறினும், அச்சத்திகள் முருகக்கடவுளின் ஆறு திருமுகங்களினும் அடங்கு மென்க.

இங்ஙனம் முத்தியுபாய மாகிய சத்தி, கலை, சாதாக்கியம், இலிங்கம், அறுதலம் என்பவற்றுள் ஈற்றிரண்டு தலத்தினையுங் தொ இத்தத் திருவடிப் பேறுதலும் சச்சரரய் விளங்கலின் இலிங்கதலே சிகாமணித்தி யாயினர்.

106

இலிங்காபிர்தம்.

மூவி ரண்டு முகத்தினுஞ் சத்திகண்
முன்னர்த் தோன்றக் கலைகள் சதாக்கிய
மாலி ருத்துரு வாகு மிலிங்கமவ்
வவற்று துற்பெரு மெய்த்தலங் காணுமே
தெலி ருந்த வவைதரி சித்தபேர்
செப்பி லிங்கத் திலிங்கம தாவரே
சுவி ருத்த தலமிவை கொள்ளவே
கூறு மாகம முண்மையிர் கொள்விரே.

இலிங்க தலேச்சுர மூர்த்தயே நமஃ

இருபத்தேழாவது,

மூடை நாமக் குமார மூர்த்தி.

* சோழ நாட்டிலே சைவ வேளாள குலத்திலே பிறந்து, திருச்சிராப்பள்ளி கோட்டத் துறையூர் சேர்ந்து, முத்தமிழிலும் வல்லராய், சிவபெருமான் ஒருவரையன்றி வேறெவரையும் பாடாது சிவபத்தியின் முதிர்ந்து விளங்கினமையாற் சிவகவி எனப் பெயரிய ஒருபுலவர் இருந்தார். அவரிடத்து ஓர் குகனடியார் சென்று, நல்லிசைப் புலவீர்! வேலாயுதக் கடவுள் மீது ஒரு பிரபந்தம் பாடித் தந்தருள்க என்றார். சிவகவி யாகிய தொய்யாமொழிப் புலவர் "ஐய! சிவபெருமானன்றி எந்நாவாணது மதற்

* தென்பாண்டி நாட்டிலே யுள்ள பொய்யாமொழி என்னும் ஊர்ப்பிறந்தார் என்றும், அவ்வூர்ப் பெயர் முன்னைத்தப் பொய்யா மொழிப் புலவர் என வழங்கப்பட்டார் என்றும் முரைப்பாரு முளர். "தொய்யா! மொழி" என்பது, "குஞ்சரப் பாடலிட்டே" என்றதை, பொய்யும் மொழி எனவுஞ் சப்பிரமணியப் பெருமான் உளத்திலை பற்றி யிருப்பதென்பது பலர் கருத்து.

பக்கம் 10 (2 ஆ)

607

(பி.ஐ.எல். சாயக் குளாரிஞ்சி.)

No. 2. Bixa Orellana.

தம் பிறரைக் கூறுது சிவனுடைய சேவற்கு ஒரு சிறகுள்ள பொன்ற அவனை நக் காப் பாடாது, என்னூர் அடியவர் வருந்தி, "தக்கரத் குஞ்சினுக்கும் பாடும், கழுக்கும் பாடும்" என்று, பெருமான் திருக் கோயிற் சந்நிதி சென்று, தக் தாவுணத்தை யடியனேன் பொறுக் கவில்லேன். புலவன் அகங்காரத்தைப் போக்கியருளல் வேண்டு மென்று செவ்வேளை யிரந்தார். பெருமானர் அவ்வண மாக வென்று றறித்தருளி, சிவதுவியார்க்கு மிடியைப் பெருக்கினர். புலவர்,

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கலிவந்த சொல்லியர்மேற காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

என்ற முதுமொழிப்படி, வறுமை வாவரப் பெரிதும் வருந்தி, தஞ் சைமா நகரத்திலரசு புரிந்த இருங்கை பண்டத்த கற்பக தருவைப் போன்ற சந்தீர வாணன் என்னும் அரசன் வண்புகழை யெங்கு மகப் பொருட் படுத்திக் கோவைபாடி யாங்கேற்றினர். அரசன் ஒவ்வொருபாடலுக்கும் ஒவ்வோர் தேங்காயளவு பொன்கொடுத்து வேண்டிய பெரும் பொருள்களும் பரிசாக அளிக்கப்பெற்று, வறி யார்க்கு மிகுதியாகக் கொடுத்து, எஞ்சிய சிறிது பகுதியைக் கைக் கொண்டு வழிநடந்து வரும்போது, மனுடர் சஞ்சரிப்பில்லாத அருஞ் சுர மெனப்படும் பாலை நிலம் நேர்ந்தது. ஆங்கு வெயில் வா தனை யாற்றாது விளைவுடன் நடக்கையில், குமாரக்கடவுள் அவ ரைத் தடுத்தாட் கொள்ள விரும்பி, திருக்கரத்திலே வேலும் வில் லும் அம்புகளுமெ ந்தி, காலிற் றொடுதோல் மாட்டிக் கார்மேகம் போல் வேகமாய் நடந்து ஆப்பரித்து ஓர் வேடராக வந்தார். புல வர் கண்டு நெடுங்கி, "அந்தோ! பொருளாசை கொண்டு வந்து, பெற்றக்கிய உயிரையும் இழக்க நேர்ந்ததே பாபமதி! நின்னையன் றிப் பாடாத விரதத்தை வழித்து நிருபனைப் பாடினமையால் வந்த தண்டமோ? என் செய்வே" னென்று நடக்குவ தாகி, வேடரை

ஆட்டாதில்லை என்று விளித்தார். அது கேட்டு இடிகேட்ட சர்ப்பம்போல் எங்கி பயிரிடிப்பார் போல் நின்றார். வேடமூர்த்தி சமீபித்து நீ யாவன் என வினவ, புலவன் என்றார். குமார சுவாமி யாகிய சாத மூர்த்தி நகைத்து, புலவன் என்னும் பெயர் நக்குறிச் சித்தெய்வமாகிய செவ்வேட்டனைக்கு ஏற்கு மன்றி வேறியாவர்க்கு அடுக்கும்? ஒரு சிறிது அத்தெய்வத்தின் மாணவன் ஆகிய அசத்தி யற்குஞ் சேறும். நீ புலவன் என்று மொழிவு தெமக்கு வியப்பே. ஆயினும் நினக்குச் சவி வருமேல் வென்றார்.

புலவர் அவ்வார்த்தைகளைக் கேட்டுப் பயங்கி விம்மித மூற்று, இத்தகைய வேடன் பொருளைக் கவர்வானன்றி யுயிரைப் பருகான் எனத் தேறி, உன் பெயர் என்னென்றார். என்பெயர் மூட்டை. அப்பெயருக்கு, இங்கிலமும், கூரம் போர்த்துந் துறையும் அமைய வெண்பாவிற் "பொன் போல்" என்று தொடங்கிமுடித்தி யென்றார். பொய்யா மொழிப் புலவர் உடனே,

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் சானலிலே
யென்பதை கெல்லற் கியைந்தனமே—மின்போலு
மாரைவேன் மூட்டைக்கு மாறிய தெவ்வர்போங்
காரைவேன் மூட்டைக்குங் காடு.

எனப்பாடினர். வேட மூர்த்தியாம் மூட்டை நகைத்து, * புல வன் என்பது இனையினில் ஆயிற்று. நின்கவியிற் சொற்குற்றம் துவளினும், மிகையாம் பொருட் குற்ற மொன்றினைக் காட்டுகின் றும். சதுரக் கள்ளிச் செடிகள் எரிந்து பொறிபறக்கும் பெரு நெருப்புமிக்க காட்டினிடத்தே, சிறுகெருப்பிறகுத் தானும் வெந்து சாம்பாராகும் வேலமாத்து மூட்களைத்தல் யாங்ஙனம்? ஆதலாற்

* புலவன் என்பது இடையினில் ஆயிற்று எனக் கொண்டு, புல்லவன் ஆகை எனவும், மேலே அப்புலனைத் தன்னை இலதாயிற்று எனவும் வேறு பொருள்படலாகு மென்றது. இவ்வண்ணமே புலவர் பராக்கிரமத்தையே பிறரும் பேதமுறச் சொல்லுக.

பொய்யாம் மொழிப் புலவ ஞயினை நிற்க, யாம் பாடுகின்றேம். அதன்கட் குற்ற முளதாயிற் றெரித்தி. அக்கவியில் நின் பெயரும், பாலைநில வருணனைகளும், உரிப்பொருளும், இலக்கற நுறையும் அமைவதன்றி, மீ குற்றத்துட் டவறி, விதத்திற் றவறி "விழுந் ததுபோல்" என்னுங் கூட்டுமணமைப் பார்க்கின்றும் என்று;

விழுந்ததுளி யந்தாத்தே வேமென்றும் வீழி
னெழுந்து சுடர்சுழி மென்றுஞ் செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வனையுஞ் சென்றன்னே
பொய்யா மொழிபகைஞர் போல்.

என்னுக் தீநுவெண்பாவைக் சொல்லினர். பொய்யாமொழிப் புல வன் நீயா, அல்லது யாமா எனைக் கேட்டனர். புலவரர் என்று மடையாத அதிலியப்புக் திகிலு மவட்டுந் வேடனை வினங்கினர். வேடர், புலவ வருந்தலே என்று தமது வடிவத்தைக் காட்டி, அன் றொருநாள் நமது அடியவன துதிகூறுக என்ற கேட்ட காலத்து, "கோழியைப் பாடிய வாயாற் தஞ்சினைப் பாடேம்" என்று இழித் தனை யன்றே! இப்போது கோழியினுங் குஞ்சினும் மூட்டை பெரிதாயிற்றே? யாமுஞ் சிலமும் வேறல்லேம். எம்மையும் அவனை யும் புராணுதிகள் மைந்தன் றந்தையெனக் கூறுவது உசாரமே. சிவாகம வேதங்களி னுண்மைப் பொரு டெரியாதனையால் எம்மை வேறாக எண்ணினை. சித்தாந்த வுண்மைகளைத் தெளிந் துய்தி அகத் தியனிடத்து,, என்று ஓதி மறைந்தருளினார். புலவர் பொதியஞ் சென்று தவங்கிடந்து அகத்திய முனிவருழை யவ்வுண்மை வினங் கப் பெற்றுக் குகேசன் திருவரு ளடைந்தார்.

"குஞ்சினைப்பாடென்" என்று இழித்த புலவனைப் பொய்யா குமொழி யாக்க வேடவடிவு கொண்டு, மூட்டையென்னும் பெயர் சொல்லிப் பாடுவித்து ஆட் கொண்டமையால் மூட்டைகாமக் குமார மூர்த்தி யென்று உலகங் கூறுநிற்கும்.

பட்டினத்துப் பிள்ளையார் புராணம்.

வாரத் தான்வரு மமரிட மெனுப்பொடித் தனற்றி
வாரத் தான்வரை வளைங்கனீ ரெனவுசி வரையன்
வாரத் தான்வரு பாடல்சொல் லவன்றன்மேன் மலர்வாய்
வாரத் தான்வரப் பெற்றவன் வளவனுட் டவனே.

புலவர் புராணம்.


பொருவாதுயர் சுவைதோயகப் பொருட்கோவைசொ லிடையே
மொருபாடலுக் கம்பொன்னொரு தேங்காயள வொப்பப்
பெருகார்வமொ டுதவிப்பிற பொருளும்பல பெய்தா
னருகோர்துணை யில்லாணவை கொடுவீதிய லைந்தான்.

ஆயினன்பெயர் முட்டையா மென்மிசை
யருந்தமிழ்க்கவியொன்று
தியினுங் கொடிதாய விப்பாலையின்
நிறத்தொடு பகரென்றுன்
வாயியம்புமுன் பொன்புரை கள்ளியின்
வன்பொறி யுருங்கானிற்
போயினுள்ளிறு பேதைவேன் முட்டையைப்
போற்றலா செனவக்தோ.

குஞ்சின் மேற்கவி பாடிடே னென்றதிற்
குறியமுட் டையைப் பாடற்
கொருஞ்சி லானது கேட்டுன காணிமத்
தொருருவ நின்மையை யுன்னி.

வேட்பாடல் கேட்டப்பெரும் புலவன்றன
வெட்க மிக்குறும் வேலை
யாடன்மாமயிற் பரியிற்றன் கோலமா
யாவையு நிருவோருங்
கூடவைகுறத் தேவர்கள் சூழ்தரக்
குலவு சேவைய நீத்தான்.

முட்டைநாமக்குமார மூர்த்தயே நமஃ



சகந்திராண்ம பரிபாலனமுற்த்தி.

இருபத்தெட்டாவது,

சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி.

மதுரையிலே * கணக்காயன் மகனார் நக்கீரர் என்பார், சரசுவதியம்மையாலே கலைகளில் மாபெரும் புலவர் பிரானார். முச்சங்கத்துட் டிருவாலவாய்க்கணிருந்த கடைச்சங்கம் உண்டாயபோது சங்கப் பலகையில் முதன் முதல் ஏறி வீற்றிருந்தவர் இவரே. சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின்மருள் நடு நாயகமாக வீற்றிலிலரும் இவரே. இத்தகைப் பெருந்தகைப் புலவர், திருவாலவாயடிகளாற் செய்தருளப் பெற்ற,

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முள்வோ வறியும் பூவே.

என்னுஞ் சீர்மிகுப் பாசுரத்திலே குற்றங்கூறி, ஆலவாய்க் கடவுளுடன் நேர் நின்று வாதித்தார் பெருமானார். "இவனுக் கிலக்கணமுஞ் செவ்வனே தெரிந்திலை" என்று, அகத்திய முனிவரையழைத்துப் போதிப்பித்தருளினார். ஆகலே யிந்நக்கீரனார் அகத்தியனார் மாணாக்கரு மாவர். அகத்திய முபதேசங் கேட்ட வக்கணமே தாம் வாதித்தனவெல்லாம் வெறுமையன வென்றுணர்ந்து பரிவுற்றுச் சிவபெருமான் மீது அன்பு செய்து வழிபடுவாராயினர். ஒருநாள் மதுரைக்குச் சமீபமானதும், குமாரக் கடவுளின் ஆறுதிருப்பலை வீடுகளு ளொன்றுமதும், தெய்வயானை யம்மையாரை இறையவன் திரு

* கணக்காயர்—உபாத்தியாயர், மதுரையிலே செந்தமிழ்த்தில் ஒரு பாவலருக்கு மகனாய்ப் பிறந்தார் என்றும், பால்ப்பன் என்பது அவரது பின்னைத் திருநாம மென்றும் "கல்லாடப்ப தெல்லாமுலகம்" எனும் பாடலை நக்கீரர் பாடியதாகச் சொன்னதோடு மனிதப் பிறவென்றுக் கூறுவார் சிலர். சில நூல்களுள் இன்னவாறிருந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

111

மணஞ் செய்த தலமானதும், பிரிச் சக்கிரவர்த்தி அரிச்சந்திரன் முதலாயினோரால் பூசிக்கப்பட்டதுமாகிய திருப்பரங்குன்றத் தெய்வத்தைத் தரிசிப்பான் சென்றார். ஆங்குள்ள சரவணப் பொய்கையில் ஸ்நானஞ் செய்து நித்திய கருமமுடித்து, பஞ்சாக்கரப் பாறை யென்னும் பெயருடைத்தாய் அரசமர நிழற்கணிருந்த வத்தலக்கணிருந்து பஞ்சாக்கர செபஞ் செய்யா நின்றார். * சீகாளத்தி புராணம் ஞாலப் பூங்கோதை யம்மையாராகத் தேவியார் திருக்கூந்தலுக்குஞ் இயற்கை வாசனை யில்லை யென்று உரைத்தமையினாலே கங்கையாற்குக் குஷ்ட நோய்வந்தது. அது கைலை தரிசித்தாற் றீருமென்று சிவனருளைத்தலாற்றுற் கைலைக் கேகுவாராய் இமயமலைத் தடாகத்தினருகுள்ள ஆலமரத்தி னீழலி லுட்கார்ந்தாரென்று கூறும்.

இங்ஙனஞ் செபஞ் செய்து சிவபூசை இயற்றுங் காலத்தே சததளத்தாமரை மலர்கள் விளங்குஞ் சரவணப் பொய்கைக் கரையிலே யுள்ள அரச மரத்தி லோர் விசேட முண்டு. என்னை யெனில், அதன் இலைகீழே விழுங்கால், நீரிலே வீழின் மீனுகவும், நிலத்திலே வீழிற் பறவையாகவும் போதல் வழக்கம். அற்றைப் போது வீழ்ந்த இலையோ பாதி நிலத்திலும், மற்றோர் பாதி நீரிலும் விழுந்தமையால் ஓரதிசயங் காணப்பட்டது. என்னை? நீரில் வீழ்ந்தது மீனாகி நீர்க்குட் செல்வான இழுப்ப, நிலத்தில் வீழ்ந்த மற்றைப பாதி பருந்தாகி மேலே பறப்பான் இழுப்ப வீண்டும் இன்னற்படுவதை யறிந்த கச்சியர் பார்த்து மனமுருகினர். அவற்றின் துன்பத்தைக் கேட்டல் மேலான புண்ணிய மாகு மென்று நினைத்து

* இக் கச்சியர் சரித்தரத்தை கொளத்தி புராணம், திருப்பராய்துறைப் புராணம், புலவர் புராணம் எனபன பலவேறுபாடுறப் பகர்ந்தன. கச்சியர் காசத்திலிருந்த நகரம் கச்சியென்ற வழியினிதி கொர்ந்தென்றலுமொன்று. திருப்பரங்கிரிப் புராணம் நிலத்திலே வீழ்ந்த பறவையாயினை, புலவர் புராணத்தார் நீரினென்றார். அது நிற்க, இந்த வரலாறு வேறொன்றை சீர்வ பல்குபரி னையிலிற் பாதிபர் புகுமு மீடை நேர்ந்தி யானோ நிகழ் மகு மிழுக்கை கண் டானேரோ? என்ற செய்யுளாற் றெளிக. வெவ் வேறு சரித்தர சேவனம் பல வேறு பாலைத்தலினது கருதற்க.

தாஞ் செய்திருந்த பூசையை முடிக்காது இடையே யெழுந்து சென்று பறவை வேறுகவும், மீண் வேறுகவுந் செல்லுளாறு கூறுக்கி வாராநின்றார்.

அதற்கு முன்னரே யிவர் போற் சிவபூசையி னின்றுந் தவறினர். தொளளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மரை யெடுத்துத் தம்மலைக் குகையுள் அடைத்து, உண்ணுதற்கு இன்னும் ஒருவர் குறைந்தமையால், குறித்த அரனிலையை நிலத்திலும் நீரிலும் பாதிபாதியா விழுமாறு கிள்ளி யெறிந்து நக்கீரைத் தாக்குதற்காக விருந்த * அண்டாபரணன், உக்கிரன் என்னும் பூதங்கள் அவரை யெடுத்துச் சென்ற தம் மலைக் குகையி னுள்ளே வைத்து, நீராடுவான் சென்றன. அக்குகையி னுள்ளே யமர்ந்த வவ்வெல்லாம் எக்கமுற்று நக்கீரரிடம் வந்து சூழ்ந்து வணவாரா யினர். பாவியே! எமன் போல இவண் வந்தனையே. இங்ஙன் நாறும் பூதங்களாற் கொடுக்கப்பட்ட சீரிய வுணவுகளை யெல்லாம் விலாப் புடைக்க நன்கு புசித்து மகிழ்வுற்றிருந்தேம். இற்றைத்தினம் நங்களுயிரைப் பறிக்க வந்தனையே. ஐயகோ! என் செய்கேம் பூதங்களை நீராடுவான் குகையை யடைத்துச் சென்றன. வந்தது மொருசோ விழுங்குமே யென்று வருந்தா நின்றனர்.

நக்கீரர் குமாரக் கடவுளை நினைந்து அன்புடன் றுதிக்கத் தொடங்கி யவர்களைப் பார்த்துச் சொல்வார். அன்பர்களே! ஒன்றற்கும் நீவிரஞ்சற்க. திருவருளானே யறுமுகப்பரம் பொருளை யறியலாம். ஆகம அநுமானநிகளாலுந் தெருண்டு வாழலாம். ஆனந்தநுபவ மடையலாம். மலமாயா கன்மங்களா லுண்டாகுந் துன்பங்களையும் போக்கலாம். குரார பக்தர்களாகிய தூயரோடன் கூடும் வாழ்வைப் பெற்றேம். நங்களையும் உயிர்பிழைக்க செய்வே மென்று சுகபரப் பிரமத்தின் மேற் றுதிகூறத் தொடங்கினர். பிரமா, விட்டுணு, காலருத்திரர் என்னு மூவரையும் அதிட்டித்துச் செய்யும்

12

மூத்தொழிலையு முடையது உலகம். தாலகிருத்தியத்தையிவர் அதிட்டான வாயிலாற் செய்து, சூக்கும கிருத்தியத்தைத் தாமாகவே செய்து ஞான, தான, கிருத்திய தார தம்மியங்களாற் பலவகைப்பட விளக்கும் பாமபதி உலகப் பொருள்க ளெல்லா முவப்பவருள் செயற் பால ரென்னுங் கருத்தை யமைத்து "உலகழவப்ப" எனத் தொடங்கி, முதலாவது படைவீடு திருப்பரங் குன்றுகக் கொண்டு துதித்து, மற்றைய திருச் சீலைவாய், திருவாவி னன்குடி, திருவேரகம், பழமுதிர் சோலை, குன்று தொருடல் என்னும் திருத்தலங் களைவைத்து அகவற்பாவாற் றுதித்து முற்றி, இறுதியில் வெண் பாக்களுங் கூறினர். அவை வருமாறு:—

நேரிசை வெண்பா.

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையா—யென்று
மிலையா யழகியா யேறூர்ந்தா னேறே
யுலையா வென்னுளத் துறை. (க)

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமாரிடர் தீர்த்ததுவு—மின்றெனக்கை
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல். (உ)

வீரவே ருரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை. (ங)

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலே வாங்கத் தகும். (ச)

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வாஞ்சோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திலாழ் வே. (நி)

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமாந் தோன்றில் வேலொன்று—நெஞ்சி
லொருகா னிலைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோது துவார் முன். (சு)

முருகனே செந்தின் முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
றம்பியே தின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னான். (எ)

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா னிரக்கா யினி. (அ)

பாங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். (க)

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினேன்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும். (கo)

ன முடித்தித் திரு முருகாற்றுப் படை யென்னுந் திவ்விய பிர
ந்தத்தைத் தத்துவங் கடந்த தனிப்பரம் பொருளாகிய கந்தழி
யென்னுங் கந்தக் கடவுளின் றிருவடிமீது சாத்தினர்.

113

சுப்பிரமணிய பராக்கிரமம்.

முருகக் கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி, வேற் படையை விடுத்து, அம்மலைக்கண்ணே யின்று மிக் கலியுகத்தோர் காணும்படி பாறையைக் கிழித்து, பூதங்களையு மோட்டிக் கிரவுஞ்சனென்றருளினர். "பூதம் உண்ணவந்த போது வேலாயுதக் கடவுள் அதனைத் தண்டத்தாலடித்துக் கொன்று மலையையு மோதிப் பிளந்து வெளிப்படுத்தினர்" என்று திருக்காளத்தி புராணங் கூறிற்று. * நக்கீரரும் மற்றையோரும் போனந்தத்துடன் வெளிப் போந்து ஆடினர்; பாடினர். பிரமவிட்டுணுக்களிருபத்தத்துத் துதித்து நிற்ப, பூதகணங்கள் புடைசூழ, தேவர் முனிவர் வணங்கி வணங்கி யெழ, மயில்வாகனத்துத் தேவிமார் சகிதமாய் விளங்கியருளிய சுப்பிரமணியப் பெருமானுரை நக்கீரர் தரிசித்துப் பரவச மடைந்தார். பெருமானர் நக்கீரனுரைத் திருநோக்கஞ் செய்து, "அன்பனே! நினக்கு என் வேண்டும். கூறுதி தருதும்" என்ன, நக்கீரர் கூறுவார். "தேவரீர் திருவருளாயடைந்த வெற்கு இனிவேண்டப் பெறுவதூஉ மொன்றுளதோ, ஆயினும் அன்பர் பலர் காசியிற் கங்கையை மீண்டழைப்பித்தருளல் வேண்டு மென்றனர். அதனை யங்ஙன மழைப்பித்துத் தால்வேண்டு" மென்று பிரார்த்தித்தார். குகபரஞ்சுடர் அங்ஙனே யழைப்பித்து மலையுச்சியிலே காட்டி, கங்கை யென்பதற்கு அடையாளமாக ஐவகை நிறமுடைய தேளி மீன்கள் இருத்தலையுங் காட்டி மறைத்தருளினர். நக்கீரரும் பிறரும் அதன்கண் தோய்ந்து அவனைப் பூசித்திருந்தனர். வேலாற் பிளக்கப்பட்ட பாறை இன்றும் வேலெறிந்த பாறை யெனச்சொல்ல இருக்கின்றது.

---

* "வெஞ்சமரி லஞ்சலென வேருன்றும்" எனவுஞ் பாடம். சில பிரதிகளிலே ஏழு செய்யுள்களும், சிலவற்றிலே இப்பத்துச் செய்யுள்களுஞ் காணப்பட்டமையால் அவை களையுங் காட்டினும். இத்திரு முருகாற்றுப்படை பத்துப் பாட்டுள் முதலாவதாய்ச் சேர்க்கப்பட்டது. பதினொரு திருமுறைத் திருவருட் பாக்களுள்ளு மொன்றாக நம்பியாண்டார் நம்பிகளால் வகுக்கப்பட்டது. இதற்கு ஆசிரியர் நக்கீரரென்பர். செய்தனர், இது பாராயண நூல்களுள் ஒன்று.



"பின்னர் முருகக்கடவுள் ளாஞ்ஞைபாலே அவ்விமயமலைக்கு ணுள்ளதோர் தடாகத்தின் முழுக, அது பொன்முகலி நதியின் கரையேற்ற எறித், திருக்காளத்தி மலைசென்று அந்தாதிபாடிக் குட்டநோய் நீங்கப் பெற்று முத்தியடைந்தன" வென்று திருக்காளத்தி புராணஞ் செப்பிற்று.

பூதங்களால் அடைக்கப்பட்ட ஆயிரவரை மலைக் குகையைப் பிளந்து காத்தருளினமையாற் சுப்பிரமணியக்கடவுள் சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி ஆயினர். சகத்திரம்=ஆயிரம். ஆன்மபரிபாலன=ஆன்மாக்களைக்காத்த, மூர்த்தி=திருவடிவினர் என்பதாம்.

மகிம்ந ஸ்தவம்.

கதீகஃ வம்ய நஜ உதிஹி ரவாஜு நஹு யொரகவுர்
வ தரூயகுகிக ஈவியதெ ஹ்ரு-கீரவிஹகவா ஏ வொ த
வ்ஃ கதிவிபஹாணஃ கவ ஏவ்டபஃ வதெகு வாவீ நவ
தகிநகிஃ கவ ஏ நவஃ ।

ஆதித்தியபுராணம். (பிரமகைவர்த்தம்.)

யஃ ஜுயாஜமஹவ வூவிஜிஞ்ஃ வாஜ்கொவாரிஃ
வஃவதத-ரகாயரா-ஜுவெ ஏ நதிஹு வ்ஹெவிகாகிவெ நஃ
வ்ஹெரணுஜு ஏவதி-ஹ்வாவ்ஹவிவ்ஹாடிவெ வெ ।
வாஃஜகாவ்ஹஸ்ஃ ஏ)ஃவ்ஹாவ்ஹாகுவாஜஹு தாவிவாஃ ।

திருப்பரங்கிரிப் புராணம்.

அப்பணிதஞ் சாத்தேத்து யப்பணிவோ னருவகுமர னருளெ
ண்ணச், செப்பரிய கைகீரன் காலைப்பூண் தாவகுடைத்து திரு
நீட்டுக், கப்பெழுத்த திருவாசி வீழலிலே மருவுபஞ்சாக் காவெண்

பாறை, யொப்பரிய தலனிருந்தே யஞ்செழுத்தை யுருவிய,
புறைந்தகாலை.

திருவாசி னிலேச்சருகு தெண்ணீரில் விழும்பொழுது சே
கும், பொருகரையில் விழும்பொழுது பறவையா மென்றுவரும் பு
தேர்ந்து, மாமுடியிற் சருகதனைக் கள்ளியிட வங்குமிங்கு ம
வீழப், பரியகய லொருபுறமும் பறவையொரு புறமும் பதப்
கண்டான்.

அப்பொழுது நக்கீரன் தமிழ்மாலை யினையோனென் றறை
குட்டச, செப்பரிய குடமுனிவர்க் குபதேசஞ் செலுத்துமெ
செஞ்சொ லாளி, யிப்பொருப்பி லடையாளங் கலியுகத்தோர் க
டடவே லெறியப்பாறை, யொப்பறநே ரேகிழித்தங் கிருபிளவா
பினத்திடவே யுவப்பின் வந்தான்.

திருக்காளத்தி புராணம்.

முருகனைத் தொழுது சென்று சூழ்கிரு னத்தடத்தி
விருவினைக் குறும்பு கொல்லு மிலங்குதென் கயிலைதோன்றப்
பொருதிரைக் கங்கைதானும் பொன்முக ரியினெழுந்தான்
சுரர்கண்மொய்த் தலர்பூமாரி சொரிந்தனர் விசும்பு போர்ப்ப.
பாரும்புலவன் றனக்கொருதான் பரிசுகொடுப்பத் திருவுளங்கொ
டாடும்பெருமா னெதிர்நின்றே யறைதிவேண்டிற் றெனவுடம்பு
கூம்பிணியிங் கொழித்தவருட் குன்றேயென்றும் போறிலை
மும்பிணியுங் களைந்துனது முனரித்தாட்கீ ழிருத்தென்றான்.

அந்தமாதி யிலாக்கயிலை யமர்ந்தபெருமா னந்தாதிச
சந்தமாலைப் புலவனது சத்திபாதத் துயர்சென்யாற்
பந்தபாச மறமாற்றிப் பன்றியுருவாய்க் காண்பதற்கு
வந்தமாலு மறியாத மலர்த்தாணிழலி லிருத்தினான்.

சதத்திரான்ம பரிபாலன மூர்த்தயே நமோ

இருபத்தொன்பதாவது,

வாதாபி மூர்த்தி.

வாமன கற்பத்திலே திரிகூடாசலம் என்னுந் திருத்தலத்தின் வடமேற்குத் திசையிலே இலஞ்சி என்னுங் குமாரதலம் ஒன்று உள்ளது. ஆங்கே பிரமபுத்திரராகிய காசிப முனிவரும், திருமாலின் அம்சமாகிய கபில முனிவரும், சிகண்டி பரமசிவனிடத்தினின்றுந் தோன்றிய துருவாச மகாமுனிவரும் ஒருவரை யொருவர் சந்தித்தனர். அகமகிழ்ச்சியுடன் பல விடயங்களை விசாரித்தனர். காணப்படுகின்ற இவ்வுலகம் உள்பொருளா? என்னும் வினா நிகழ்ந்தது. அப்போது கபில முனிவர் உலகம் மித்தையே. பிரமம் ஒன்றே உள்ளது.

அகமேகஃ தமமாஸம்| வர்த்தாமிச பவிஷ்யாமிச| காச்யஃ கசிந்மத் தோவ்ய திரிக்தஃ| யதாத மஸ்தந்ந தி வாகாத்ரஃ நகந்நசர் ஸச்சீவ எவ கேவலஃ| ப்ரஹ்மாவா இத மக்ர ஆசீத்| எகமே வாத் விதீயம்| (யாவெ ளருவனே யாதியி லிருந்தேன்| இருக்கின் றேன்; இருப்பேன்| என்னிலும் வேறு யொருவனு மிலன்| வெ ஞ்ஞான் றிருளிருந்தது; அஞ்ஞான்று அங்குப்பகலில்லை. இரவில்லை; சத்தில்லை; அசத்தில்லை; தனித்த சிவனே யிருந்தான்.| பிரமமன் றே விது; ஆதியிலுள்ளது; ஒன்றே யுள்ளது; இரண்டற்றது.)

எனவருமும் வேதவசனங்களானே தெளியப்பட்டால் உலகம் மித்தையே. அதாவது இல்பொருளே. கயிற்றிற் பாம்பு கானனீர், கிளிஞ்சில் வெள்ளி, சொப்பன வுலகு, வானத்தாமை, மலடி மகன், முயலின் கொம்பு இவைபோலச் சச்சிதானந்தபரப்பிரமத்தினின்றுஞ் சகசீவபரங்கள் தோன்றலிற் பொய்யே.

வத தஸ்மாஜ்ஜாயதெ வ்யோமஃ வ்யோமவெ ஃவ்யாயவே தேஜஃ
வ்யோமாயஜ்ஜ்யோதிராவஃ வ்யாயவீயஸ்வாஸ்ருலாசிண்

(இச்சப் புருடனிடத்தே பிராணவாயு மனம், எல்லா விந்திரி யங்கள், வெளி வாயு, தீ, நீர், எவற்றிற்கும் ஆதாரமான மண் என் பனவுகள் உண்டாயின.)

இக்கனம் யுகர்வேத சாகை முதலாயின வியம்பாநின்றன. ஆகலின் ஒன்றே பொருள், அதுவே சத்து. இரண்டாவதில்லை என்றம்பினர். திருவாச மாமுனிவரும் காசிப முனிவருங் கூடி வரை சோக்கி, முனியே! உலகந் தோன்றிநின்று ஒடுங்குங் காண் கினறேம். அவன் அவன் அதுவெனக் காணப்படும் இவ்வுலகங்காரிய வடிவாகக் காணப்படலாலே நிமித்த காரணனுங் கடவுள் தோற்று வித் தொகிக்குகின்றார். ஆகலான் மகாசங்கார காரணனுகியமுதலே யுடைத்து. என்னை? உலகம் முத்தொழிலே யுடைத்து. அம் மூத் தொழில் வினைபரு செய்வோரின்றி நிகழாவாகலிற் கர்த்தாவை யுடைத்து. என்பது வேதமுடிபாகலின். "உள்ளது போகாது இல் லது வாராது" என்ற மூது மொழிப்படி முயற்கோடு எங்ஙனந் தோன்றுதோ அங்ஙனமே யிப்பொருளுந் தோன்று தென்க. என் றின்ன வண்ணமனே வலியுறுத்தி யுலகமும் உள்பொருளே யென் றனர். வேதங்கள் உலகம் பிரமத்தினின்றுந் தோன்றிய தென்றது தெளிவினின்றுந் தோன்றுந் தாமரையைப் பங்கயம், சலசம் என் றாற்போலுமென்க என்றனர். அதனையொப்பினர் கபிலரும். அதன் பின்னர் அமைத்த காணக் கடவுள்யாவன் என்னும் ஆராய்ச்சி மனக்குன் றெழுந்தது.

பிரமபுத்திரராகிய காசிப முனிவர் தமது தந்தையாகிய பிர மனை உலகங்களைப் படைக்குங் கருத்தா வென்றனர். திருமாலின் அம்சமாகிய கபிலரோ தம் அம்சமாகிய திருமாலே அக்கடவுளா யென்றார். திருவாச மாமுனிவர் அவையிற்றைக் கேட்டுச் சொல் லுவர். அவ்விருவருங் கருத்தாவாகார். என்னை யெனிற் கூறுதும். அவ்விருவரையும், அவர்தந் தொழில்களையும் அவ்விரு தொழிலா னிகழ்முறைகளையும் அழிக்கின்றவனே சிறந்தோ ருகலின உருத்

திரனே காரணக் கடவுளாமென்ன கழறினர். இங்ஙன மூவரும் வேறு வேறு மூவகைக் கொள்கை யுடையராய் வாதிட்டுக் கலங்கினர். அப்போது இத்தலத் தெழுந்தருளிய குமாரக்கடவுளே மெய்ப்பொருளைத் தெரித்தருளுவர் என்று அருவாகாயமூர்த்தி தெரிவித்தார்.


அதுகாலைக் குமாரக் கடவுள் ஆடகப் பொன்போன்ற திருமேனியும், ஒரு திருமுகமும், நான்கு திருக்காங்களும், வலத்திருக்காம் இரண்டினும் வாதம் வேல் என்பன பொருந்தவும், இடத்திருக்காங்கள் இரண்டினும் அபயம் குக்குடம் என்பன பொருந்தவும், இளமைப் பருவ முடையராய் வெளிப்பட் டருளினர். அப்போது முனிவர் மூவரு மெழுந்து வணங்கிப் பலதுதிகள் பாடினர். ஆறுமுருகக் கடவுளார் தாமதர்களே! நுமக்கென வேண்டு மென்று கேட்டருளினர். அவர்கள் கலியுணர்வு குன்றெறிந்த குமரனே மூவர்களுள் யாவர் பரப்பிரம மாவர்! அதனைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளி யடியேங்களின் ஐயப்பாட்டை யொழுத்தருள வேண்டு மென்று ஓதினர். பெருமானார் அவர்மீது கருணைகூர்ந் தருள்வார். இருடிகளே! இரணிய கருப்பன் கடவுள்ளல்லன். அவன் நான்முகனைகதை கேட்டிலிரோ! நமாற சிறை யிடைப்புக்கு பலகாலம் வருடகாலம் வருந்தியதும், வேடனைப் பிறந்து துன்பத்தில் வீழ்ந்ததும் அறியீரோ! மற்றைய திருமால் பிறவிகளிற் றுன்பமுற்றதும், சிவ வயத்தாற் துன்பமுற்றதும், மதனெரித்த தீயில் மெல்லனாகி மறைந்ததும், வாசகி விடத்தீயாற் கருவற மடைந்ததும் கேட்டிலிரோ! ஆகலாற திருமாலுங் கடவுளல்லன். உருத்திரனும் ஒரு மன்னவாதேயவர்.

மூவர்க்கும் மேலாய் மகாசங்காரணனே கருத்தா. அவனுடனாணை தாங்கியே யுலகங்களுள் அணுத்துணையினு மணுத்துணையாகுதியைப் படைத்தும் காத்தும் தொடைத்தும் நிற்கின்றனர். ஒவ்வோர் கண்டங்களினும் நாம் அறிந்திருக்கும் பலப்பல பிரமர்களும்

பலப்பல விட்டுணுக்களும் இருக்கின்றனர். அவர்களெ யெல்லாம் யார்க்குக் கடவீர் என்று அழைத்துக் காட்டி யருளினர். இங்ஙனம் எத்தனையோ பிரமர்கள் விட்டுணுக்கள் முதலியோர் மாண்டனர். முகாதங்காரா காணமுகிய கருத்தாயாமே. யாமே விதியாக நின்று படைப்பேம்; அரியாக நின்று காப்பேம்; மற்றையோராக நின்று அழிப்பேம். ஆகலின் மும்மூர்த்தியாக விளங்குவோர் நாமே. அவ் வுண்மையை யினிது தெளியக் கடவீர் என்று மும்மூர்த்திகளும் ஒருவடிவத்திற் பொருந்துமாறு காட்டியருளினர்.

பிரமனது வடிவமும் அவன் கையிலே தரித்தவும், விஷ்ணு வடிவமும் அவர்கையிலே தரித்தவும், உருத்திர வடிவமும் அவர் திருக்கரத்திலே தரித்தவுங் காட்டி யொரு திருவுருவமும், மூன்று திருமுகங்களும், ஆறு திருக்காங்களும், இரு திருவடிகளும் பொருந்திய திருத்கோலங் காட்டியருளி யுரைத்தருள்வார். முனிவர்காள் இன்னு மீவுண்மையை மூவிலகினையும் ஒரு தாமெய முடைய சூலாயுதத்தானும் வேற்படைக்கலத்தானும் அறிந்து கொள்ளுதிர். வேல் ஞானசத்தி, வாளி இச்சாசத்தி, தேவகுஞ்சரி கிரியாசத்தி. அன்றி யிவை முத்தொழிற்குங் காணமாய ஆணி, சேனை இச்சாசத்தியுமாகும். இவற்றினே யாமே முக்குண வேறுபாட்டை யுடைத்தவர்போல மும்மூர்த்தியாகி மூவினையுஞ் செய்வேமென்ற தெளித்தருளி யுவர் வேண்டிய வரங்களையுங் கொடுத்து அத்தலத்தி லெழுந்தருளினர். அம்முனிவர்கள் தேவீர் இவ்விடத்தி லெழுந்தருளியிருந்து வழிபடுவோர் யார்க்கும் வரத்தைக் கொடுத்தருளல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டமையால், சுப்பிரமணியக் கடவுள் அங்கு வரதாசமூர்த்தியாய் விளங்கா நின்றார்.

சிவஞான போதம்.



(பஞ்சாயுதப் பிரதான மூர்த்தி).



பஞ்சாயுதப் பிரதானமூர்த்தி.

சந்தான ஆகமம்.

ஸ்ரீ-ஸ்ரீ-ஸ்ரீ வாஞ்சேஷ்வரீ-ஸ்ரீ-ஸ்ரீ ஹ்ரீம்.
ஸகிகாகாட ஹவஸுவரா ஹயகாரா நிதிஃ
ஸுணவெ ஸுவிரோவெ கிம் ஹாம்சாஸ்ரெணஹீத்தீம்.

அதிசிய புராணம்.

யதாஜ்ஞயா ஜகத் ஸ்ருஷ்டா விரிஞ்சஃ பாலகோ ஹரஃ
ஸங்ஹர் தாகாலருத் ராக்யோ நமஸ் தஸ்மை பிநாகிநே

தீருச்செந்தூர்ப் புராணம்.

திரிசூடா லத்தீ சான தித்தினி லிலஞ்சி யான
புரியினிற் பில ராதி யோகியர் புகழ்ந்து கேட்ப
வரியமுத் தேர் மூவ ராவது நாமே யென்று
சுருதியின் வாதி ராசத் தொல்பெயர் சூட்டிக் கொண்டனை.

வாதராச மூர்த்தயே நமஃ

மூப்பதாவது,

பஞ்சாயுதப் பிரதான மூர்த்தி.

சிவபெருமானிடத்தில் வாம பெற்றவந்த சூரபன்மன் சிங்க முகன், தாரகனென்னும் மூவரும், அசுர குருவாகிய சுக்கிரனிலே அண்டங்களினளவுகளையும் நிலைமைகளையு முணர்ந்து திக்கு விசயஞ் செய்யப் புறப்பட்டார்கள். அப்போது தாரகாசுரன் தன் நமையன்மார்க்கு முன்னே பதினாயிரங் குதிரைகள் பூட்டப்பட்ட தேரிலேறிக் கொண்டு எண்டிசைப் பாலகர் கோபுரவாயிலுஞ் சென்று அவர்களை வென்று, பாதாளங்களிலுக் தேவுகளிலும் போய் தன்

விழுவி வந்தான். அதன்பின் ஒட்டகமும் தயிலமும் பாற்கடலை யடைந்தான். இங்கு சேஷ வென்னெங்கள் பாலைக் குடித்துத் தேக்கெறிந்து கடல் வெள்ளத்தைக் கலக்கி யார்ப்பரித்தன. பூதேவி சீதேவி யிருவருந் திருமாலைத் துயிலினின்று மெழுப்ப, அவரும் போர்க் கோலங் கொண்டு வந்து யுத்தம்புரிந்து அசுர சேனைகளைச் சிதறச் செய்தனர்.

பின்னர்த் தாரகன் வந்து எதிர்த்துப் பல மாய வுருவங்கொண்டு பொருதான். தாரகனும் தன் முயற்சிய மாயை யுபதேசித்த மந்திரத்தை நினைத்துத் தானும் பல வடிவங் கொண்டு யுத்தஞ் செய்தான். தேவ மானப்பம் பன்னிரு வருடம் யுத்தம் நடந்தது. தேவாசுர யுத்தம் பதினொரண்டிலும், இராம ராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், துரியோதன னாண்டவர்களின் யுத்தம் பதினெட்டு நாளிலும், கஞ்சன் வேதன் செங்குட்டுவனுக்கும் பாரியமன்னருட்பால்குமரன் புதல்வ ரதிய கனக விசயருக்கும் நடந்த யுத்தம் பதினெட்டு நாளினையும் முற்றின வென்று பெரியோர் கூறுவர். அவையெல்லா மவ்வாறு முடிந்து மிவர் யுத்தம் பன்னிரு வருடம் நடந்ததே யென்று கண்டோரெல்லா மிறும்பு துற்றார்.

நாராயண மூர்த்தி யேந்திய கௌமோதகி யென்னுங் தண்டாயுதமும், சுதர்சன மென்னும் வாளும், பாஞ்சசன்னிய மென்னுஞ் சங்கமுஞ் சார்ங்க மென்னும் வில்லும் பொடியாக்கப்பட்டன. நாணர் பிருஹற்பதியுஞ் சிவபெருமானுலே கண்ணிடந்து அர்ச்சித்த காலத்தைக் கொடுக்கப்பட்ட சுதர்சனம் எனனுஞ் சக்கரப் படையை விடுத்தார். அது சிவ வரப்பிரசாத முண்டாய தாரகன் கழுத்தில் மாலையாக வீழ்ந்தது. வாசுதேவன் பராசரிய மூற்றுத் தாரகனையுந் தமயன்மாரையு மரிகூறிச் சென்று குமாரக்கடவுளோடு யுத்தஞ்செய்து அவனிறந்த பிறகு ஞானறு தமது ஓர்தாயுதங்களையு மீட்டுமை பறறி வருந்துவாராயினர். நாரத மாமுனிவர் தோன்றி, காதற் றுழி லுடையோய்! ஒன்றற்கு மஞ்சாதி. குமாரக் கடவுளை யுனனி

வாங்கிடப்பையில் அவற்றைப் பெறுவது திண்ணம் என்று கூறிப் போயினர். திருமாலும் அவ்வண்ணமே தெளிந்தவராய் விரைந்து சிராத்த தாணம் புரிந்து தவஞ் செய்வான் தொடங்கினார். அலைவிலாக் கடல்போல் அடங்கிப் பதுமாசன மிட்டுப் பல ஊழிக் காலம் மோற்றார். நாராயண மூர்த்தியின் வடிவத்தைத் தியானிக்கும் மூடின. நீலநிறக் கடலின்மீது செங்கதிர் பலகோடி திரண்டு உதித்தாற் போலப் பங்குனி மாதத்திலே ஆதிவாரத்திலே உத்தர நட்சத்திரத்திலே, சண்முக கடவுள் நீலமயின்மீ திவர்ந்து தோன்றியருளினர். பலகோடி கண்ணுகள் சூழ வெளிப்பட்ட டருளுதலும், நாராயண மூர்த்தி யெதிரே வந்தனை செய்ன, அக கணாதலுட பாலுகம்ப னென்னும் கணாதன நூலயிரம் வாயகடோறும் சகுகலை வைத்து முழக்கினன. அந்த முழக்கத்தைக் கேட்டுப் பெருமானர் பிரசண்ண மாயுல னெனத் தெரிந்து, நாராயண மூர்த்தியானவர் புறநினைறும பாம்பு வெளிப்பட்டாற் போல வெளிப்பட்டுத் தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கி நின்றனர். அப்பொழுது சோதியே! முன்னாக்காலத்திற் குபனென்னும் அசுரனுக்காகப் போந்து யென முனிவர் குமாரரான தக்ஷ முனிவருடன் செய்த யுத்தத்தில் எனது சக்காங் கூர் மழுங்கிற்று.

அதனாற் பாசிவ நாதனிடங் கண்ணிடத்து அருச்சித்துச் சுதர்சனம் பெற்றேன். அதனைச் சாலவிதி யென்னுந் தக்கனது வேள்வியில் வீரபத்திரப் பெருமானிடம் எவ, அதனை யவரது வெண்டலை கௌவிற்று. அதனை யருளுமாறு வீரபத்திரக் கடவுளைப் பிரார்த்தித்த காலை, அப்பெருமான் வெண்டலை கொடுக்கப் பெற்றுக் கொள்க என்றருளினர். விகடக் கூத்தாடினேன். அதனைக்கண்டு யாவருஞ் சிரித்தனர். வெண்டலையுஞ் சிரித்தது. சக்காம் விழுந்ததைக் கண்ட முன்னவரான விநாயகக் கடவுளார் அதனை யெடுத்துக் கொண்டு சென்றார். அவர் திருச்சந்நிதானத்துஞ் சென்றும் அங்ஙனம் விகடக் கூத்தாடினேன். அவர் இரக்கங்கொண்டு அளித்தரு

னினர். அத்துணைப் பிரயாசமுற்றுப் பெற்ற சக்கராயுதத்தைத் தான் வத்து பொருதகாலே பவன்மீது பிரயோகித்தேன். அன்னது அவன் கண்டத்தே மாலையாக விழுந்து விளங்கியதை யென்னென் நுரைப்பின், முன்னர் என்சக்கரம் தன் கர்மமுங்கி வீழ்ந்ததும், வெண்டலை கொவியது மன்றி இதுபோல மாலையாக விழுந்த தின்று. இது மிக்க வியப்பே. அதுமட்டோ!

ஐயனே! அடியேன் மற்றைய ஆயுதங்களையும் அவன் பொடி யாக்கினமையா விழந்து கின்றேன். இங்ஙனம் நாயுதனைது ஒரு காலத்து மின்று. இவ்வாறிருப்பனேற் றட்டார்களைக் கண்டித்துச் சிட்டர்களைக் காப்பது எங்ங னெற்காகும்! ஆகலாற் பெரும! பஞ் சாயுதங்களையும் எளியேன் தரிக்க முன்னருள் புரிந்து உய்வித் தரு ருதி யென்று இரந்தார். அது கண்ட வனைபக வெறிந்த கதிரை நாயகன் றண்டிருவுளத் துன்னிய மாத்திரையினே சூரியப்பிரகாசம் போன்ற சுதரிசனமும், சந்திரப் பிரகாசம் போன்ற பாஞ்ச சன்னிய மென்னுஞ் சங்கமும், மற்றை யாயுதங்களும் வந்து தோன்றின. அவற்றை விட்ணு கண்டு மிக்க வியப்படைந்து அனந்த முற்றவ ராய்,

நாடாது வேட்ட நனிவழங்கும் வள்ளண்மை
நாடாழு நர்ப்பரற் றணைக்குங் கருணையர
னேடாத தானை யுருமுச் சினச்சூரைக்
கோடாய்போர் வெங்களத்துக் கொன்றவிறை போலுங்
குருபானைத் தாழ்த்த குருதன் போலும்.

அறிவிரண்டு மாய வலங்கறில்த் சூழ்ந்தோர்
நெறிவகன்ற யாக்கைச் செருதே ருகைப்போ
னூறுவலியின் வைய முடற்றுக வுர்த்த
வெறிந்திருத்த காற்சோட் டிபப்பான் போலும்
பெறிதிகலவ மருளுஞ் பினிதனைத்தான் போலும்.

என்றின்னவாறு துதித்தார். சுபபிரமணியப் பெருமானுக் ஐந்தா யுதங்களையும் அவர் கையிலளித்து, அன்பனே! இவை யினி யொருவராலு மழிக்கப்படா. தினக்குப் பின்னர்த் தோன்றும் திதிக் கடவுளர்க்கு மிவை வழிவழி யாயுதமாகக் கடவன. நீயும் அன்றை ரும் பஞ்சாயுதர் எனப் பெயர் பெறுதிர். குழவிப் பிரபந்தக் காப்பி னிவ்வைவங் கருவி பற்றி யெல்லாத் தேவரினு நின்னையே யுலகெ மூற் கொண்டு புகழுக. இப்படைகளி னுருவந் தீட்டிய (பஞ்சாயுத) மணியை யணிந்த குழவிகட்குத் தேவர்சொலே நீங்குக" என்று வரமுமளித்து அந்தர்த் தான மாயினர். காரண நிலவுபெற்ற தலம் சித்தாச் சிரமம் எனவும், தான பஞ்சக மெனவுஞ் சொல்லப்படும். காணறுக்குச் சிறந்த ஐந்து ஆயுதங்களையுங் கொடுத்தருளினை யாற் குகக் கடவுள் பஞ்சாயுதப் பிரதான மூர்த்தியாயினர்.

ஆதிவண வேதச் சாப உபதேசம்.

[illegible]

தணிகைப் புராணம்.

ஆர்க்கதிர் வேலிய ரஞ்சி யளித்தெதி
சீர்க்கவுண் மாமுகன் மார்பிடை மாறி
சார்க்கமு மற்றவுஞ் சாமி யளித்தான்
பார்க்குரு வீயுற மாடையன் பெற்றான்.

பஞ்சாயுதப் பிரதான மூர்த்தியை நமஃ.

சதுர்முக சாபாரி மூர்த்தி.

பதச்சந்நிதி யென்னும் பொற்கோயிற் றலக்க ணெழுந்தரு
ளும் புண்ணிய வடிவான கணனுதல். குமாரர், சாபண்ம னெதி
யுரைச் சங்கரித்துக் கிரியா சத்தி யெனப்படுந் தெய்வ யானை யம்மை
யாரைத் தீருப்பாங் குன்றத்தி லே திருமணஞ் செய்து எழுந்தரு ளி
யிருக்கு மோர்காலில் தேவர் முதலாயினோர் குழுமிப் போற்றஞ்
சபையிலே, தந் திருக்காத்தின்க ணுள்ள வேற்பஷடக் கலத்தைச
சுட்டிக் காட்டி, "தேவர்முதலிய கணர்காள்! நமக்கு இப்பெருமை
யெல்லாந் தந்தது இவ்வேலாகும்" என்று ஓர் திருவிளையாடலாகக
கூறியருளினர். அதனைக் கேட்ட வருகி லிருந்த பிரமன் "இவ்வே
லிற்கு இத்திலை யென்னலி வந்த தன்றே" என்று தனதறி யாண்மை
யாலும் அகங்காரத்தாலு முரைத்தான். குழகனு மிறைவன் அது
கேட்டுச் சிறிது வெகுளி யுற்று, "ஆணவமலத்தாற் சிமிழ்ப்புற்ற
தோய்! என் மொழித்தனை. நங் காக்கட்பிரியா தறையு ஞான
சத்திக்கு நீ கொடுப்பித்தாரு சத்தியு முண்டோ? முன்னர்சிறை
யிருந்ததை மறந்தனையோ போதாய். நீ பூமியிற் புன்பிறப்பை
யடைதி" என்று சபித்தருளினர்.

பிரமன் நெடுங்கிச் சாமிநாதன் திருவடிகளிற் றஞ்சமென
விழ்ந்து புலம்பினன். கருணையங் கடலாங் கதிரை நாயகன் திரு
வுளமிரங்கி, "பிரமனே! நீயிப்பாவத்தைச் செய்தமையால் அது
பவித்தே தீர்த்தல் வேண்டும் பின்னர் நின்னை யாட்கொள்வாம்"
என்று அருளினர். விதிபோன் றன்னுரு மாறிப் பூமியிற் சென்று
அந்திமான் என்னும் வேடனுகப் பிறந்தான். வனத்திற் கொலைத்
தொழில் கொண்டு திரிந்த காலத்தில், இமய மலைச்சார லிடஞ்
சென்றான். அங்கே மிருகங்க ளகப்படாமையாற் பட்டினியா
யிருந்து பசியாலும் மிருக பயத்தாலும் விழித் திருந்தான். அன்று

சிவபெருமான் திருவிளையாடல்.

123

காத்திகைநா ளாயிற்று. மறுநாட் காலையிற் * பிப்பலாதமுனிவர் அவ்வழியிலந்தணர் பலரோடும் பிரசுரணவத உனவாவது அவரிடமிருக்குமென்று நினைத்து ஒருக் கென்று அவர்தம் முகலேப் பற்றிக் கையா லெடுக்க வட்டனன். முனிவரர் சுபிசுமனிக்க கடவுளின் றிருவருட் பெருமைகளே யெல்லா மெடுத்துரைக்கும் வேத தானக் கோப பாடினர். அதனைக் கேட்ட வேடற்குப் பண்டைய நல் லுணர்வு தோன்றித் தான்செய்த செய்கைகட்குப் பெரிது மிரங்கி முனிவர் அடிகளில் வீழ்ந்து வணங்கி, அவரா முன்பழைய வாலி றெல்லா முணர்ந்தான்.

முனிவர் பெருமானே! கந்தக் கடவுளின் றிருவருள் வினை விற் கிடைக்குமாறு உபதேசித் தருளுக' என்று முனிவனைப் பணிந்து கேட்டனன். முனிவரர் "சரவண வார்த்தியிற் படித்த காரித்திகை விரதத்தை யதட்டமியையேல் உன் பவம் தீங்கும் என்று சடக்கர மந்திரமும் உபதேசித்து விடுத்தார். அங்ஙனே அந்திமான் அவ்விரதத்தை யற்றுவா ஞயினனை. விரத பலத்தாலே வேடத்தன்மையி னின்று நீங்கி அரசருக்குக் கொடைத்தொழில் விசேடத்தானே இடவள்ளலென்னு மொருவரு மொருவனுய வினங் ஞனன்.

இங்ஙனம் பிரமன் பூசியிற நங்கலாற சிருட்டித தொழில் கடவாதாயிற்று. அதனைற் றிதித தொழிலும், சங்காத தொழிலு மில்லையாயின. அதனால் வருணன் சோமன் இந்திரன் திருமால்

---

* பிப்பலாத முனிவர் வேதங்களிலே பிரதி பாதிக்கப் பெற்றுள்ள முனிவர் அதர்வண வேதத் தண்டி பிடித்த அதர்வண ரிஷியின் குமார் தத்தியத் முனிவர் இவர். அதர்வணத்தை தத்தியரு ரிஷி தேவதர்வண: தத்தியத் தாதர்வண" என்று வேதானுக்கிரமணிகையார் பெறப்படும். அத் தத்தியர் ரிஷி புத்திரர் ததீசி முனிவர் பிப்பலாத முனிவர் என்பது புராணத்திலே கூறப்பட்டுள்ளது.

124


முதலியோர் * "சித்தன் வாழ்வு" என்னுந் திருப்படை வீட்டைச் சென்று தேவ காரணத்தைச் செலுத்தினார். பத்மிப் பெருமான் அவர்கட்குமுன்னே பாலப்பருவமும், நான்கு திருக்கரங்களும் பொருந்தி ஆயுதமும் வேலாயுதமும் கோழிக் கொடியும் வாதமும் அபயமும் பொருந்திய திருக்கரங்களை முடையராய்த் தோன்றினர். தேவர்கள் எல்லாம் துதித்தனர். சுப்பிரமணியக் கடவுளார் அந்தமானை யுடனே யழைத்துப் பவம் போக்கிப் பிரமனுக்கு முதற் தொழிலை உடன்படுமாறு திருவருள் செய்து மறைந்தனர். சதுர் முகனுடைய பிரமனது சரீரத்தை அரித்தமையால் (அழித்தமையால்) சதுர்முக சரீரியென்னும் பெயரினர். இதனால் முத்தொழிற்கும் மூல மூர்த்திகட்கும் முதற்பொருளாயிருப்பவர் செவ்வேட் பெருமானே யென்பது சித்தாந்த மாதலை காண்க.

பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப் படை.

"பூக்கொள் நீர்கொடி செல்வனும் வெள்ளோ
லலவயி னுயர்ந்த பலர்புகழ் திணிதோ
ளரவமர்ந்து விளங்கு நிறைமதி முக்கண்
மூவெயின் முருக்கிய மூவாண்மை செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாப்பத்து நாற்படை
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரா ணேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய

---

* சித்தன் சர்ப்பிலன்ற திருவாலவாயடி யென்னும் பதிந்தலத்தை. அதனை, சலம்பர் எனு குடிபுகுத்து சித்தன்வாழ்வில்லச் தொடர்பும் தெரிவுபடுத்தல்லை சுப்பி, பாடலைத்தச் சொன்ன வரலாற்றுப் பாண்டியன் - ஒடுகைத்த சுவல தமிழ் எனுமுன்னையர் திருவாக்காது முன்ன. சித்த வென்பது முருக்கடவுளி ஒரு சமூகமொன்று. அது பிரமாண்டபுராணத்திற் சுகத்திரகாம அத்தியாயத்திற் சொல்க.



யோகாசாரியமூர்த்தி.

வில்கை கரிக்கு மொன்றபுரி வொள்கைக்
பலர்கை தழுவுந் தெய்வ நாகத்
வேழத் தலைத் தன்னிற் றோன்றித்
தாமரைப் பகைத்தாவி தோற்றி
நான்முக வொருவற் கூடிச் சான்றவிர்
பகலிற் றோன்று மிகலில் காட்சி.

வீர்யாகமம்.

காயவெறுவிஸ்வேஷணஹாரஹர வீப வஜ்ரலெஷ
வஜ்ரமுஷலஜ்ர ஸாயவிவஷ்டஹஸ்தம் கதிகவாஹ மீட்
ராகிக்ருதக்ருத ஹவ்யப வரதாப கரதாதிகம்
வ்ருணவெத ஸ்வரோவிகம் ஹரகாரிரூப வர்நிகம்.

சதுர்முகசாயாரி மூர்த்தியோகமும்.

முப்பத்திரண்டாவது,

யோகாசாரிய மூர்த்தி.

வர்களைவிட யுயர்ந்த ஸசயசித்தப் என்னுந் தலத்திலே கிழ
லர், சௌதமர், கதீக்கனர், தததாத்திரேயர், பைங்கலர், துர்வாச
முனிவர் முதலிய பலஇருடியர்கள் கூடியிருந்தார். அப்போது
கடைங்கல் முனிவர் மற்றை முனிவர்களை நோக்கி, அறனோ வேண்
டிய சித்திகளையும் ஞானத்தையும் அடைதற்கு யாம்செய்யும்
யாதோ ரன்று விஞ்ஞிய காலத்து ஒவ்வொருவரும் ஒவ்வோர்
உபாயங்கூறினர். அவர்கள் அவ்வாறினைய காலத்தே தெவ
விருடியாகிய நாரதமுனிவர் தோன்றி, சிவயோகமே சித்திகளைத்

126

ஞானத்தையும் முத்தியையுஞ் சொருபத்தைத் தருகின்றது, அதன் இலக்கணங்களையெல்லாம் உணர்த்த வல்லவர் குகப்பெருமானே. அவரை நினைத்து தவஞ்செய்திர் என்று மனதந்தார் முனிவர்கள். அதனையறிந்தித் தவம் புரிந்தார். குமரக்கடவுள் தோன்றி, யோகவியலையுணர்த்தி திருக்கோலத்துடன் வீற்றிருந்து உபதேசிப்பாராயினர்.

மாதவஞ் செய்யும் முனிவர்களே யோகம் மற்றையவை போலவாத்திரல் உணரப்படு மொன்றன்று. செய்கையாலும் கல்லாசிரியனிடத்தே முறையே யுணர்ந்திபழகலாலுந் தெளிவிப்படுமென்று. யாம் வாக்கியலுக்கு செயலுகளாலும் தெரிக்கின்றோம். யோகம்-மந்திரயோகம், லயயோகம், இலையயோகம், ஹாசயோகம், தியானயோகம், பரவயோகம், கன்மயோகம், மாயோகம், ஆதாரயோகம், சாதாரயோகம், மீதானயோகம், தாரகயோகம், சாங்கியயோகம், அமனசுகம், பரிசயோகம், அபரிவுயோகம், சந்திரயோகம், சூரியயோகம், இலம்பிகாயோகம், அமிர்தயோகம், ஆனந்தயோகம், பன்னகயோகம், வச்சிரயோதம், சித்தயோகம், ஞானயோகம், பரமயோகம், முத்தியோகம் என்ப பலவகைப்படும். அவற்றுள்.

மந்திரயோகம் ஆவது - மூலாதாரம் முதலிய ஆறு தாரங்களையும், பிரமசக்கரம், சிதாரசக்கரம், பச்சிமசக்கரம், அனுச்சக்கர முதலிய பத்துவகைச் சக்கரங்களையும் ஒன்பது, பதினெருவகைச் சக்கரங்களையும், செவித்துவாரம் இரண்டு, கண்துவாரம் இரண்டு, உண்ணாக்குத் துவாரம் ஒன்று, அபோக்கத்துவாரம் ஒன்று என்னும்வண்ணவகைத் துவாரங்களையும், இவ்வெல்லாவற்றின் கூறுபாடான நாடிவகைகளையும், ஆதாரத்தவனதகளையும், பிரம வெழுத்து முதலிய எழுத்துக்களையும், மந்திரங்களையும், யந்திரங்களையும், குணதேவதைகளையும், பிரதானதெய்வங்களையும் குருமுகமாக அறிந்து ஆராய்ந்து

இலயயோகம் ஆவது - கரி, கதி, ஆதாரசுத்தி, பிராணயாமம் முதலிய சாதனங்களைச் செய்யுபிடத்து, இவைகள் சுத்தமாயின வென்னுஞ் சோதனையை யறிந்தபடி ஆதார தேவதைகள் வெளிப்படும்போது தசநாதங்களுந் தோன்றும். அவற்றைத் தியானஞ்செய்யும்போது மனம் இலயமாகும். இதுவே இலயயோகம் எனப்படும்.

அட்டயோகம் ஆவது - இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் சமாதி என்னும் எட்டு அங்கங்களோடுசெய்வது. இதனை அட்டாங்கயோகம் என்றுஞ் சொல்லுவர்.

இராசயோகம் ஆவது பூவனைப்படி விளங்கும் யோகமும், பூவனை யாவன, தாரகம், சாங்கியம், அமனசிகம் என்பனவாம். அவற்றுள் தாரகம் ஆவது: சித்தத்தி யானது பகாமாலை யுடன் கூடியுலகு சிருட்டியுண்டாக்கும் போது இரவியுத்துக் கலைக்குரு காவ், சூரியகிரணம் பளிங்கிற்படுதல் அக்கினி பிரகாசிப்பதுபோல நிலவித்திருத்தல் அகாரமுதலிய பதினாறு கலைகளுந் தோன்றி, அவற்றினின்றும் அநேக கோடிகலைகள் தோன்றி, அதன்கண் தண்டம், காரகை குண்டலம், அர்த்தசந்திரம் தரிபுண்டம் சோதி முதலான அளவற்ற வண்ணவேறுபாட்டு வடிவுகள் தோன்ற அவற்றைத் தரிசிப்பதாம். சாங்கிய யோகமாவது: எல்லாத்தத்துவங்களையும் சோதிகலைகளையும் பூருடனையும் உள்ளவாறு அறிதலாம். அமனசிக யோகமாவது - மனமிறந்த நிலைதானாம்.

ஆதார யோகமாவது - ஆயம் முறையுடன் வான் எழுத்தை வாய்எழுத்துடன் பொருத்துவிதம், மேலைக் வினங்குள் சேர்த்தலைப் பிரமரந்திரத்தின் வெளியிலே கொண்டு செலுத்துவதாகிய இதனைவரின் தூகாவித்தி சுருக்கமும் வன்மையுண்டாம். இனி அட்டாங்கித்தியோகம் கூவிளம்மூவாதாரலடவின் கழுகுமலித்தலை ராத்திலே மனத்தை வைத்து அக்கினியை ஒருவருடம் இடைவிடா

தூலோகத்திலுற் பொன்னிறமான வணுவைப் போன்ற வடிவங்கொள்
வர். இது அணிமாசித்தியோகம். அவ்வக்கினியைத் தானே மேருத்
துவாரவழியாக வாயுவீதியிலே குண்டலி வரையும் எழுப்பி யேற்றி
இருவருடம் நோக்கில் கீர்மலைகள் போலத் தேகம் மெத்தென வா
கும். இது இலகிமாசித்தியோகம். குண்டலிகாறும் எழுப்பிய அக்கி
னியை நாபி இருதயங்களி லேற்றி மேருத்துவாரவழி மூவாண்டு
நோக்கின் ஆகாயமளவு ஓங்கி வளருதலுண்டாம். அணுவினுஞ்சிறி
தாயிருக்குந் தன்மையு முண்டாம். இது கரிமாசித்தியோகம். மூன்
சொன்ன மூலாக்கினியை இருதயமுதற் கண்டங்காறுமேற்றி ஐயா
ண்டு நோக்கின் முற்காலசம்பவ மெல்லா முணர்வான். இது பிராத்
சித்தியோகமாதும். கழுத்துமுதற் கண்கள் வரையும் எற்றி ஆறு
வருடம் நோக்கிலுல் மண்ணி லெத்தனைகாலம் புதைக்கினும் அவ்
டல ழியாதிருக்கும். மீளவும் பிறவியில்லை. இது பிராகாமியசித்
தியோகம். சிரத்தி லேற்றி யேழாண்டு வரையும்நோக்கின் யாவருக்
கும் உள்ள தீவினைகளைப் போக்கி யெல்லா வுயிர்களிலும் ஏகமா
ய்க் கலக்துநிற்பான். இது ஈசத்துவ யோகம். இனித் தலைக்கணுள்
ள அக்கினியைப் பிராணவாயுவினுலே வாங்கி நாசி நுனியிலே எட்
டாண்டு நோக்கின் மூதண்டங்களைப் படைக்கு முதல்வன் போ
லாகி வேண்டிய அண்டங்களையும் படைப்பான். இது வசித்துவ யோ
கம். இந்நாசியின் அலகுச் சைகையளவுஞ் செல்லநோக்கின் எந்த
டிவு எடுக்க வேண்டுமோ அந்த வடிவெடுக்கும் வன்மையுடையவ
வன்; இது காமரூப சித்தியோகமாம். இங்ஙனம் அவ்வவ் யோ
வைகளினியல்புகளையெல்லாம் எடுத்து உணர்த்தியருளி மறைந்த
னர். முனிவர்கள் அவ்வண முள்ள யோகத்துள் அட்டாங்க யோ
கப் பயிற்சிகளை யடைந்து ஞானம் பெற்றார்கள்.

எனை வற்றினியல்புகளையெல்லாம், சிவயோகசாரம், ஞானசங்
கிதை, யோகநிலை, மாதங்கசூளம், சிவயோகமஞ்சரி, யோகாஸ்த
வம், அபரோக்கிரியானுபவம் என்பவற்றினும், புராணங்களினும், பெரும்

ாட்டு, சிறுநிரட்டு, மெய்ம்மொழி, சகலாகம சிகாமணி, சிவதரு
ாத்தரம், திருமந்திரம், தத்துவப் பிரகாசம் முதலியவற்றினுங்
ண்க.

இவ்வனம் யோக சாதனங்களை யெல்லாம் உணர்த்தியருளும்
த்தியாக வினங்கலால் யோகாசாரிய மூர்த்தி யாயினர்.

திருமந்திரம்.

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வார்க்குச்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

சாறு கால்கொண் டெழுந்த புவியைப்
போமற் கட்டிப் பொரிதுண வல்லிரே
னீரா யிரமு நிலமா யிரத்தாண்டும்
போது காயம் பிரானந்தி யாணையே.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கி
லுறப்புச் செய்திடு மூரோமங் கறுத்திடும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

யோக தரிசனம்.

அக்கினியிற் பொரிவிடிவா யுதித்தனில வனற்றேவ னாகை
ாங்குமிக்கினிய சரவணத்திற்சார் தலிலையாடுமொரு வேலோனன்
ாற்றைத், தொக்கினிலிலும் பெழுப்பியனல் சுவாலிக்குச் செய்ம்
யாகத் திரிவுவன் முன்னை, மக்கினிய சக்கரபிலன் மூதலோர்க்குப்
பாதித்தானவற்றுமன்மேலை.

யோகாசாரிய மூர்த்தியே நமஃ

128

முப்பத்துமூன்றாவது.

குழந்தை வேலப்பமூர்த்தி.

பாண்டி நாட்டிலே யுள்ள திருவாவினன்குடிப் பதியிலே பிரமணிய பத்தியிற் சிறந்த வைசிய குலத்திலே சுவணதந்தனென் பவன் ஒருவனிருந்தான். அவன் மனையாள் அருந்ததிபோன்ற பினையுடைய மகேசை யென்பவளாகும். அவளுடன் இல்லற நடத்தி வருநாளிலே, புத்திரப் பேறின்மையால் மிகவும்வருந்திச்சண் கந்திக்குக் கீழ்த்திசையினுள்ள பரத்துவாச ஆச்சிரமத்திலிருந்த திருமறு மார்பனாகிய சீதர மூர்த்தியை வழிபடுதித் தவஞ் செய்தான். காவற் கடவுளாகிய நாணர் இவர் பல் காலமாகத் தவஞ் செய்தல் கண்டு மனமிரங்கித் தோன்றினர். சுவணதத்தனும் மனைவியும் வணங்கித் துதித்து, அண்ணலே! அடியேங்களுக்குப் புத்திர பேற்றை யளித்தருள வேண்டுமென்று குறையிரந்து வேண்டினர். மாயவன் அவர்களை நோக்கி, "தலையன்புடையீர்! நுமக்குப் புத்திர மில்லை. புத்திரர் பிறந்தாலும் இறந்துவிடும்" எனறார். எங்ஙனமாயி னும் ஒருபுத்திரன் பிறக்க அருளுக என்று பிரார்த்தித்தனர். "அ வாறே தந்தேம்" என்று மறைந்த திருமால் தமது பாஞ்சசன்ன மாகிய சங்கத்தை நோக்கி, "சங்கே! நீ மகேசைவயிறறிற் றோ றிச்சிலகால மிருந்து வரு" வென்றார். அப்பணியைச் சிரமே தாங்கண்டபாஞ்சசன்னியம் மகேசை வயிறறிற் பாலனுகத் தோன்ற, புத்திரன் பிறந்ததும் தழந்தை வேலப்பன் என்று காரண னஞ்செய்து வளர்த்து வந்தார். அப்புத்திரனும் வளர்ந்து ஐந்து வ தடைந்து அசனுமாருடன் செய்குன்றுகளிலும் நதிகளிலும் சோ லைகளிலும்விளையாடி வந்தான். ஒருநாள் பழநிக்குச் சமீபமாயுள்ள [illegible] வனத்தின்க ணுள்ளதேனுதீர்த்தத்திலே நீர்விளையாடுங் க லத்திற் பழமையாகிய போறிவு தோன்ற, அப்பாலகன் நீருளாழ்ந் சங்காகித் திருமால் கையினடைந்தான்.

(15_15)

129

குழந்தை வேலப்பன் நீருள் மூழ்கி நெடுநேரஞ் சென்றும் வெளிவராமையாற் பார்த்திருந்தோரும், கூடவிளையாடிய மற்றைப்பாலகரும் மனமாழ்கிப் பதைபதைத்துத் தேடியுங் காணாது வக்கமுற்றுத் தாய் தந்தையர்க்கு அறிவித்தனர். அதனைக் கேட்ட சுவணகுத்தனும் மனைவி மகேசையுந் தலையிலும் மார்பிலும் அடித்துப் புரண்டழுதுஓடிச் சென்று தேறுதீர்த்த நீர்க்குள் மூழ்கித் தேடியுங்காணப் பெறாது துக்கசாகாத்துள் முழுகிப் புலம்பி யினி உயிரை விடுவேமென்று துணிவுற்றார். சுற்றத்தாரும் அயலாரும் வருந்தியிரங்கினர். தாய்தந்தையர்கள் புத்திரசோகத்தாற் கொண்ட துன்பஞ் சொல்லுந்தரமோ? அவற்றைக் கண்டார் யாவரும் பழநிப்பதியே பரமகுருவே! தண்டாயுத பாணியே! தேவரீர்க்கு அபயம் அபயம் என்று அன்புடன் இரங்கித் துதித்தார்.

சுவணகுத்தன் நீரில் முழுகியிறக்கவும், மகேசை நெருப்பில் முழுகியிறக்கவுந் தீர்மானித்தது கண்ட தண்டாயுதசுவாமி, பக்தவத்சல னகையால் அவர் துன்பங்களை நீக்கத் திருவுளங் கொண்டுகடப்ப மலர்மாலை யணிந்த சிகையும், இரத்தினச் சுட்டி யணிந்தநெற்றியும், இரத்தினக் குண்டலங்க ளணிந்த திருச்செவிகளும், கேவலைப் பழம்போலும் வாயும், இளமுறுவலும் அழகைச் செய்ய, மாற்றாயிரத்தொன்றைச் செய்யப்பட்ட புலிகங்களுடன்கூடிய பஞ்சகச்சமும், இளந்தோளும், இரத்தினமோதிரமணிந்த விரல்களும் ஒளிவிய வீரகண்டையும் அரைஞாணும் வேலாயுதமணிகளும் பின்னர், தண்டை, சிலம்பு முதலிய ஆபரணங்கள் ஒலித்துத் திருவடிகள் நோவதற்கித்தத்தினின்றும் எழுந்து வருவார் போலத் சுவணகுத்தனுக்கும் அவன் மனைவிக்கும் முன்னர்த் தோன்றியருளினர்.

வணிகனும் மனைவியும் கண்டு களிமிகுந்து ஆனந்தமுற்று சமஸ்கிருதத்தில் என்ன எத்தியோபோடனைத்து: "ரமணீயே

130

பரண்டுச் சென்றார். புதி என்னும் நகரத்தில் யாங்கள் வீழ்ந்துவரு துமேவென்று இரங்கி வந்தனையோ' என்று பலவாறு கூறிமகிழ்ந் தனர். அதிபோது சுவண குத்தனையும் மகேசையையுந் தடுத்தாட் கொள்ள விரும்பிப் பழநிப் பெருமான் குழந்தைவடிவை மறைத்து, ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்காங்களும், அவற்றிற் பொரு திய ஆயுதங்களும், அருள்பொழியும் பதினெட்டுத் திருக்கண்க ளும், மயில்வாகனமுந் தோன்ற ஆகாயத்திற பிரசன்னமாயினர். தே வர்கள் பூமாரி பொழிந்தார். மண்ணவர்கள் மழைபொழிந்தார். வண் சனும் மனைவியும் பரவச மடைந்தார். தேவந்துந்துபிக ளொலித்தன. தத்தனும் மகேசையும் தெளிவுற் றெழுந்து பெருமானை வணங்கி னர். அறுமுகக் கடவுள் திருவாய மலர்ந்தருள்வார்.

"வழிவழி யடியீர்! புத்திரப்பேறைத் திருமாலிடங் கேட்டீர். கோவிந்தன் நுங்கட்குப் புத்திரப் பேறில்லை யென்றான். நீவிர்பிற ந்து செத்தாலும் புத்திரன் வேண்டு மென்றீர். அதனால் அவனது கையின்கணுள்ள சுமதி பாஞ்ச சன்னியம் புத்திரனைப் பிறந்து கர்ஷவர், தளத்தன் மூழ்கிச சங்காகி லைகுண்ட மடைந்தது, தூதகள் வாயிடங் கண்டு, அதனைத் தீர்க்கும்படி. குழந்தையாய் வ ந்தேம் என்று பழநிப் பெருமான் பலவாங்கோயுங் கொடுத்து மறைந் தருளினர். வணிகனும் மனைவியுஞ் சிலகாலம் பெருமானை யர்சி த்து அவர் திருவடியை யடைந்தின்புற்றார்.

சுவண குத்தனும் மனைவியும் உய்யும் பொருட்டுக் குழந்தை வேலப்பர் மூர்த்தியாய வந்தருளினமையாற் குழந்தை வேலப்பர் மூர்த் தி யெனப்பெயர் பெற்றார். செட்டிக்குப் பிள்ளையா வந்தமைகுறி த்துச செட்டி யெனவுங் கூறப்பட்டார்.

பழநித்தலபுராணம் - சுவணதந்தச் சருக்கம்.

எடுத்தனைக்கு மதுபோழ்தி னிருவரையு மூலகறியத் தடுத்தடிமை கொளவேண்டிச சண்முகமாய்ப் பன்னிருகைத்



கோரரிகுதாரி நிர்த்தி.

தொகுத்தபனிட கருங்கருங்ண் டந்தய வ்முந்தோளைக் கோடி
மதித்தமயி லுந்தோன்று கின்றண்வரன்வர்தோமான்.
முன்னீர்மா தவஞ்செய்தொண் முயற்லுமுங் கிருறங்கு
மைமுகீர்மே னியன்சோன்றி மகப்பெறன்மற் றில்லையென்ரு
பின்னீரபெற் றிறந்தாலு மகப்பேற எருள்கவென்றே
சொன்னீரா கலின்மகவாயத் தோன்றியதொண் காசசங்கம்.
ஆவலினம் பருவம்வைகி யடைந்ததுமீண் டதுபுரிமால்
யாவதும்யா மளியுடையீ ராதலினிவ் வாறுதும்பாற்
ரூவறவாற் றினமென்னுச் சாற்றிவாம் பலநல்கித்
தேவதே வன்றிருவா வினன்புரிச்சே திமஞ்சென்ரூன்.

குழந்தை வேலப்ப மூர்த்தியே நமம்.

மபபத்துநான்காவது,

கோர நிருதாரி மூர்த்தி.

அறுபத்து நானகு திருவிளையாடல்களுளு சுமாரகடவ
நமத்துக் காட்டத் தரிசித்த பெரும்பேறுடைய விஜயனுக்குக் கு
கன்பிறந்தான். அவனுக்கு விருகன் பிறந்தான். விருகாசனுக்கு ப
பாகு. எனனும் அரசன் மகனை. அவன் அரசாளுங் காலத்தில்
கேகய தால சங்காதியர்களாலே வெல்லப்பட்டு இருமனைவியருடனே
வனம் சென்ரூன். அங்கு அவன் மனைவியருள் மூத்தவள் கருப
வதியாளள். இளையமனைவி பொருமை கொண்டு உணவுடனே
விடத்தையும் ஊட்டிஞள்.

அதனால் அக்கருப்பம் எழாண்டளவும் வயிற்றில் இருந்தது
அதற்குட் பாகுவாசனும் இறந்தான். அப்போது கருப்பவதியான

மனைவி தன்கணவனுடன் இறக்கத் தீர்மானித்து விறகடுக்கினுள் முக்காலமும் முணர்ந்த அவுர்யமுனிவர் தந்தை தாயை ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று உபசரணை செய்தனர். சிலகாள் கழிந்திடப் பிழகுடைய ஒருபுத்திரன் விடத்துடன் கூடப்பிறந்தான். கஞ்சனுடன் கூடப் பிறந்தமையாற் சகாரி எனப் பெயரிட்டார்கள். கான்=நஞ்சுடன் பிறந்தவன்; காம்=நஞ்சு. அவன் விதர்ப்பை சுமதி யென்னும் இருமனைவியரை விவாகஞ் செய்தான். அவன் மூத்தமனைவியிடம் உதித்தான் அசமஞ்சன். அவன் மகன் அஞ்சுமான். அவன் புதல்வன் திலீபன். அவன் மகன் பகீரதராசன்.

இப்பகீரதராசன் அரிய தவங்களைச் செய்து கங்கையைப் பூமியிற் கொணர்ந்து தன் மூதாதையரைக் கதி சேர்த்துப் பெரும்புகழுடன் அரசாண்டான். அதுகாலம், கோரம் என்னும் இராக்கதனொருவன் தவபலத்தினாலே யாவரினும் மேம்பட்டு மிக்க வலியுடையனாய்த், தேவர், முனிவர், திசைகாப்பாளர் யாவரையும் வென்று பூவுலகிற்குவந்து பகீரதனோடு எதிர்த்தான். பகீரதன் தன் காற்படைகளுடன் தேருடன் நின்று பொருதும், கோரன் மகாகோபத்துடன் சேனைகளை யெல்லாம் அழித்து, பகீரதனைக் கையாலெடுத்துப் பதுபோற் சுழற்றி வீசினன். அந்தரத்திற் சென்ற பகீரதன் மிக்க நெடுந்தூரத்திலுள்ள ஓர் வனத்தில் விழுந்தான். இங்கே கோரன், அண்மனையுட் புகுந்து தனதுசேனை செலுத்தி எவரையும் அடக்கி யாசாண்டான். மனைவியும் மக்களும் பகீரதனட்டகாரர்கள், அவற்றை யெல்லா மறிந்த பகீரதன் இதற்கென்செய்வோம், கோரராக்கதனுடன் யான் சண்டைசெய்து வெற்றி கொள்ளல் முடியாது என்று வருந்தி மனமகாருடன்வர் வனங்களோடாடுசென்றான். செல்லுங் காலத்துப் பிருது முனிவரின் ஆச்சிரமத்தோன்ற அங்குப்போய், அவர் திருவடிகளில்வீழ்ந்து வணங்கி நடந்த தெல்லாம் உணர்த்தி, அடியேன் உய்வதற்கு யாது மருந்தெனவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

வீழ்ந்து வணங்கித் துதித்து, எம்பெருமானே! தாசகன் செய்த
குற்றம் என்னும் அசுரர்கள் வருந்த இந்திரன் நாடோறும் தின்பரு
ந்து தன்பதத்தைவிருத்து இம் மேருமலையில் மறைந்திருந்தான்.
அவன் தேவரீரை விரும்பி பணிவர்களோடு சொல்லித் திருவுள்ளோ
லத் தன்னாணைப்பெற நினைத் திருந்தான். பல காலும் அருந்தவம்
செய்து வாடினன். தேவரீரது திருவுளதாக தரிசித்தருள் தன்மை
யெல்லாம் நீங்கிஞ்ற மோலு டலைக பூத்தான். தொண்டனை இத்
திரன் பிரிவீர் இங்ஙனந் திருவிளையாடல் செய்வதையறிந்திலன்.
விட்டினு முதலினோர் தேடிக் காணுத லெவரெருவர்னும் உமாதேவி
யாரும் அவர் திருவருள் பெற்றோர் எவரென்றித் தேவரீரது திருவி
ளையாடலை யறிய வல்லவர் யாவர்? அடியேம் யாசித்தையும் பகலை
யுங் கருத்து இஃதித் தனியை தென்று தறிந்திலேம். பாசத்தி
னின்று நீங்கிலேம். பிறரறி வுடையேம். இவ்விலேபு உடையேம்
தேவரீரது திருவிளையாடலை யெங்ஙனம் அறிவேம். நீரே
தண்டமே புரிந்தருளினீர். மற்றைத் தேவர்களும் அஞ்ஞானத்
தாற் பொரு திறந்தார். தாய் தந்தையர் தமக்குப் பிழை புரிந்த
பின்னோதனைக் கொல்வாராயின் அவர்க்கு வேறியார் அருள் செய்
வர்? ஞான வடிவாகியவரும்! சாபஞ் செய்கத்தைக் கொல்வதன்றி
பின்னினியைக் கொல்லுமோ? அருட் பெருங் கடலே! அகம்

கோ வேதோர் வருத்தருளும் எனியவர்களுக்கு தேவர்கள் திரு
வடியை மறத்தலில்லாத அன்பாகனு மனை தேவர்கள் செய்த
பிழையைப் பொறுத்தருளி, அவருயிர் பெற்று உய்யும் வண்ணம்
திருவருள் புரிக" என்று விண்ணப்பஞ் செய்தார்.

முன்னின்ற மும் பொருட்செல்வனும் முன்னே மும் பொரு
ளாகிய முருகக்கடவுள் அது கேட்டுத் திருமுறுவல் செய்து இந்
திரன் முதலிய தேவர்கள் தத்தம் வாகனம் பெற்று முன்னிலை
வற்றோடும் பழமைபோல் உயிர்பொலிய ஏழுலகும் திருவளர் செய்
ணருளினர். அவ்வளவே இந்திரன் முதலாயினோர் வழுத்து
மெய்யறிவு தோன்றப் பெற்றுத் தாங்கள் தேவர் பதிக்கு முருக
கடவுளுடனென்று அமர்ந்து நடாத்துகின்ற வெல்லையில் மன்னுலை
வீழ்ந்து தாழ்த்து அவாது திருவருள் பெற்றமை மேலோர்
களை வைப்பித்து உய்ந்தார். தேவர்களைத் தண்டித்தமையினால்
தமையாற் முகவாயி தேவதண்டனாயனார் எனப் பெயர்
பெற்றார்.

சங்கர சங்கிதை - சம்பவ காண்டம்.

[illegible]

174

கந்தபுராணம் திருவிளையாடற் படலம்.

சுழுதிகொண் டுணர்த்த லோடுந் தொன்ன முதலா வுள்ளோர்
விழிவிடத் தோய வண்ணர் மெய்ததவம் புரிந்த கார
வழிவுற வுலகிலாடு மறுமுகன் வதன மொன்றிற
குழலிசை கொள்ள வள்ள குளிர்விடைத் தோன்றி னானால்.

தெவ்வாருலகிற் பொருதே சென்மம்பெற் றீடு
பெற்றாலுலகத்து வெற்றித் தெய்வக் கோயில்
வேலாலிவனுக் தனிக்கற் விடாகண் மேலு
மேற்றுவ தாப்பம் வெறுந் தனியீசனெத்தான்.
வேலுண்ணவு னின்னான் முகன்று வேண்டிட
மூன்றவர் முன்னே வன் முறுவல் செயதுவரின்
வன்னவ ரதிபர் மல்க வரிதிறுறு
தேவேயிவனுக்கு வரங்களெல் லானோர்.

தேவதேவன் ரகுநாத மூர்த்தயே நமஃ


நாறபத்தொன்பதாவது.

* தாரகாசுர சங்கார மூர்த்தி.

முருகக் கடவுள் சூரபன்மன் முதலாய அசுரரைச் சங்காரிப் பான் திருக்கயிலை யினின்றும் எழுந்து தேர்மேல் வரியருளுமை

---

* தாரகாசுர சங்கார மூர்த்தியும் வேறு, தாரகாந்தக மூர்த்தியும் வேறும். தாரகன் இறந்தானாதலின் தாரகாந்தகன் என்று சொல்லப்படுகிற மூர்த்தியை முருகன் துணைவராகிய தாரகாந்தக மூர்த்தி யென்று சொல்வர். அன்னது பொருந்தாது. என்னை? அவனைத் பதினறு யுகத்திற்கொரு முறை தாரகாந்தக மூர்த்தி, சென்ற முகார்தக மூர்த்திகளாலும் வெல்லப்படாத வலிமை பெற்றிருத்தலினாலும். தன்றென்க. எனவே கூறப்பட்ட தாரகன் மாய புத்திரனைக் குறித்தே தம்பியாயிருப்பான்.



தாரகாசுரர், சங்காரமூர்த்தி.

போதி வாயு தேவன் மூன்று கோலும் மத்தளமும் கொண்டு பாக லுகி, † தன்னினமாகிய வாயுக்கள் பக்கத்தில் மகிழ்ச்சியோடு செலுத்திலன். இரண்டாயிரம் பூதவெள்ளங்களும், † நாற்றேண் மரீசேனாபதிகளும், இலக்கம் வீரர்களும், தம்பிமார் ஒன்பதின்மருஞ் சூழப் புறப்பட்டார். பூமியை வந்து அடைந்த காலை, தாரகாசுரனுக்கு இருப்பிடமான கிரவுஞ்சமலை சேர்ந்தது. தேவர்கள் அதனைக் கண்டு மனம் பதைத்து பயந்தார்கள். இந்திரன் நடுங்கினான். நாரத முனிவர் அழுமூக்கு கடவுளின் நிருவடிகளைப் பணிந்து, பாயா மூர்த்தி! முனிவர் தேவர்களை யெல்லாம் வஞ்சகத்தாற் கொன்ற அகத்தீய முனிவர் சாபத்தால் மலைவடிவமாய் நிற்கும் அசுரன் இவனே. இம்மலையின் பக்கத்திலுள்ள மாயமா புரியிலே சூரபன்மனுக்குத் தம்பியும், யானை முக முடையவனும், மாயையில் வல்லவனும், விடுதலுவின் சக்கரத்தைப் பொன் மலையாகத் தாங்கியவனும் ஆகிய தாரகன் என்னும் அசுரன் இருக்கின்றான். இவனைக் கொல்வீராயின் இவன் தமையனைக் கொல்லல் பிதவளித்து என்று விண்ணப்பஞ் செய்தார். "அவனை இங்கே கொல்வேம்" என்று சிவனை பல் சுவாமி திருவாய் மலர்ந்தருளி, பக்கத்து நின்ற வீரவாகுதேவரை நோக்கி, "இளவலே! இது நீ வஞ்சமலை. இதன் பக்கத்தில் உள்ள மாயமா புரியிற் சூரன் என்பானுளன். அவ்விடம் பூதவெள்ளத்தை யுடனும், இலக்கத் தெண்மர், பூதசேனாதிபதி என்னுமவர்களோடுஞ் சென்று போர் புரிந்து, தடித் தெதிர்க்குள் சேனைகளைக் கொல்வாய். தாரகனுடன் பொருது வெல்லுவாயின் யாம் வந்து தெரிப்பாம்" என்று கட்டளையிட்டருளினர்.

† தற் பெண்மர் சேனாபதிகளின் விபரங்களை மகேந்திர காண்டத்திற் காண்க.

† வாயுக்கள் காற்றுத் தொகை தென்று புராணங்களை பற்றின தனினமாகிய சிவசேனை. இவைகளை மருத்துக்களுக்கு தேவர்களால் முடையாயிர் வாயுதேவனை கந்தபுராணத்தில் கடவுள் சேனாபதி தென்ப. இவைகள் அவ்வளவு வெல்லாத சக்தி யுள்ளவை என்பதை புராண முறையிலறிந்து கொள்க.

...னித் தொகுத்து அழித்து வேலாயுதர், சிறந்த இலக்கிய வீரர்கள் ...
னையறிந்து வகுத்து யுத்தம் புரிந்தார்.

...தகன் வைத்த தண்டத்தாற் றோல்வியடைந்து சினந்தது, இலக்கம் யோசனையும் வாழ்த்தனுதிணையை யெய்தித்துக்கட்டவிலை நின்றான். அவர்கள் விழுந்து மருகத்தைப் போனார்கள். வீரகே சரி பென்போர் தாரகன் நிட்டத்தைத் தகாதார். அவனும் தண டத்தாலடித்தான். மயங்கினிற்றார். வீரவாகுதேவர் எதிர்த்துப் பொருதார். பூதனுஞ் சுரிகாரனுஞ் சேருங் காலத்திற் சோலையாரி பெய்வதைப் போலத் தாரகன் பாணங்களை பொழிந்து மறை தான். கருமா மூலைபோ சனி புகுந்த காலத்து மழையென்பது சிறிதுமில்லாமைபோல வீரவாகுதேவர் அவைகளை யெல்லாம் பா ணங்கள் விட்டு மாற்றினர். அசுரன் மிக்க கோபங்கொண்டு முத் தலை சூலமொன்றை யெறிந்தான். அதுவீரபாகு தேவரது மார்பி லிடட்டையால் அவர் சிறிது சலமே மூர்ச்சையடைந்தார். அப் ...தவரது தம்பிமார் வீழ்வரும் வந்துவிசேந்து யுத்தம்புரிந்தனர். தாரகன் அவர்கள் விடுத்த பாணங்களை யெல்லாந் தன் றுஷ்கையி னால் வீழ்த்தி தண்டாயுதத்தினற் புடைத்தனன். அவர்கள் மிக் கருத்த முற்றேருக்கி சினத்தித் தாருகனை சாடி செயுந் வி ...ரர்கள் பலவற்றைக் கோபத் தாலே பொழிந்தார். அசுரனவைகளைப் பாணம் விட்டு றுத்தி ஓர் ...ருவியதைக் கொண்டு வீரவாகுதேவரது ஓர் ...னி ...த்தினை யுதைத்து கடக்கினான். இதனைக்கண்டு வெம்மை பூண்டு ...ளைத்து செல்லுகின்ற சக்கராயுதத்தை வீசினார். அது ...ழுந்து ...தகனது வலதுபாகுவை வெட்டிக்கொண்டு வந்து தம்மை ...ணுகுதலும் தடுத்து ...ன்று ...ருவியதனை வாங்கி ...ழுந்து ...

அவ்வாறு வம்புகளை விளைத்தும், மாறுபட்ட கொள்கைகளை மேலிட்டும் அழித்தனர் வீரவாகு தேவர்.

மாயையில் வல்ல மாவீரமுக முடையதாரகன் அவரது யுத்த வல்லமைகண்டு அற்புதங் கொண்டு, இவரை மாயையினால் வெல்ல வேண்டுமென்று, மாயா மந்திரத்தை யுச்சரித்து, எண்ணில்லாத வடிவங்களோடு தாக்கி, இருட் குழாம் எங்கும் பரந்தாற் போல அவ ரொருவனே வெங்குமாயங்களை யோர் செய்தான். அசுரர்களோடு அவரைத் தொலை செய்தார்கள் வீரவாகுதேவர். வீரபத்திரப் படைக்கலத்தை விடுதற்கு ஒருங்கினார். அம்மாத்திரையே தாரகன் மாயை யழிந்தது. தனித்து நின்ற தாரகன் பின்னரும் மாயையால் வெல்ல நினைத்துத் தோற்றோடுவோன் போலப் புறங்காட்டியோடி னான். வீரவாகு தேவர் தோற்றவன்மீது படைவிடுத்த வல்லா தென்று படையைத் தாணியுள் இட்டு, இவனைப் பிடித்துக் கட்டி எம் பெருமான் முன்னர்க் கொடுபோவோம்" என்று அவனைத்தொடர்ந்து சென்றனர். சிவருத்திரமூர்த்தி சென்று விளித்தான். வீரவாகு தேவர் அக்குகை வழியே செல்லலும் மயங்கி வழிதெரியாது அறிவிழந்து துயின்றார். பூதர்களும் இலக்கத் தென்னும் எமது தேவர் இன்னும் மீண்டிலர் என்று தாமும் மூலைக்கு மூலை அறிவிழந்து மயக்கமுற்றனர். தேவர்கள் களிப்பதைப் பார்த்தார். தாரகன் வந்து வில் வீரர்த்துப் பாணங்களாலடித்தலும் பூதங்களெல்லாம் மோடின.

நாரத முனிவர் இவையிற்றைக் கண்டு ஓடோடியும் சென்று எம்பெருமானுக்கு நிகழ்ந்தவற்றை விண்ணப்பித்தார். அருட்பெருமானும் "நினைப்பொழுதில் தாரகனையும் மூலப்பொருளையும் அழித்து வீரரை மீட்கின்றோம்" என்று நிருவாய் மலர்ந்தருளி, விரைவிற்றேர் செலுத்துவித்துத் தாரகனிடத்தை யடைந்தருளினார். தாரகன் பூதசேனைகளை வதித்துத் தூரத்தே, குமார

சுவாமி மீது சேனை எரிபோலப் பாணங்களைப் பொழிந்தான். அவை யெல்லாம் பெருமான் பக்கல் வந்து வந்து ஒதுங்கின; திகைத்து நின்றன. தாரகன் கண்டு அகந்தையை யொழித்தான்; சிறிது அஞ்சினன்; மிகவும் மிகத் தருமமடைந்தான். அரியசிவப்படைக்கலத்தை விடுத்தான். அதனைத் தம்முடைய காதை நீட்டிப் பெருமானர் பற்றிக் கொண்டனர். பின்னர்த் தாரகன் மன மொந்து கிரவுஞ்ச மலையுடன் முனுஞ் சேர்ந்து அநேக கோடி மாயைகளைச் செய்து திரிந்தான். பெருமானர் வேலாயுதத்தைத் திருக் கடைக்கண் கோக்கஞ் செய்து ஓரிறைப் பொழுதுள் மலையையும் அசுரனையும் அழித்து வீரரை மீட்டு வருதி யென்றார். அங்ஙனே வேலாயுதஞ் சென்று மலையைப் பொடிபடுத்தித் தாரகன் மார்பைப் பிளந்து சென்றது. தாரகன் அண்டமுகடு உடைந்து வீழ்ந்தாற் போல விழுந்தான். படைக்கல நாயகமாகிய வேலாயுதம் வீரர்கள் யாவரையும் எழுப்பி விட்டு ஆகாய கங்கையிற் ரோய்த்து சுத்தவடிவாய் எம பெருமான் திருக்காத்தில் வீற்றிருந்தது. பரப்பிரம பாஞ்சோதிப பிழம்பாகிய அறுமுகக் கடவுள், தாரகன் என்னும் அசுரனைக கொன்றமையால் தாரகாசுர சங்கார மூர்த்தி யாயினர்.

ஸ்காந்த புராணம் - சிவரகசிய கண்டம்.

தாரகேதி மகாமந்த்ரஸ்ய தக்ஷிணாமூர்த்தி ருஷிர்
பங்க்திச்சந்தோ தேவதா தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபோ
மம ஆத்மஸாக்ஷாத்கார ஸித்யர்த்தே ஜபே விநியோகஃ.

தாரகாசுர சங்கார மூர்த்தயேநமஃ

ஐம்பதாவது,

சத்திர நடன மூர்த்தி.

ஆரிய திராவிட நூல்களிலும் மாட்டுப் பலவகை நடனங்களும் கூறப்பட்டுள்ளன. கூத்துக்கள் சாந்தி விநோதம் என இருவகைப்படும். அவற்றுட் சாந்திக் கூத்து என்பது சுத்த நிருத்தம், மெய்யக் கூத்து, அவிநயக் கூத்து, கதை தழுவி வரும் நாடகக் கூத்து என மூன்று வகைப்படும். மற்றைய விநோதக் கூத்து என்பது குரவை, கலிநடம், குடக்கூத்து, காணம், நோக்கு, தோற்பாவை என அறு வகைப்படும். வீதிநாடகக் கூத்து என்னும் நாடகத்திறச் சுவை யென்பது தனையுஞ் சேர்த்து எழுவகைப்படு மென்றனர் மதிவாணர் முதலிய ஆசிரியர். அது: "எழுவகைக்கூத்து மிழிகுலத்தோரும் பாடு வருதன னாடகத்தியன் மூன்றே" என்று நாடக நூன்முதலிய கூறுமாற்று ணர்க.

இக்கூத்துக்களி னிலக்கண முணர்க்குங்கால் வைணவம், கௌ மாரம், சைவாகமம், மண்டலம், ஆலீடம், பிரத்தி யாலீடம் என்னும் அறுவகை நிலையும், சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ் சிதம் என்னும் ஐவகைப் பாதமும், சரிகை, புரிகை, சகடவி, நிரி கை, ஊர்த்துவ கலிகை, பிருட்டகம், அர்த்த பிருட்டகம், சுவத்தி கம், உல்லோலம், குர்த்தனம், வேட்டனம், உபவேட்டனம், தா ண்டவ, லாஸ்ய விருத்தம், உத்கேபணம், அவக்கேபணம், நிருஞ்சன

சுக்ரீவனுக்கு முடிசூட்டுதல்.

179

மென்னும் பதினாறு வகை யங்கக் கிரியைகளும், அப வேட்டிதம், உபவேட்டிதம், வியாவர்த்திதம், பாவர்த்திதம் என்னு நால்வகை வருத்தனையும், சதுரச் சிரம் முதலாக வலிதை யீருகவள்ளு மூப்பு பதுவகை நிருத்தக் கையு மூடையன வாகும். அது "அறுவகை நிலையு மைவகைப் பாதமு - மீரெண் வகைய வங்கக் கிரியையும் - வருத்தனை நான்கு நிருத்தக்கை மூப்பது - மத்தகு தொழில் வாகு மென்ப" என்னுஞ் சுத்தானந்தப் பிரகாச பாதநூற் கூற்றும் தெளிக.

இவை யெல்லாம் அகக் கூத்துப் புறக்கூத்து என்னு மிரு வகைக் கூத்தினு ளடங்கப் பெறும். அவற்றுட் புறக் கூத்திற்குரிய ஆடல்கள் பெருகடை, சாரியை, பிண்டி, பதினோராடல் என்பனவு மாம். பதினோராடல்க ளாவன:—அல்லியம், கொடு கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக் கால், பாவை என்னு மிவைகளாம். இவற்றுண் முன்னைய ஆறும் பின்னுடல் எனவும், பின்னைய வைந்தும் வீழ்ந்தாட லெனவுஞ் சொல்லப்படும். இப்பதினொன்றும் வருக மூள்ள அசுரரைக் கொல்லுமாறு தேவர்களால் ஆடப்பட்டமையாற் றெய்வ விருத்தி யெனவுஞ் சொல்லப்படும். அவ்வயிற்றை,

"அல்லியங் கொட்டி குடைகுடம் பாண்டரங்க
மல்லுடன் பின்னுடலாறு.

"துடிகடையம் பேடு மரக்காலே பாவை
வடிவுடன் வீழ்ந்தாட் டொகுத்து."

என நாடகநூல் கூறிற்று. இவையிற்றுட் சத்திர சடனமென்ப தது குடையாடல் என்று சொல்லப்படும். மூன்றுவது ஆடலாம். சத்திரம்—குடை. இக்கூத்து நின்று ஆடலின்பாற் படும். இச்சத் திர சடனம் நான்கு உறுப்புக்களை யுடையது. அது "அறுகுத் தோடல் குடைமறை தற்குப்—பெறுமூறுப்பு நான்கா மெனவே" என்ற சூத்திரத்திற் கண்டது.

120

சுப்பிரமணிய பராக்கிரமம்.

இத்தகைய தனியாடல் முன்னர் காளிலே அதுலராய், சின் மாத்திர மூர்த்தியராய், சாந்தராய், சர்வதோ முகராய், சர்வஜ்ஞத் துவராய், அதிருக்குமராய், விசுவாதிபராய், இரண்மயராய், பசுபதி யாய், வேதாந்தக் கிருதாய், அப்பிரமேயராய், சமாஜுதிக நாமரூப குணவிதரராய், தத்துவாதீதராய், வாராய், சகள நிட்களராய், அத்தி வாமூர்த்தியாய், தத்துவ பிரேரகராய், ஞான சத்திதராராய், காலத் திரயாதீதராய், அத்துவிதாய், சாந்தியதீதாதீதராய், நிராமயராய், நிர்மலராய், நிரஞ்சனராய், பிரபுவாய், அசிந்திதராய், அசுராகாலாக் நிதராய், சிவாகண குக்குடத் துவசராய், அகண்டாகார சிற்கனு ஸந்த மூர்த்தியாய், சர்வ லோக நாயகராய், எண்குணராய், பிர ணவரூபராய், பிரண வார்த்தராய், உபய கதிர்காம சாக்நித்தியராய், செந்தமிழ்ப் பரமாசாரியராய், சகல கலா வல்லப மூர்த்தியாய், பர சிவாசாரியராய் விளங்கா நின்ற சுப்பிரமணியக் கடவுளாலே யாடி யருளப்பட்டது.

அற்றே லது எவ்விடத் தெது காரணமாக ஆடியருளப் பெற்ற தென்னிற் கூறுதும். தேவரைப் புரத்தற்காகக் குகப் பெருமானர் அசுரர்களுடன் போர் செய்தருளினர். அதுகாலை யவ்வவுணர்கள் யாவரும் தாம் கொண்ட சூலம் வேல், மழு, சக்கரம், தண்டு, வாள், தோமரம், கேடகம், முசலம், வில் பாணம் முதலிய படைக்கலங் களை யெல்லாம் அறுமுகப் பகவன்மீது பிரயோகித்தனர். அவைக ளெல்லாம் பாதத்தில் மலர் போல வீழ்ந்து தண்டுகளாய்க் காணு தாயின. அங்ஙனந் தம்படைக்ளை யெல்லா மிழந்து நிராயுதராய் லவிமை குன்றி வருத்தம் உற்ற மாத்திரையே நியாயப் போர்புரிந்த முருகனர்க்கு அருள் தோன்றிற்று.

நிராயுதராய் நிற்பானைக் கொல்லுத லறமன்மகனாலும், யா தேனுமோர் திருவிளையாடலைப் புரிந்து நிற்பின் அதற்கிடையில் அன்னவ ரெல்லாம் வெல்லற் குரிய வுபாயங் கண்டு மேற்கொள்வா ரென்னு மெண்ணத்தாலும் ஒரு திருவிளையாடல் புரிந்தருள்



அடிக்கடந்தோள்த்தி.

K. S. Venkataramaiah

வான் திருவுளங் கொண்டார். பூதர்களாலே தமக்குக் கவிக்கப் பட்ட குடையொன்றினை யெடுத்து முன்னே சாய்த்து, அதனையே * யொரு முக வெழினியாகக் கொண்டு நின்று ஆடியருளினர். அந் நானே யவர்கள் தம் மாய வஞ்சனைக ளெல்லாம் ஒழிந்து புறங் காட்டி யோடினர். சத்திரத்தையே திரையாகக் கொண்டு குமாரக் கடவுளடித்தலையாற் சத்தீர நடன மூர்த்தீ யாயினர்.

சிலப்பதிகாரம் - கடலாடுகாதை.

படைவீழ்த் தவுணர் பையுள் செய்தக்
குடைவீழ்த் தவர்மு ழுடிய குடையும்.
சத்திர நடன மூர்த்தியே நமீ

ஐம்பத் தோராவது,

துடிக்கூத்த மூர்த்தி.

இத்துடிக் கூத்துத் தெய்வக் கூத்துப் பதினொன்றனுளொன்று. தெய்வக் கூத்துப் பதினொன் றுவன—அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம் பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மாக்கால் பாலை என்னு மிவைகளாம். இவையிற்றுள் அல்லியமாவது - கஞ் சன்றன் வஞ்சத்தாற் கொல்லவந்த குவலயா பீடமென்னும் யானை யையதன்கோட்டை யிறுத்தற்கு மாயோனால் ஆடப் பட்டதாம். இது வைணவரிலையென்றும் அலிப்பேடென்றுஞ் சொல்லப்படும். என்னை? முகம், மார்பு கை கால்களின் வட்டணையும் அவிநயமும்

---

* ஒருமுக வெழினி யென்பது - நாடகம் ஆடும் அரங்கின் னிடத்துக் கட்டப்படுந் திரைகள் மூன்றனு ளொன்று. இடத்தூண் நிலையிற் கட்டப்படும் ஒருவு திரையே யஃதாகும். "முன்னிய வெழினிதான் முன்று வகைப்படும்" என மதிவாணர் நாடகத்தமிழ் நூலாரும், "அரதாங்கிற், செய் தெழினி மூன்றமைத்தச் சித்திரத்தாற் பூதரையு - மெய்த வெழுதி விடற்று" எனப் பரத சேனாபதியு நூலாரு மூரைத்தமை தேற்றெனக் காண்க.

இருக்குங் தொழில் செய்யாது நிற்றலினென்க. அது" ஆடலின்றி நிற்பவை யெல்லா - மாயோ னுடும் வுணவ நிலையே" என்றார் கூத்தநூலாருந்தம் இது ஆறுறுப்புக்களை யுடைத்து.

கோடு கோட்டியாவது - நாரண பாணத்தையும் மலைச் சிலை யையு முடைய தேவர்பெருமான் சிரித்திருளாகிற்ப மூப்புரத் தவு ணரும் வெந்து சாம்பரான பாரதி அங்கத்திலே யுமையம்மையார் பாணி, தூக்கு, சீரென்னுந் தாளங்களைச் செலுத்த, வெள்றி யா னந்தத்தாற் கைகொட்டி நின்று ஆடியருளியது. கொடுங் கொட்டி கொடு கொட்டி யென விகார மாயிற்று. இது நான்குறுப்புக்களை யுடைத்து. தடையாடல் - சத்திர டன மூர்த்தி என்னும் பாக்கிர மக்கட்டெரித்தாம். ஆங்குக் கண்டு கொள்க.

தடக் கூத்தாவது - காமன் புத்திரன் அநிருத்தனைச் சிறை மீட்டல் காணமாக வாணன் நகர மாகிய சோவென்னும் புரியின் வீதிக்கட் கண்ணன்குடங்கொண்டாடியதாம். அக்குடம்பஞ்சலோ கத்தாலும் மண்ணாலு மியற்றப்பட்டதென்க. இது ஐந்துறுப்புக் களை யுடைத்து. பாண்டரங்கங் கூத்தாவது-வாலேராகிய தேரிலே நான்மறைகளாங் கடும்பரிபூட்டி யலங்காரித்துக் கூர்முட் பிடித்துச் சாரதியாயமர்ந்த பிரமன் றன் றேவியின் பிரிவிற்கு ஆற்றாது மாழ் கிய காலை யதனைநீக்கற் பொருட்டு இறைவனே சரச்சுவதி யுருவந் தாங்கி யாடி யருளியதாம். இது ஆறுறுப்புக்களை யுடைத்து.

மற்கூத்தாவது - கஞ்சனு லேவப்பட்ட மல்லர்களைவேறல் கா ரணமாகக் கண்ணனு லாடப்பட்டது. இது ஐந்துறுப்புக்களை யுடை த்து. கடையமாவது - வாணனகரத்தின் வடக்கு வாயிற்க ணுள்ள வயலி னிடத்தே இந்திராணி யாடியது. இது ஆறுறுப்புக்களை யுடைத்து. பேடாவது - காமன் தன்மகன் அநிருத்தனின் சிறை மீட்டற்குத் தன் ஆண்மைதிரிந்த கோலமாகிய மூலை முதலாய பெண்ணுறுப்புக்கள் பலவு முடைய பேடாகி யாடியது. இது

நான்குறுப்புக்களை யுடைத்து. மாக்கால் ஐவது - கொடுங் கோபத்தை யுடைய அசுரர்கள் வஞ்சத்தானே வெல்லக் கருதித் தேன் பாம்பு முதலிய வருவெடுத்துப் பகைகள் தோறும் புகுதலை யறிந்து துர்க்காதேவி யவற்றைக் காலால்நெரித் தழித்தற்கு மாக்கால் மேலெழுந்து ஆடியது. இதுவு நான்குறுப்புக்களை யுடைத்து. பாவைக் கூத்தாவது - அசுரர்கள் கொடியபோரைச் செய்வதற்கு வந்த காலத் தன்னைக் கண்டு மோகித்து வீழும்படி திருமகளா மிலக்குமி தேவி, சோ நகரத்திலே கொல்லிப் பாவைவடிவா யாடியது. இது உறுப்புக்க ளிரண்டினை யுடைத்து.

இவ்வனம பத்தாடலும் விரிக்கப்பட்டன. ஏனைய துடியா டலிற்றிச் சிறிது கூறுதும். முன்னர் ஞான்று காசிப முனி குமாரனை சூரபன்மனுடன் யுத்தம் புரியாநின்ற காலத்து, அன்னோன் பொருகளம் விடித்துப் பொருகடல் புக்கு எரியன்ன தளிரும், புகை போலு மிலைகளும், தங்கம் போலும் மலர்களும், பச்சைக் கற்கள் போலும் பிஞ்சுகளும், மாணிக்கம் புரையுங் கனிகளும், மேகங்களை யொத்த கிளைகளுங் கூடைய இலக்க யோசனை யடர்த்தியா யுள்ள தலைசான மாமாவடிவங் கொண்டு நின்றான். அவன் வஞ்சத்தை யுணர்ந்த குகப்பெருமானர் அவ்வஞ்சங்களும் மாயைகளும் ஒழியுமா றொன்று செய்தருளினர். தந்தை யாகிய சிவபெருமான் ஆனந்தாண்டவ மென்னும் பஞ்சகிருத்திய நடனஞ் செய்தருளுங் காலத்துக் கலடைத்தட்டுங் கருவியென நூல்களான் விதக்கப்பட்ட துடியென்னுங் கருவியை யொலித்தாடி யருளல் சிவணை, தாமும் நூல்களிலே நாடகக் கருவிகள் என்று கூறப்பட்டன.

பேரிகை படகம் மிடத்தை யுடுக்கை
சேமிகு மத்தளஞ் சல்லிகை காடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகத் தண்ணுமை தாவி றடாரி

பத்தரி முழவொடு சத்தி வலைய
மொந்தை மூசே கண்விடு தும்பு
நிசரனந் திமிலை சிறுபறை யடக்க
மாசி நருணிச்சம் வீலேறு பாகர்
தொக்க வுபாங்கங் துடிபெரும் பறையென
மிக்க நாலோர் விரித்துரைத் தனரே.

என்னு நாடக நூற் சுத்தீரத்தாற் பெறப்படுங் கருவிகளுள் முடிவிலே தட்டுதற் குரிய உடுக்கை யென்னுந் துடியையியாவித்து, உல்லோலம், கல்லோலம் என்னுஞ் சிறுதிரை பெருந்திரைகளோடே ஆடும் அரங்க மாகக் கொண்டு, திருவடிச் சிலம்புகள் கலகலெனக் கறங்க ஆடியருளினர். அவ்வாடலாலே சூரபன்மனு மகாசனது மாயு கலெனல்லாஞ் சூரியன்முற்பட்ட பனிப்படலங்களே போலத் தொலைந்தன. வேற்படையாற் றருவைப் பிளந்து தேவர்ப் புரந்தார். இக்கூத்து ஐந்தறுப்புக்களை யுடைத்து.

இவனைந் நாடியென்னுங் கருவியைத் தட்டிக் கடனுவனே லுலாமணி வளர்பக்கத் தாறு நாளிலே பெருமான் திருகடனஞ்செய் தருளலாற் றுடிக் கூத்த ரூர்த்தி யாயினர்.

மதிவாணர் நாடகத் தமிழ்நூல்.

கடையமிர்தி காணிமாக் காலிமைதை கந்தன்
குடைதுடிமா லல்லியமற் கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையான் பாண்டரங்கங்
கொட்டியிவை காண்பதிலோர் கூத்து.

பூமெரித்தல் சூர்மார் துலோபடுத்தல் கஞ்ச
னூரனெரித்தல் வாணனைவா னுய்த்தல்—பெரிய
வான்முத லாகவே லன்முதன் மாயோ
னன்முத லாடிய வாறு.



சிந்தை தேர்ந்து.

துணைநூல்.

ஆடியாடல் சிவன்முருகு ஞாலத்தினுக்
கொடியாவழுப்போரைக் தாம்.

சிலப்பதிகாரம்.

மல்லல் ஞாலம் மாக்கடல் வண்டுவ
னீர்த்திலா யாங்கத்து நிகர்த்தமுன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ னடியு துடையும்.

துடிக்கூத்த மூர்த்தயே நமஃ

ஐம்பத் திரண்டாவது,

விந்வ மூர்த்தி.

மகனறிவு தந்தை யறிவு என்ற முதுமொழிப்படி சுப்பிரமணியக் கடவுள் தம்தந்தையா செல்வத் தொழில்களை யியற்றின்றனரோ, அவ்வாறே தாமும் அவையோலுந் தொழில்களை யியற்றியருள் பின்றார். என்னே? சிவபெருமான் அருண்மொழித் தேவராகிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளுந்த "உல்கெலாமுணர்ந் தோதற் கரியவன்" என அடியெடுத்துக் கொடுத்துப் பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத் திருவுருப் பாவவைப் பாடுவித்தாற் போலக் கந்தக் கடவுளாரே தாமும் ஓர் பெருங் காப்பியத்தை யடியெடுத்துக் கொடுத்துப் பாடுவித்த சரிதம் பெறப்படுகின்றது. தந்தையார் தருமிக் களித்த கவியை மெய்ப்பிக்குமாறு விந்வ கோலங் கொண்டு புலவாகுழுமிய வலைக்களஞ் சென்றருளி, மைந்தரா மிவருந் தாம் அடியெடுத்துக் கொடுத்தருளிய கவியை மெய்ப்பிக்குமாறு விந்வ கோலங்கொண் டெழுந்தருளினர். அவற்றின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுவாம்.

185

சாலிவாகன சகவருடம் * எழுநூற்றிற்குச் சமமான கலியுக வருடம் மூவாயிரத் தெண்ணூற் றெழுபத் தொன்பதிலே, தொண்டை மண்டலத்திலே சப்த முத்திர் தலங்களுட் சிறந்து பற்பல மகிமைகள் செறியப் பெற்றதாகி விளங்குங் காஞ்சி புரத்திலே, "ஏவோ ஸ்தாபிதச் சைவ சைவோ வ்தரபிச் சிவ|| சிவ சைவ விசத்தாத்மா சகில ப்ராஹ்மலே குரு:|| (சிவாகமஞ் சிவபெருமானுற ருபிக்கப் பட்டது. சிவபெருமான் சிவாகமத்தாற் ருபிக்கப்பட்டனர். சிவபெருமானுலுஞ் சிவாகமங்களாலுஞ் சுத்த ஆன்மாக்களாயுள்ள சிவப்பிராமண ரொன்னுஞ் சைவாசாரியர் தாபிக்கப் பட்டனர்.) என்று காரணாகமங் கூறிவித்த பஞ்ச விருடி கோத்திரத்தவர்களான ஆதிசைவ மாபின்கண் காளத்தியப்ப சிவாசாரியர் என்னு மருந்தவப் படிவர் ஒருவர் இருந்தார்.

சுப்பிரமணிய பக்தியின் மேற்பட்ட அவர் "ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே - மாறிலா திருந்திடும் வளங் தொள் காஞ்சியிற் - கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வா - ழாறுமா முகப்பிரானடிகள்" போற்று மருச்சகராய் விளங்கினர். மூன்றிலக்கணிருந்தங்களே யுடைய சிவபுராணம் பத்தனுள், ஒரிலக்கங் கிருந்தங்களேயும் ஐம்பது கண்டங்களேயும் † ஆறு சங்கிதைகளேயு முடைய காந்த புராணத்தி னேர் சங்கிதையின் பாகஞ் செந்தமிழிற் செய்வனே வருதற்கேற்ற புண்ணிய மெல்லாங் திரண்டோர் வடிவெடுத்

---

* சாலிவாகன சகவருடம் எழுநூற்றிற்கு, ஆங்கிலேய வருடம் எழுநூத் தெழுபதேழாம் வருடம். எனவே பிறகைக்கு கல்கூறுபத்திற்கு முன்னென்க.

† சனத்குமார சங்கிதை ரூ000 சுலோகமும், சுதசங்கிதை ரூ000 சுலோகமும், பிரசங்கிதை ரூ000 சுலோகமும், விட்டுணு சங்கிதை ரூ000 சுலோகமும், சுங்கர சங்கிதை ரூ0000 சுலோகமும், சூரசங்கிதை ரூ000 சுலோகமும் ஆக ஒரிலக்கச் சுலோக சங்கியை கண்டு தொன்க. சங்கரசங்கிதை பன்னிரு கண்டங்களே யுடைத்து. அவற்றிற் பதின் மூவாயிரஞ் சுலோகங்களுள்ள முதலாங் கண்டமாகிய சிவரகசிய கண்டத்தின் ஏழு காண்டங்களுள் முதலாறு காண்டமே மீண்டுப் பாகமெனப் பட்டன.

தாற் போலக் குமர கோட்டத்து அடிகளா ரருளினாலே கானத்தி யப்ப சிவாசாரியார்க்கு ஓர் தவக் குமாரர் உதித்தார்.

அவர்க்கு உரிய காலங்களிலே செய்ய வேண்டிய சடங்குகள் செய்து கச்சியப்ப சிவாசாரியர் என்று நாமகரணமுஞ் செய்தனர். பின்னர் ஐந்தாம் வயதிலே வித்தியாரம்பஞ் செய்யப்பட்டது. கச்சி யப்ப சிவாசாரிய சுவாமிகள் முக்கட் கடவுளின் திருவருளினாலே இருக்கு முதலிய நான்கு வேதங்கள், உபநிடதங்கள், வியாச சூத் திரம், மீமாஞ்சை, பாதஞ்சலம், வைசேடிகம், திருதி, நியாயம், சிக்கை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி, உபவேதங்கள், புராணங்கள், காமிகம் முதலிய இருபத் தெட்டாக மங்கள், உபாகமங்கள் முதலிய வடமொழி நூல்களின் மிக பாண் டித்திய முடையவ ராஞர்.

"சிவசாஸ்திர சமாயுக்தாஃ பசுசாஸ்திர பாரங் முகாஃ|
ப்ராஹ்மணஜி சதுர்வர்ணஞ் ஆசார்யாஸ்துப்ர கீர்த்திதாஃ|

என்று சைவபுராணம் கூறியவாறு பசு சாத்திரங்களி லெல்லாம் பயிலாது கழித்துச் சிவசாத்திரங்களையே பயின்று ஆசாரித்துவ மடைந்தார். சிவாகமத்தில் இலக்கம், அதிற்பாதி (50000) அதிற்பாதி (25000) முறையே அத்தியயனஞ் செய்பவர் முறையே குரு சிரேட் டர், மத்திமகுரு, அதம குரு எனக் கூறலால் இலக்கு கிரந்தங்கள் வரையில் அத்தியயனஞ் செய்து மாசாரியத்துவ முதன்மை பூண் டார். தமிழினுக் தேவார திருவாசகங்கள், திருக்கோவையார், இறை யனார் அகப்பொருள், தொல்காப்பியம், அகப்பாட்டு, புறப்பாட்டு, ப திற்றுப்பத்து, பரிபாடல், இசைநூல், மூத்தொள்ளாயிரம், தாளசமுத் திரம், திவாகரம், சதாகரம், பாதசேனுபதியம், இசைமரபு முதலிய பலப்பல நூல்களையுங் கற்று வல்லவாயினர். சுப்பிரமணியப் பெரு மானே பரமபதி யென்று உண்மையி னுணர்ந்து தந்தையார் செய்து

வந்த குமரகோட்டக் குகார்ச்சனைத் தொழிலையே சிவாகம விதிப் படி தாமுஞ் செய்து வந்தார்.

குகபரப் பிரமத்தையே வழிபடு கடவுளாக் கொண்ட சுவாமி கள் வைதிக சித்தாந்தத்தையே யுண்மை நிலையெனக் கொண்டு தமி ழினும் மிக்க ஆர்வம் வைத் தொழுகினர். செந்தமிழ்ப் பரமாசாரிய ஞரு சிவருகக்கடவு ளொருநா ளவரது சொப்பனத்தின்கண் எழுந் தருளி, "அன்பனே! வடமொழிக் கந்த புராணத் துள்ள எமது புகழ்ச் சரிதையைத் தமிழிற் பாடுதி" என் ரருஞ்ஞாபித்து, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" எனவும் அடியெடுத்துக் கொ டுத்து மறைந் தருளினர். சுவாமிகள் விழித் தெழுந்து "புழுத்த நாயினுங் கடையேனுகிய அடியேனை யொரு பொருட் படுத்திப் பர மதெய்வம் எழுந்தருளிப் பணித்தவா றன்று றன்று" என்று திரு வருளை வியந்து வாழ்த்திச் சுப முகூர்த்தத்திலே கந்த புராணத் தைப் பாடத் தொடங்கினர்.

வடமொழிக் கந்த புராணத்தி லாறுசங்கிதையுட் சங்கர சங்கி தையிற் பன்னிரு கண்டத்துண் முதற் கண்டமாகிய சிவ ரகசிய கண்டத்தி னெழு காண்டங்களுண் முதலாறு காண்டத்தையே மொழிபெயர்த்துப் பாடியருளினர். பாடியகவிகளை யவ்வத்தினத்தி லேயேயட்டி லெழுதிக் குமரகோட்டத் தெம் பெருமானுடைய திரு வடிக்கீழ்வைத்து அருசிதத்துத் திருக்கதவந் திருக்காப்பிட்டுச்செல் வார். மற்றை நாட் புலரியிற் றோய்ந்து சந்தியாவந்தன முதலிய கடன்களை முடித்துத் திருக்கோயிற் கதவு திறந்து பார்க்குங் கா லத்தில் ஆங்காங்குள்ள பாடல்களிற் றிருத்தஞ் செய்யப்பட் டிருத் தலைக் கண்டு களையிலா மகிழ்ச்சி யடைந்து, கசிந்து கசிந்துருகு வார். எம்பெருமான் றிருவரு ளிருந்தவா றென்னே யென்று சாலவும் வியப்புக்கொண்டு தலையா மன்புந் தலைக்கொளப் பெற்றார். உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம் என்னும் ஆறு

காண்டங்களையும். "மாத்திரை யெழுத்திய லசைநிலை யெனஆ" என வொல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனு மெடுத்தோதிய செய்யுளுறுப்பு முப்பானென்கும் பெரிது மமையச் சொற்சுவை பொருட் சுவை முதலிய வெச்சுவைகளு மியன்றுவர" பெருங்காப் பிய நிலை பேசுங் காலை - வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றி னொன் - றேற்புடைத் தாக மூன்வா வியன்று" என்வருஉஞ்சூத் திரத்தாற் றண்டியாசிரியர் சொற்றுங்குப் பெருங் காப்பியத்திற் குரிய விலக்கண மெல்லா நிரம்பப் பெற்றுப் பதினாயிரத்து முந் நூற்று நாற்பத்தாறு பாக்களாகப் பாடி முடித் தருளினர்.

அவ்வரிய நூலை யரங் கேற்ற வேண்டு மென்று அடியவர் விழைந் தாங் கமைதியற்ற வியைந்தருளினர். குமர கோட்டத்திரு மண்டப மெங்கணும் விதான முதலியவற்றினும் தோரணங்களா னுமழகு செய்து வேண்டியனவற்றை யெல்லா மாங்குள்ளா ரடியர் தந்து மூற்றினர். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் சுபதினத்தே புராணத் திருமுறையை யலங்கரிப்பித்து அன்புடன் அதற்கர்ச்சனை புரிந்து முதற்காப்புச் செய்யுளைப் படித்து" திகழ் தசக் காச் செம் முகம் ஐந்து உளான்=விளங்காநின்ற பத்துத் திருக்காங்களையுஞ் செவ்வியலைந்து திருமுகங்களையு முள்ள சிவபெருமான து" என்று அருத்தம் உரைத்தார்.

அவைக்கட் குழுமியுள்ள புலவரொருவ ரெழுந்து, உல்ச குருவென்னும் புட்பகிரி சந்தானச் சுவாமின்!" திகழ் † தசம்= திடசம் எனப் புணர்தற்கு வீதி யாண்டையது? தோல்காப்பிய முதலிய விலக்கணங் களினுங் கண்டிலேம். ஆகலினதற்குச் செவ்வ னிலையளித்தருள வாவசியமா மென் றியம்பினர். அவர் விளையாட் டமையாரே யவையத்தாரு மஃதுண்மையேயென் றகமகிழ்ந்தனர். சுவாமிகள் புலவரைநோக்கி: "புலவீர்! அவ்வடியெம் விரக்கன்று. சான்றெ ரார்ந்திதா வெழுந்தருளி விளம்புஞ் சார்வார்தியாயி

யான குமாரக் கடவுள் நங்கனவில் எடுத்துக் கொடுத்தருளிய திருவாக்காகும் என்றார். புலவர் "சுவாமிகளே! தேவரீ ருரைப் பன வண்மையே யாக. இறைவனும் தான் விதித்த சங்கேதத் தைக் கடந்துசேற லன்றேன் மூதண்மைக் கிழுக்கன்றே. தேவரீ ரினறகூறுது இறைவனடி யென்ப தின்னைக்கேலா" என்றார். சுவாமிகள் அரங்கேற்றத்தை "நிறுத்தி காளைத் தினம் அதற்கு விடை கூறுதும். எத்துணைக் கடாக்கள் வரினும் அவையிற்றுக்கு விடை விசைக்க வன்றே விறைவன் விடை கொண்டான். அவ்வி டையுடையான் மகனெனை யுடைப்பாலுகவி னிதற்கு விடை கொ டுக்கு" மென்று எழுந்து அன்புடன் பூசை செய்து அற்றை யிரவி லே ஒன்று மருந்தாது,

"ஆறுமா முகப்பிரா னன்றி யிவ்விடை - வேறுரு தினையிலை மெய்ம்மை யீதெனத் - தேறின னவனடி சிந்தை செய்துளான் மாறிழி யருவிநீர் வழியுங் கண்ணினர்" ராகி மிக்க விசனத்துடன் கோயிற் றிருச்சந்நிதிக்கணே கிடந்தார். அன்பரிடராகற்றும் ஆறு முக நாதன் அவர்தஞ் சொர்ப்பனத்தி லெழுந்தருளி, "அன்ப னே வருந்தற்க. நாளைத் தினம் சோழ தேயக்கண் வசிப்பா னோர் புலவன் வரும். அன்னேன் கையின் வீரகோழிய னெனப் பெய ரிய இயல்நூல் இருக்கும். அதன்கட் சந்திப் படலத்துப் பதினெட் டாஞ் செய்யுளிற் நிகடசம் எனப் புணர்தற்கு விதியுளது" என்று மறைந்தருளினர். சுவாமிகள் விழித்தெழுந்து பரவச மடைந்து ஆனந்தக் கூத்தாடி, வழக்கப்படி பூசை புரிந்து அரங்கேற்றச சபைக்கண் சென்று நிகழ்ந்தனவற்றை யெல்லாஞ் சபையார்க்குத் தெரித்தார். சபையி லுள்ளா ரெவரும் ஆனந்த மடைந்து புலவரின் வருகையை யெதிர்நோக்கி யிருந்தார்.

அப்போது குமாரக் கடவுள் தம்முயார் கொண்ட வித்வக் கோலத்தைத் தாமும் கொள்வான் திருவுளங் கொண்டு "விதக்க

யோக சித்தர்வேண்டுருக் கொள்ளுமா போல்" என்று சிவஞான சித்தியார் தெரித்தவாறே யிசையானே யவ்வுருவங் கொள்வா ரா யினர். ஒரு திருக்காத்திற் புத்தகமும், மற்றோர் காத்திற் றண் டுந் தரித்து, ஒரு திருமுக மிரு திருக்கரங்க ளுடனே கட்டப்ப ரலே மார்பிற் பூணூலாகிய, விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்த திரு வுரு வினங்க, கண்டிகை கவினக்குமாக் கோட்டத்தை யண்மினார். ஆசங்கை கூறிய புலவர் பரிதியைக் கண்ட பங்கயம் போல யாவர்க் கும் முன்னதாக விரைந்து சென்று பணிந்து, "தேவரீர் யாண்டு னீர்? திருக் காத்துள்ள புத்தகம் யாது?" என வினவினர். புல வர் பெருமான் "யாஞ் சோழ தேயத் துள்ளேம். ஈண்டுக் கந்த புராண வாங்கேற்ற நிகழ்வு துணர்ந் தது சாண்பா னுவகையுடன் வந்தேம். கையினுள்ள புத்தகம் வீரசோழிய மாகும்" என்றனர். ஆசங்கைப்புலவர் அதனைவாங்கிச் * சந்திப்படலப் பதினேட்டாஞ் செய்யுளைக் கண்ணுற்று விதியிருத்த லுணர்ந்து பேரானந்த மூற் றார். சுப்பிரமணியக் கடவுளாகும் புலவரிகாமணி சபையிலுள்ளார் யாவரையுங் திருநோக்கஞ் செய்து "சபையீர்! நந்த மாசங்கை நீங் கிற்று?" என விளைய போது அவையும் ஆம் என முழங்கிற்று. "இனிப்புராணத்தை யாங்கேற்றுதிர்" என் றவமூர்த்தி திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். சபையார் யாவரும் என்றுமடையாத பெரு விம்மிதங் கொண்டு சுவாமிகளையும் புராணத்தையும் பன் முறை வீழ்ந்து வணங்கினர், புகழ்ந்தனர், கூத்தாடினர்.

முருகக் கடவுளின் திருவருளே யியற்று மெய்யனுடன் அரங் கேற்றுவிக்க விரும்பி, இருபத்து நான்கு சோபட்டத்து முதலிமார் களும் சுவாமிகளையும் புராண முறையினையும் யானைத் தந்தப் பல்

* சந்திப் படலம் பதினெட்டாஞ் செய்யுளாவது - மாணவகன் முன்னென்ப தா முயிர்ன்பினபு கல்லருமே - வேண்டுதுமாம் தாய்பதி னாத்திலெ டெண்ணிரண்டாய்த் தோன்று முடம்பின்றலாய் மன்னான் கிழமுதலாய் தாழ் - வாமுன்பி லொற்றுக் கழிவுமுண்டே" என்றது.

லக்கில் வைத்துச் சகல உபசாரங்களுடன் தாமே தாங்கி நகரில் செய்வித்து அரங் கேற்ற முடிப்பித்து வணங்கினர். ஆசிரியை யுரைத்த புலவர் சுவாமிகள் திருவடியில் வீழ்ந்து வணங்கி, "அடியேன் செய்த குற்றத்தை மன்னித் தருளவேண்டும்" என்று இரந்தனர். சுவாமிகள் "அன்பரே! நும்மால் ஒரு வித்தகம் பெருஞ் சிறப் படைந்தோம். எவர்க்கு முணரப்படா வொன்று வித்வகோலந் தாங்கி வரத் தரிசித்தோம். நீவிர் செய்த நன்றிக்கு யாமென் செய்ய வல்லேம்" என்று கூறினர்.

இங்ஙனங் கந்தபுராணத்தி னுண்மை கடைப்பிடித் தொழுகி யுலவிப்பான் வித்வகோலங் கொண்டு வரலாற் கந்தக்கடவுள் வித்வ மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

தோண்டை மண்டல சதகம்.

அந்தப் புரமு மறுநான்கு கோட்டகத் தாரு மொன்றுய்க்
கந்தப் புராணம் பதினா யிரஞ்சொன்ன கச்சியப்பர்,
தந்தப் பல்லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றி னர்தொண்டை மண்டலமே.

கந்த புராணச் சுருக்கம்.

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருளை தான
மேதகுவண் புனலருந்தி லைய மூய்ய
வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற் காஞ்சிக் குவட்டி லேறிச்
சலதியமு தினைகிகர்செக் தமிழ தான
சாதன்மழை பொழிந்தவருட் கொண்ட லான

---

* கச்சியப்ப னிருபாத மூச்சி வைப்பாம்.
ஐயுயுக்தர் வாக்து.
வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்
விரிந்தசிவா கமமுணர்ந்து மேன்மை பூண்டோன்

போதநிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
புனிதமிகு கச்சியப்ப முனிவ னென்னை
வாதமுறு புலவர்குழா மகிழ்ந்து போற்ற
மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டத்
தேதமறு சகாத்தமெழு நூற்றின் மேலா
யிலகுகந்த புராண மரங்கேற்றி னானே.

முன்னையோர் முத்திலத் தந்தணன்றன் பொருட்டா
முதல்வனொரு வித்துவான் வடிவமதைக் கொண்டான்
பின்னையுமோர் முத்திலத் தந்தணனுக் கென்றே
பிரான்மகளு மக்கோலம் பெட்புடனே கொண்டா
னென்னையி தநிசயமென் றெல்லவரும் பேசி
யேத்திடவே † சோழியத்தின் விதிகாட்டி யினைக்கத்
தனனவனே யழைத்ததொரு சகக்குரவன் மறையோன்
றன்சரண மெனகரணந் தாளுக வள்ளலே.

வித்வ மூர்த்தயே நமஃ

---

† இச்சரித்ததனாலே வீரசோழிய மென்னுநூல் கந்தபுராணத்திற்கு மூற்பட்ட தென்று தெரிகிறது. அன்னை மாகவுங் கிலர் குலோத்துங்க சோழன் வீரசோழ னென்பார் சிலர் அவனாணைக்கம் என்னூற்கு வரையி லருத்தவன் அவர் பொருட்டே செய்த வீரசோழிய காலிங்கன் சுகம் எழுதற்றி செய்யப்பட்ட கந்தபுராணத்திற்கு மேற் றென்னென வாசங்கித்த சிலருளர். அவர் வீரசோழன் காலத் தாற் வரலாறு எழுதற்கு மேலு மென்பதை, குலோத்துங்க சோழ னென்னும் பெயர் டையர் பலரென்பதன் கண்பே லங்கை வாசங்கிக்க வொருப் பட்டனென்ப தென்பது முதற் சுருக்கினின் முற்றுணர் மேலோர் எனவருள் சிவர்சாரியட்கு தூலமென்பதனிலு மெனும் வல்லார் வாக்கேலு மறைக. இப்பிரபந்தம்

189

ஐம்பத்து மூன்றாவது,

மாதிருகா மந்திரரூப மூர்த்தி.

"அப்பிரமேய மரூப மவ்வியத்தம்" என்று வேதங்கள் கோவித்தலாற் சுப்பிரமணியக் கடவுளுக்கு மந்திர வடிவும் மாயாவடிவுமில்லை யென்பதுண்மையாய் இருக்கவும் ஈண்டு மந்திர வடிவங்கற்பித்த லெற்றே வெனின் அறைதும்.

முக்கட் கடவுள் உண்மையே சரீரியல்லராயினும் மூவ்வகை யாண்மாக்களின் நியான பூசாநிமித்தம் மந்திராதி யுருவங்களையுடையாளாகக் கொள்க. எனவே யது கற்பனை வடிவ மென்று வாதுளாகமும், பௌட்கராகமும் முதலியன கூறுகின்றும். மந்திர மென்பதற்கு மந்=நினைத்தல், திர=காப்பாற்றல்; எனவே நினைப்பவனைக் காப்பது எனப் பொருள் கூறப்படுவ தல்லாமல் "மகாரச்சைவ மாயா மயத் திருசப்தஸ தாகோபவேத்" என்று அசிதவாகமங் கூறியவாறு, மா=மாயை. திர=தோண்டுவித்தல்; எனவே மாயையைத் தொண்டுவிப்பது மந்திரமாதும் என்றும் பொருள் விரிக்கப்படும்.

"சுத்தமாம் விந்து தன்னிற் றோன்றிய வாதலானும்" என்று சுவயாகாசித்தியார் கூறியபடி மந்திரங்கள் விந்துவினின்றுந் தோன்றுவனவாக. எனவே உலகத்திற்கு முதற்காரணம் விந்து மோகினி யாள் என மூன்றாகும். இந்த விந்துசத்தியே சுத்த மென்னும் அபர விந்து வென்றுஞ் சொல்லப்படும். சதாசிவருண்டாவினி யென்னும் பரவிந்துவே விந்துமுதலாய மூன்றுக்குங் காரணமா மென்றும், விந்துவின்கண் உண்டான சத்தப்பிரபஞ்சத்திற்குக் காந்தாரதக மென்றும், மோகினியி லுண்டாயவத்திருக்குக் கோரரூபக மென்றும், மகாளிலேயுண்டானவற்றிற்கு சூடாதகமென்றுஞ் சொல்லப்படும். அது,



மாதிருகாமந்திரமூர்த்தி.

வாஅகஂஂயி நிஂஂவொரஂஂகுஂஂரூஂஂஜவாதிகா!
உவாடா நஙுவிகா வெஐதிர்கூஂஂவிஐஉதிர்கோயோ!
விஂஂமஂஂ-ணாதிகஂஂமாஙம் வொஂஂஙிஂஂரா தூகஂஂயோ!

என்பது பௌட்காகமம் உரைத்ததை லுணர்படும். நிறக, சுத்த மாயை யென்னும் இப் பாவிந்துவினிட்டத்தே சுபபிர மணிய பெருமான்து ஞானசத்தியானது புதிய வாதின் உதிக்கும். அங்கா கத்தி லின்றுங் களங்க மில்லாத சற் காலத்துச் சந்திரன் போ லுக் குண்டலி வடிவாக அபாவிந்து தோன்றும். அவ்விந்துச் சத் தியினின் முங் சூக்காதனது இச்சையிலேல யம்பிகை யென்னும் விந்துக் காரிய சத்தி வெளிப்படும். அதினின்றும் வாமை சேட் டை இரௌத்திரியென்னு முச்சத்திகளு மூண்டாம். அவற்றுள வாமை சத்திரை செய்யும் குண்டலி வடிவாகவும், சேட்டை தண்ட யுருவாகவும், இரௌத்திரி பிரண்டுகையை கொம்பாகள் வடிவாகவும் விளங்கும். அவற்றி லிருந்து சலை விசலை அதிதை பாரிணை என்னு மன்குசத்திகள் தோன்றும். அவற்றி னின்றும் ஐங்தலே கள் காரணமாகச் சுக்குமை பைசந்தி மத்திமை வைகரி யென்னு மான்கு வாக்குகளுந் தோன்றும்.

சுக்குமை யென்னும் வாக்கைச் சாந்தி, சாந்தியதீதம் என்னு மிரு கலைகளும், பைசந்தியை வித்தியா கலையும், மத்திமையை பிர திட்டா கலையும், வைகரியை நிவிர்த்தி கலையுங் காரிய படுத்து மென்க. இங்ஙனமைக வாக்கும் ஆதிதன்மையனாக நிறுத்தென் ற்து மந்திர மறுப்பினுள் ணுமைக்கப் பட்டது. ஆங்குக் கண்டு கொள்க. இங்ஙனமாய நாத காரிய வாக்குகளினின்று சாங்த மும், அந்தசுகங்கள் சோடசத்தினின்று அக்காங்களுந் தோன்று மெறும். அகர் முதலிய தோற்றங்கள் படங் குடாளாறம் போல சுத்த மாயா காரியமன்றி யசுத்த மாயா காரியம் போலப் பிரணம

மல்ல. அகார வெழுத்திற்கு இரௌத்திரி சிரமும், வாமை முக மும், அம்பிகை தோளும், சேட்டை தண்டு வடிவான வுருவமுமாக விளங்கு மென்றறிக. இவ்வாறு அகார முதல் கஷிகார மிறுதியாக ஐம்பத்தொரு எழுத்துக்களாற் பிரிக்கப் பட்ட காத மென்று பெய ருள்ள சப்த மந்திரங்கள் ஆயிரத்து நானூற்று நாற்பத்தைந்து வகையாகவுண்டாயின.

அவற்றுள் மாதிருகா மந்திரமே யெல்லா மந்திரங்களினு மூயர்ந்தது. அம்மந்திரம் ஐம்பது சத்தர் பேதங்களோடும் அத்த ஹச் சத்தி பேதங்களோடும் விளங்கா நிற்கும். இம்மந்திரத்தையே மேளா மந்திர மென்னவும், மாலா மந்திரமென்னவும் வேதவிரோகமங்கள் கூறின. ஸோ தீர்காகா வஸவ் ஹ்ருதாணாம் ஹ்ரவ் ஹ்ருதாஹ வெஹிமா ஸ்ரீகிரஹ ஹாம்ஸ்ரூம் கெஷஸ்வாஹாஹ்ரவ் ஸெ ஹி, எனக் காமிகாகமம் மந்திரவதார்ப் படலத்திற் சுலோகங்களா னவ்வுண்மை தெளிக. இம்மந்திரமான ஐம்பத்தோரக்காங்களையும் சுப்பிரமணியக் கடவுள் தமக்கு வடிவாகக்கொண்டு விளங்குவர். அதன்விவரம் வருமாறு:—

க (அ) தலையாகவும், ஆ (ஆ) நெற்றி யாகவும், இ (இ) வலக் கண்ணாகவும், ஈ (ஈ) இடக்கண் ணாகவும், உ வலச் செவியாகவும், ஊ இடச் செவியாகவும், ஜ (இ) வலக் கபோல மாகவும், ஜா (இா) இடக்கபோல மாகவும், ஸ (இ) ஸா (இா) என்பன நாசிக ளாகவும், வா (ஏ) மேலுத்டாகவும், வை (ஐ) கீழுதடாகவும், ஓ ஔ என்பன மேலுங் கீழு முள்ள பற்களாகவும், கா (அம்) ஹா (அகா) என்பன முசுளங்களாகவும், க ஐ ழ வ ஐ என்பன வல த்திருக் காங்களாகவும், ஐ ஹ ஜ ஸ ஷ என்பன இடத் திருக்

ங்களாகவும், ஓ ஔ ஆண்ணன்பன் வல்ப்பாதங்களாகவும், தய
ஆடம என்பன இடப்பாதங்களாகவும், வ என்னு மெழுத்து வய
ருகவும், ஹ ஷ என்னு மெழுத்துக்கள் மூறையே வலப்பாரிசம்
இடப்பாரிசமாகவும், ஜ கந்த மாகவும், ஜ இருதய மாகவும், ய ர
ல வ ஸ ஷ ஹ என்னும் எழெழுத்துக்களுஞ் சத்த தாதுக்களா
கவும், ஹ ஆன்மாவாகவும், ஷ ஸ உபசாரங்களாகவுந் திருவரு
வங் கொண்டு சொற்பிரபஞ்சங்களை யெல்லா மியக்கா நிற்பர் என்க.

இவ்வுண்மை தெரித்தற் கன்றே காத ரூபத்தை யறிக்குள்
சேவலைக் கொடியாகப் புதுச் சந்நிதிப் பெருமான் வைத்தருளிய
தென்க. இம் மாதிருகா மந்திரங்களை யுருவமாகக் கொள்ளலால்
வரைபக வெறிந்த சாவணக் கடவுள் மாதிருகா மந்திர மூர்த்தி
யாயினர்.

காமிகாகமம்.

ஜம்வெள் காஞ் நாசி ஹ்ரி ஊஹ் ஸோ நீர் வை ஸ்ரீ
வெள் ந வ கஷி சி ந ம் சீ ர் ஞ்ஞி ஜ ஷி க் டெ ர் ய ஞ்ஞ
கி ர் கொ ம் வா ம் வை ஸ வம் தி யம் வ்
ஸ் தோ டம் தூ வை கோ டி ர் தை வை வ் கோ வை வ் ஷ்
வா ஷ் ர் ளை ஸி ர் டெ டெ வீ வ் ஹ் வா ஸ் ரீ வ் ஸ் கி கா

வாதுளாகமம்.

வொ ஸ் ரீ ஹ்ரை ர் ஸ் ரை வ் ர் நி ரா ஸ் ஸ் தி ணை ர் தை வா

ய் ர் வை வ் ஜி ஸ் தி தா ய நி ஷ் ஷ் வ் ஹ் கை ம் வ் வெ ஸ்

192

பௌட்காரகமம்.

மாதிருகா மந்திரரூப மூர்த்தயே நமம்


ஐம்பத்துநான்காவது,

குகபரப்பிரம மூர்த்தி.

அகாதி மல முத்த பதியாகிய அறுமுகக் கடவுட்கு நால்வித் குகன்எனனும் திருநாமம் படிக்கப்பட்டுளது.பலமலகோறுமுள்ள குகைகளிற் றங்கலானும், இரகசியப் பொருளாய் வினங்கலானும் அத் திருநாமம் போந்த தென்ப. வெளியாகிய அண்டத்தினுள்ள குகைகடோறுந் தங்கியருளு லோர விசேட மன்றும். பிண்டமாகிய தேகங்களினுள்ள குகைகடோறும் நிகழ்தலே மிக்க விசேடமாம். அதனனன்றே வேத சிவாகமங்க ளெல்லாங் குகன், அங்குட்டவடிவன் எனப் பலவாறு கூப்பிடாகின்றன.

பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனையோ ரைவைந்தாய் மாருதமூ-மேதகுதீர்ப்
பத்தாகு நாடிகளும் பப்பத்தாம் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடிம்பு.

என இதை நுணுக்கத்தார் கூறியாங்கு முத்தியை யடைதற்குரிய விச் சரீரம் பூதங்களானும் பொறி முதலிய வற்றானும் பரிணமித் தினனதாகும். அவ்வுடம்பு தொண்ணூற்றாறு அங்குல வளவுடைத்



குகபரப்பிரம்ம மூர்த்தி.

193

தாய், மூப்பா னிரண்டு உறுப்புக்களை யுடையதாய் இருக்கும். அதன்க ணுள்ள நாடிகளும் உரோமங்களும் தனித்தனி மூன்றரைக் கோடியாகும். பறவை மூப்பத்திரண்டு கால் கை நகங்கள் இருபது. விரியும் ஆழாகரு. உடலினக ணுள்ள பித்தம் உழக்கு. மிடற்றுக் கபம் உரியுடன் காற்படி. நிணம் இருபது தொடி. மேதை ஐந்து தொடி. தசை நாழி தொடி. இளைய வீரத்தமும் இறுகிய வீரத்தமும் மூன்று தொடி. ஆயுள் னளவு பன்னிரு தொடி. உரோம முதலாக வெல்லாவற்றையுஞ் சேர்த்து அளவிடின் ஐயிரண்டு தொடியாதும்.

இத்தகைய சரீரத்திலே சிவாக்ன பரமாண் மாசிகள் விராயித் திருப்பாராயினும் இதயம் என்னுந் தானமே யவர்க்கு முக்கிய தானங்களாம் என்று வேத சிவாகமங்கள் கூறுகின்றன. இவ்வுண்மை பற்றியன்றே ஆயுர்வேத முதல்வராகிய தன்வந்தியாரும், "இரத்தங் கபம் மென்னு மிவற்றின் தெளிவா னமைந்ததும், அவற்றைத் தெளிவுச வசயலதும் இருதய மென்க. அதுவே முக்கிய சேதனத்தான மாகுமென்று சுவ்ருதத்தில் "மொணிக கமவு வாடிஜம் ஹ்ருடயம் விஜ்ஞடண ஸெதநாஸ்தாநம்" என்பதன் லுணர்த்தினர். இவ்விருதய கமலம், தகரம், தேகாலயம், ஆலயம், சதது, பரம், மகத்து, ஆகாசம், வியோமம், இரண்டய கோசம், அந்தப்புரம், விவிக்தம், புண்டரீகம், குகை எனவுங் கூறப்படும்.

இருதயக் குகையாவது-தாமரை மூகுளம் போன்றதாய் ஓர்து துவாரத் னுள்ள செங்நிற மூலட்தான மாயிச கண்டமாயத் தலை கீழாகத் தொங்குவதாம். "பத்மகோச ப்ரதீகாசம் ஹ்ருதயம் சாப்ய தோ முகம் (தாமரை மொட்டுப் போன்று கலிக்ழாகத் தூங்குவ திதயமாம் என்று மகாபாரதங் கூறிற்று. இருதயகமல மெனவு மகுகுகை சர்ணிகையுட னுண்டாயிற்று. எல்லா வுயிர்களின் இத

யும் வாழைப் பூப்போன்று விளங்கும். அவ்விருதய நடுவண் கர்ணிகையுடன் எட்டிதழ்களுள்ள பதும பிருக்கின்றது. இருதயம் ஒரு காலளவும், கமலம் காலங்குலப் பிரமாணமுமாகும். உந்திக்கு மேல் ஏழங்குலப் பிரமாணத்தில் அந்தத் தாமரை காணப்படும். அந்நாளத்திற் ருவாரா மொன்பது உள்ளன. அதன் கண்டு பக்கமும் முட்போன்ற வோர்வகைச் சவ்வு விளங்கும். இருதய கமலக் கர்ணிகை பெருவிரற் கணுவுக் கொப்பான தனியுள்ளதாயக் கேசரத்துடன் கூடியிருக்கும். "அக் கர்ணிகையின் மாட்டுச் சூரியனும், அவன் நடுவிற் சந்திரனும், அவர் நடுவில் அக்கினியும், அவர்கள் நடுவின் மகேசுர மூர்த்தியும், அவர் நடுவிற் சுப்பிரமணியக் கடவுளென்கிய சுகனும் விளங்கியிருப்பர்" என்று நிகுவாசுகாரிகை யென்னும் முதல் கூறுகின்றது.

ஆவிர்பூதலிய சத்திகளின் இருதயக்க ணுள்ள அகாயத்தில் விளங்கும் விசயை, சென்மிசய, அம்சுசமஞ்ஞர, சிருஷ்டி, மதனை, பத்தினி, மோகனி, மாயை, மோகினி, போதினி யென்னுக் தக கலைகளையும் பிரேரித்து சுற்று மென்று கத்துகாலோத்தர மென்னு மாகமங் கூறு நிற்கும். இவ்விருதய கமலமாகிய குகைக்க ணிருக்கும் வெள்ளே பாவியோமம், சிதம்பரம், சிதாகாசம், தகராகாசம், சிறமபரம், நாதமபரம், அந்தராகாசம் என்றற் றொடக்கத்தி வாகச் சுருதிக ளுரைக்கு மென்பது. அறாதுகவின்னே குசயப் பிரமாகிய புருடன் அங்குட்டப் பிரமாணம் உடையவன் என் அங்குஷ்டமாத்ர புருஷோந்தராத்மா ஸதாசநாநாம் ஹிருதயே ஸந்நிவிஷ்ட: என்று யசுர்வேதசாகையும், "அங்குஷ்டமாத்ரோ ரவித்துல்யரூப: (பெருவிரவளவுள்ளன் சூரியனைப் போன்றவன்) எனவிருக்குவேத சாகையும் கூறின. இங்ஙனமுள்ள தகராகாச மெனப்படுங குகையி னிடத்தே இன்புவடிவான குகப்பெருமான் இல்லாவிடில் எதுதான் அசையும், எதுதான் உயிரோடிருக்கும்



சந்தான வரப்பிரியமூர்த்தி.

196

றத் தனக்குப் பிள்ளைக ளில்லாம லிருத்தலால் வருத்த முற்றாள். ஜயா வம்மே வடி வாயிணு மீ வாதெண ணெசகாரு ஜயதி வாதெணா நந்தி யிஸு வெ நாவாதவு வெ கொஹி எனவரூஉம் வேதவசனங்கள் சற்புத்திரப்பேறு உத்தம லோக சாதகமா மென்றுரைத்தனவே. "மங்கல மென்ப மனை மாட்சி மற்றத - னன்கல நன்மக்கட் பேறு" என்றாங்குப்புத்திரரில் லையே யில்வாழ்க்கையாற் பயனென்று மில்லை.

ஆகலிற் கிருகத்தாச்சிரம மாகிய இல்லற வாழ்க்கைக்குச் சிறந்த ஆபரணமாகவுள்ளது புத்திரப் பேறன்றே? புத் என்னுங் கொடிய காக வாதனையினின்றும் நீக்கிக் காப்பது சந்தான மாதலால் அது பெரிய வாழ்க்கையும் வாழ்க்கையோ? அறிவறிந்த மக்கட் பேற்றைப் பார்க்கினுஞ் சிறந்த பேறியாது? எவ்வகைப் பொருளையுடைய வாயினும், புத்திரப் பேற்றையுடைய ராகாரேல் அவர் யாதேனு முடையராவாரோ? இவை நோக்கியே முனிவர்கள்யாவரும் இல்லற வாழ்க்கையி னின்றுர். பராசரர் வியாசரையீன்றதும், செந்தமிழ் முனியாகிய அகத்தியர் சித்தமுனியைப் பெற்றதும், மிருகண்டேயமுனி மார்க்கண்டேயரை யுயிர்த்ததும், சிலாத முனிவர் செம்பேசுரரை யுயிர்த்ததும், வியாசர் சுகரை யீன்றதும் இவ்வுண்மைக் கருத்துப் பற்றியே யென்று கவலைக் கடலுளாழ்ந் திருக்கையில் நாரத முனிவர் வந்தார்.

அவரை வணங்கி மகதியாழுடைய தலைவேட்டசே! அடியாள் கொண்ட கவலை தீர்தற்கு மருந்தியாது என்று கேட்டனள். அவர், "அம்மையே! நீ நீச்சேந்தூர் சென்று குமாரக் கடவுளை நோக்கி, சுதபூசை விரதத்தை அநுட்டிப்பாயாக" என்று, அதன் விதிகளெல்லாம் உபதேசித்துச் சென்றார். அவ்வாறே அதிதியென்பாள், கணவராகிய காசிய முனிவரி னநுமதி பெற்றுச் சேலை

இவர்கள் லோகபாலகர்கள், லோகபாலர்கள், திக்விக்கிரமன், ஆதித்தன், திவாகரன், அஸ்விசமாலி என்னும் பன்னிரு பிள்ளைகளையும் பின்னர் இவர் மூப்பத்து மூக்கோடி தேவர்களுள்ளுஞ் சிறந்தவராஞ் அதிதியின் புத்திரர் என்மையால் ஆதித்தர் ஆதித்தியர் என்வழங்கப்பட்டார். பின்னர் மேலுலகத்திற்கு அதிபதியாகிய இந்திரனைப் பெற்றனள். அதன் பின்னர் விட்டுணுவாகிய உபேந்திரனையும் பெற்றனள். அவர்களாலே அதிதி பெறற்கரும் மகிழ்வையடைந்தனள். இங்ஙனம் சந்தானம் வேண்டினவர்களுக்கு மகிழ்வுடன் அளித்தலாற் சந்தான வரதமூர்த்தி யாயினர். இதற்குமேற் கோள் திருச் செந்தூர்ப் புராண முதலிய நூல்களிற் காண்க.

சந்தான வரத மூர்த்தயே நமஃ

ஐம்பத் தாறுவது.

காமாசார தேவமூர்த்தி.

மக்கட் கூட்டத்தவரிலே அடைதற் பாலன வாய உறுதிப் பொருள்கள் அறம் பொருள் இன்பம் வீடு எனனும் நான்குமே. இவையிற்றை முறையே தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என் பர் வடநூலார். காமம என்னும் மொழி கேட்டுக் காமம் தீது என்றலும், களவு என்னுஞ் சொற்கேட்டுக் களவு தீதென்றலுமாகாது. எனனை? "பொய்யும்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த-நன்மை பயக்கு மெனின்" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும் கூறினாராகலின். ஈண்டுக் கூறப்பட்ட காமம், பொதுமகளிரிடத்தும் பிறன் மனைவியர் முதலாயினோரிடத்துஞ் சென்று கூடுங் கேட்டிற்குக் காரண மாகிய தூர்த்த வொழுக்கத்தையன்று. இது

191



காமாசார மூர்த்தி.

எல் வொழுக்க மெனின் உலகின்கண் இல்லறம் கடத்தற் கேதுவா கிய காமம் எனக் கொள்க. இதுபற்றியன்றே ஒல்காப்பெருப்புகழ்த் தொல்காப்பியனாரும்,

இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மலைறயோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
ளுறையமை நல்யாழ்த் துணையோ ரியல்பே என்றார்.

இத்தன்மையாகிய காமம் என்பதும் இன்பம், அறம் பொ ருள் என்னும் இரண்டின் பிரயோசன மாகு மன்றி, மேலாயுள்ள வீட்டின்பத்தை ஒவ்வா தென்று இவ்வின்பத்தை வெறுத்து, அத னையவாவியடைதற்குங் காரணமாகும். அதனாற்றான் இதுசிறந்தது. இக்காண்கு உறுதிப் பொருளையும் "உலகெலா மாகி வேறு முடனு மாய்" நிற்கும் முழுமுதற் பொருள்கொள்ளாக்கால், உலகத்தினிடத் தும் அவை நிகழாவாம். உமாதேவியாரைச் சிவபெருமான் பிரிந்து ஓர்கணம் யோகத் திருந்த போது, உலகத்திலுள்ள வுயிர்கள் பாவும் ஈருடல் முயங்குங் காமாசை யில்லாமல் வருந்தியதும், அது கண்ட பெருமான் திருமணஞ் செய்து இறைவியை இடப்பாகத்தில் வைத் தருளிய காலத்து அவை யொன்றை யொன்று விருப்பிச் சேர்ந்த தாகக் கந்தபுராணத்திற் சொல்லப்பட் டிருக்கின்றது.

இவ்வா றிருக்க, அறம், பொருண்முதலிய நாற் பொருள்களுவ வீடு என்பது சித்தையுழுழியுஞ் செல்லா நிலைமைத் தாகவின் அது உசைக்குஞ் செயலுக்கும் அடங்காதாகும். இதனைத் தக்கினை மூர்த் தியாயிருந்து குறியாற் காட்டியும், பொருள் வகையைப் பிரமனுக்கு ப்பிள்ளையார்க்குப் புதல்வராகச் சென்று காட்டியும், மதனைக்கண் விழியில விற்றும், மாணிக்கம் விற்று முணர்த்தியும் லவ்வருமான் றின்றார். இறைவியோ காஞ்சியி லிருந்து அறத்தினை வளர்த்தருளி

199

[illegible] எம் பெருமானுடைய [illegible]

அக்காமம் களவு, கற்பு என இருவகைப்படும். அவற்றுட் கற்
பென்னும் ஒழுக்கத்தை இந்திரன் மகளாகிய தேவசேனை என்னும்
[illegible] அக்கினி பகவன் விவாகஞ் செய்தமையினாலும், களவு
என்னும் ஒழுக்கத்தை வேடர்மகளாகிய இலவலி கார்டி என்னும்
[illegible] காட்டி
யுள்ளார். இக்களவிற் புணர்ச்சி கந்தருவ மணம் எனப்படும். அஃ
தாவது தருமதருக்கன்னியருந் தம்முள் எதிர்ப்பட்டுக்கண்டு
இயைந்த போலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது.

[illegible]
[illegible]
[illegible]

இனிக்களவு கற்பென்னும் இருகைகோளை மூலகமாகிய
[illegible] எம்பெருமான், புணர்ச்சியைக் களவென்னும்
பிரிவைக் கற்பென்னும் கூறும் ஒழுக்கத்தை விழுப்பமோடு உணர்த
தலைவன், மலைநாடாகிய தென் திசைத் திசையிலே, யாவரும்
அறிந்தறி கிய ஒருசோசனை யளவுகாறும் யாரையும் மணஞ்செய்யும்
வகையை யுடைய கோடியென்னுமலை விளங்குஞ் சோதி மண்டி
லத்தையுடைத்து, ஒளிருந் தெய்வ மாணையம்மையோடும் வள்
ளியம்மையாரோடு கூடியிருந்து, காமஞ் சிறிது மில்லாத கடவு
ளாயிருந்தின் உலகியொருட்டாக, களவுக்கும் கற்புக்கும் உரிய
[illegible] புல்லி, புணர்ச்சி விதும்பல் முதலிய நூறு
[illegible] காறு தாவிற் கூறிய ஓசாரங்களை யெல்லாம்
[illegible] செய்தருளுதலாற் காமசார தேவ
[illegible]

Fig. 1. Ms. Or. 1404, f. 1.